Registered as a NewsPaper

பக்கங்கள் 16

# ஈழநாதம்

Eelanatham வெள்ளிநாதம்

விலை:12


நாதம் 13 திருவள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 17 02 - 08 - 2002 வெள்ளிக்கிழமை ஓசை 165

லாலா சோப் சன்சயின் சோப்

எமது வன்னி மண்ணில்
எல்லா இடத்திலும்
சகல கடைகளிலும்
விற்பனையாகின்றது.

ஒன்றின் விலை - 13.00

லாலா சோப் தொழிலகம்
அச்சுவேலி










# கடற் பிரயாணம் குறித்த இறுதி முடிவிற்கு வன்னியில் ஹோவ்டே - புலிகள் சந்திப்பு

## நேற்றும் இறுதி முடிவு எட்டப்படவில்லை



கண்காணிப்புக் குழுத்தலைவர் ஹோவ்டேயை வடபோர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் கைலாகு கொடுத்து வரவேற்கின்றார்.



கண்காணிப்புக் குழுவினரோடு பேச்சில் ஈடுபடும் புலிகள் தரப்பினர்

(நமது நிருபர்)

**நேற்றையதினம் கிளிநொச்சியில் அரசியல்துறைப் பொறுப்பாளர், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி, வடபோர்முனை கட்டளைத் தளபதி ஆகியோர் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரொண்புருவ் ஹோவ்டேயை சந்தித்துப் பேச்சு நடத்தினர். புலிகளின் சுதந்திரமான கடற்போக்குவரத்துப் பற்றி நேற்றைய சந்திப்பில் பிரதானமாகப் பேசப்பட்டது. ஆயினும் இது இறுதி முடிவு எட்டப்படவில்லை. இது குறித்து விரைவில் அரசுடன் பேசி தீர்வு கண்டு முடிவு தெரிவிக்கப்படுமென கண்காணிப்புக்குழுத் தலைவர் மீண்டும் உறுயளித்துள்ளார்.**

நேற்றைய தினம் காலை 10.30 மணிக்கு கிளிநொச்சிக்கு வந்து சேர்ந்த கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹோவ்டேயை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கடற்புலி களின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, வடபோர்முனை கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஆகியோர் வரவேற்று பேச்சு நடத்தினர்.

இது தொடர்பாக அரசியல்துறைப் பொறுப்பாளரிடம் கேட்டபோது புலிகளின் சுதந்திரமான கடற்போக்குவரத்துக் குறித்து பிரதானமாக இச்சந்திப்பில் பேசப்பட்டதாகவும் இன்னும் ஓரிரு விடயங்களில் அரசு இணக்கப்பாட்டிற்கு வராமையினால் இறுதிமுடிவு நேற்று எட்டப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

மேலும் கண்காணிப்புக் குழுத் தலைவர் இது குறித்து அரசதரப்புடன் பேசி விரைவில் ஒரு இணக்கத்திற்கு வருவதாக உறுதியளித்துள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

இத்துடன் முகமாலை, நாகர்கோவில் பகுதிகளில் இராணுவக் காவலரண் தொடரை முன்நகர்த்தியிருப்பது பற்றி கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு நேரடியாகப் புலிகள் முறையிட்டதாகவும் இராணுவத்தினரின் இது போன்ற உடன்பாட்டு மீறலை நிறுத்த முடிந்திருந்தால் கடந்த வாரம் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக அசாம்பாவிதம் நிகழாதிருப்பதற்கான சூழல் ஏற்பட்டிருக்குமெனவும் வலியுறுத்தியிருப்பதாகத் தெரிவித்தார்.

இராணும் முன்னரங்க காலரண்களை முன்னகர்த்தி யிருப்பது பற்றி யாழ். பிராந்திய இராணுவத் தளபதி மற்றும் புலிகளின் இராணுவத் தளபதிகள் யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு ஆகிய முத்தரப்புச் சந்திப்பின் மூலம் இது பற்றி பேசித்தீர்க்க இணக்கம் காணப்பட்டிருப்ப தாகவும் அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

# போர்க்கைதிகள் விரைவில் பரிமாறப்படலாம்

இருதரப்பு போர்க்கைதிகளை பரஸ்பரம் விடுவிப்பது பற்றி இருதரப்பும் பேச்சொன்றை நடத்தியுள்ளதாகவும் அதற்கான பிரயத்தனங்கள் எடுக்கப் பட்டுள்ளன என்றும் புலிகள் தரப்பினரிடமிருந்து தெரிய வருகின்றது.

போரின் போது இருதரப்பி னாலும் சிறை பிடிக்கப்பட்ட யுத்தக் கைதிகளை இச்சமாதான சூழலைப் பயன்படுத்தி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக இக் கைதிகள் பரிமாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படு வதாக புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை கடந்த காலங்களில் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைக்கும் வகையில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் பணிப்பிற்கமைய பல போர்க் கைதிகளை விடுதலைப் புலிகள் ஒரு தலைப் பட்சமாக விடுவித்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி

## ஐ.நா அறிக்கையும் சில பதிவுகளும்

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்ட மனிதமேம்பாட்டு அறிக்கை இப்போது முதன்முறையாக, ஏற்கனவே எல்லாருக்கும் தெரிந்த உண்மையொன்றினை உத்தியோக பூர்வமாக பகிரங்கப்படுத்தியுள்ளது.

சர்வதேச நாணயநிதியம், உலகவங்கி ஆகிய உலகநிதி நிறுவனங்களின் பணக்கார நாடுகளே ஆதிக்கம் செலுத்துகின்றன என்பதே அந்த உண்மையாகும்.

இந்த உண்மையை ஒரு குற்றச்சாட்டுப் போன்றே ஐ.நா.சபை தனது மேற்குறித்த அறிக்கையில் கூறியுள்ளது. காலங்கடந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை இச் சபை தெரிவித்துள்ளது.

ஐ.நா.வின் இக்கருத்து அல்லது குற்றச்சாட்டு என்பது ஒரு புதிய விடயமேயல்ல, ஐ.நா.சபை உருவாக்கப்பட்ட பின்னர் படிப்படியாக ஏழ்மையும், வறுமையும் மிகுந்து, வளர்ச்சிகுன்றி, பொருாதாரத்தில் நலிவடைந்த நாடுகளை நாகரிகமான முறையில் ஆக்கிரமித்து பொருளாதார பலத்தால் அடக்கி அந்த நாடுகளை தமது எடுபிடிநாடுகளாக வைத்திருக்க வசதிமிக்க நாடுகள் திட்டமிட்டு உருவாக்கியதே உலகவங்கி, சர்வதேச நாணயநிதியம் போன்ற அமைப்புகள்.

வளர்முக நாடுகளுக்கு உதவி செய்தல் என்ற கொள்கையை வார்த்தை ரீதியாக மட்டும் பிரகடனம் செய்து அந்தநாடுகளை நிரந்தரமாகவே என்றைக்கும் வளர்ந்து விடாத வளர்முக நாடுகளாக இருக்க வேண்டும் என்ற தொலைநோக்குடன் கூடிய உள்நோக்கத்துடன் தான் இந்த அமைப்புக்கள் ஏழை நாடுகளுக்கு தமது கருணைக் கரங்களை (!?) நீட்டிவந்துள்ளன.

இரண்டாம் உலகயுத்தத்தின் முடிவில் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையானது, அதன்பின்னர் பனிப்போர் காலகட்டம் தொடர்ந்த போது வசதிமிக்க பணக்கார நாடுகள் ஏழைநாடுகளின் மீதான பொருளாதார ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மெல்ல மெல்ல தீவிரமாக்கின.

இரண்டாம் உலகப்போரினாலும், ஆசிய, ஆபிரிக்க, மற்றும் வளம்குன்றிய லத்தீன் அமெரிக்க நாடுகள் மீதான நீண்ட, நூற்றாண்டு கால ஐரோப்பிய மற்றும் மேற்குலக நாடுகளின் காலணித்துவ ஆக்கிரமிப்பு ஆட்சி முறையினாலும் மிகமோசமாக ஈவிரக்கமற்ற வகையிலான பொருளாதாரச் சுரண்டல்களாலும் நலிந்து போயிருந்த வறியநாடுகளை, வட்டொட்ட வறுகியபின் 'சுதந்திரம்' வழங்கி தமது போலிப் பெருந்தன்மையை வெளிக்காட்டிய பொருளாதார மற்றும் இராணுவ பலம் கொண்ட நாடுகள் தொடர்ந்தும் அந்த நாடுகளுக்கு - அவற்றின் வளர்ச்சிக்கு உதவி செய்கிறோம் என்ற போர்வையில் மற்றொரு வகையிலான புதியவகை 'சுரண்டலை' ஆரம்பித்தன.

உதவி செய்வது என்ற பெயரில் ஆரம்பமான இந்த 'சதித்திட்டம்' இந்த ஐம்பதாண்டு காலத்தில் ஒரு விசமத்தனமான விஸ்வருபத்தை எடுத்து வளர்முகநாடுகளை அச்சுறுத்திநிற்கிறது..

உலகவங்கியும், சர்வதேச நாணயநிதியமும்,ஏழை நாடுகளுக்கு நிதி உத்வி செய்வதுடன், அந்தந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களை வகுத்துக்கொடுத்தல், என்ற வகையில் அந்த நாடுகளின் நிர்வாகச் சுதந்திரத்தினுள் தலையீடு செய்து தமது எஜமானர்களின் அபிலாசைகளுக்கேற்ப ஆக்கிரமிப்புக்களை மேற்கொண்டு வருகின்றன.

வெளிநாடுகள் மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது இந்தப் பணக்கார நாடுகளின் 'கருணைக்கு' காத்திருக்கும் நிலையையே இந்த உலக நிதிநிறு வனங்கள் ஏற்படுத்தியுள்ளன.

தாராளமயமாக்கல்,தனியார் மயமாக்கல் உலகமயமாக்கல் என ஏழை நாடுகள் ஏற்றுக்கொள்ளவே முடியாத கோட்பாடுகளைத் திணித்து அவற்றை நிரந்தர பிச்சாபாத்திரம் ஏந்திகளாக இருக்கவைக்கும் கைங்கரியத்தையே இந்த பணக்கார நாடுகளின் முகவர்களாகச் செயற்படும் உலகவங்கியும், சர்வதேச நாணயநிதியமும் மேற்கொண்டு வருகின்றன....

இராணுவ ரீதியிலான ஆக்கிரமிப்புக்களை விடவும் இந்த வகையான இராஜதந்திர ரீதியிலான ஆக்கிரமிப்பு வறிய நாடுகள் மீது பணக்கார நாடுகளால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

'உலகளாவிய ரீதியிலான முடிவுகளைப் பணக்கார நாடுகளே எடுக்கும். ஆனால் , ஏழை நாடுகள் தங்களது மக்களை நேரடியாகப் பாதிக்கும் பிரச்சினைகளில் அதிகமாக ஈடுபட வேண்டும் என்று ஐ.நா. அறிக்கை கூறுவது அர்த்தமுள்ளதாக இருந்தாலும் அதை எப்படிச் செய்வது என்ற ஆலோசனையை அது கூறப்போவதில்லை.

ஏழை நாடுகளை அச்சுறுத்தும் வர்த்தகக் கட்டுப்பாடுகள் மற்றும் கோட்பாடுகள், விவசாயிகளுக்கான மானியக்குறைப்புகள், பொருளாதார வளர்ச்சியின்மை, ஆபிரிக்காவை அச்சுறுத்தும் எயிட்ஸ் நோய் இவையெதுவுமே இந்த நிறுவனங்களுக்குப் பிரச்சினையாகத் தெரிவதில்லை எனக் கூறும் அந்த அறிக்கை பணக்கார- ஏழைநாடுகளுக் கிடையேயான இந்த இடைவெளி உலகம் சரியான பாதையில் செல்கின்றதா என்ற சந்தேகத்தை எழுப்புகிறது என்றும் தெரிவித்துள்ளது.

ஐ.நா. தனது அறிக்கையில் எதைத்தான் கூறினாலும், அதுவும் கூட அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், ஜப்பான், சவூதிஅரேபியா, ஜேர்மனி, ருஷ்யா போன்ற நாடுகளின்- ஆதிக்க வ்லுக்கொண்ட நாடுகளின் அபிலாசைகளுக்கு தாளம் போடும் அமைப்பாகத்தான் செயற்பட்டு வருகிறது என்பது பின்தங்கிய நாடுகளுக்கு தெரியாத விடயமல்ல.

## பதக்கம் வழங்களில் பாரபட்சம் - படைத் தலைமைக்குள் கருத்து முரண்பாடு

இராணுவ அதிஉயர் விருதுகளிற்கான பதக்கம் வழங்குவதற்கு அதிகாரிகளை தெரிவு செய்வதில் சிறிலங்கா இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் லயனல் பல்லேகல்ல, மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா ஆகியோர் தமக்கு வேண்டியவர் களை தெரிவு செய்துள்ளார்கள் என சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் கடும் சீற்றமடைந்துள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் போர்க்களத்தில் திறமையாக செயற்பட்டவர்களிற்கு இவ்விருதுகள் வழங்கப்படுவது வழமை. தேர்வு மூலம் இவ்விருதிற்கானவர்கள் தெரிவு செய்யப்படுவதாகவும் ஆனால் இம்முறை தேர்வு சரியான முறையில் மேற்கொள்ளப் படவில்லையெனவும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் விசனமடைந்துள்ளனர்.

இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் லயனல் பல்லேகல்லவும், மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திராவும் தமக்கு விசுவாசமானவர்களுக்கு வழங்க முற்படுவதாகவும் சண்டைகளின் போது சாதனை செய்தவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் மிகத்தீவிரமாக சண்டைகள் நடைபெற்றபோது திறமையாக செயற்பட்டவர் என கூறப்படும் ஜானக பெரேரா, சரத்பொன்சேகா போன்றவர்களிற்குக் கூட விருது வழங்கப்படவில்லையெனக் கூறப்படுகிறது.

இதன் காரணமாக சிறிலங்கா இராணுவத்தின் உயர் அதிகாரிகளிற்கும் சிரேஷ்ட அதிகாரிகளுக்குமிடையில் கருத்து முரண்பாடுகள் எழுந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## படைக்கட்டமைப்பில் விரைவில் மாற்றம்

சிறிலங்காப் படைத்தரப்பின் கட்டமைப்பில் மிக விரைவில் பாரிய மாற்றம்கொண்டு வரப்படவுள்ளதாக தெரியவருகிறது.

கூட்டு ஒருங்கிணைப்புத் தளபதியாகவிருந்த ரொகான் தழுவத்த பிரேசில் தூதுவராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து அப்பதவிக்கு புதிய ஒருவரை தெரிவு செய்வதில் இழுபறி நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பதவிக்கு ஒருவரைத் தெரிவு செய்வதில் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்குமிடையில் கருத்து வேறுபாடுகள் காணப்படுவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## சமாதான நடவடிக்கைகளை குழப்ப அரசிற்கு எதிரான சக்திகள் முயற்சி

சிறிலங்கா அரசும் விடுதலைப்புலிகளும் மேற்கொண்டு வரும் சமாதான நடவடிக்கைகளை குழப்ப பல சக்திகள் முயன்று வருகின்றன.

விடுதலைப்புலிகளிற்கும் முஸ்லிம் காங்கிரசிற்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட உடன் படிக்கையை சிதைக்கும் நோக்கத்துடன் முஸ்லிம் காங்கிரசிற்கு எதிரான தீவிர இஸ்லாமிய அமைப்புக்கள் மறைமுகமான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கொழும்பு செய்திகள் கூறுகின்றன.


பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி அரசிற்கு எதிரான சக்திகள் இவ்வமைப்புகளிற்கு பின்னணியிலிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## பொதுசன ஐக்கிய முன்னணி மீது சீறியெழும் ஜே.வி.பி.யினர்

சமாதான நகர்வுகளுக்கு எதிரான செயற்பாடுகளில் பொதுசன ஐக்கிய முன்னணி தீவிரம் காட்டவில்லையென குற்றம் சாட்டி ஜே.வி.பி.யினர் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு எதிராக தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர்.

சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தனக்கு ஏற்பட்டுள்ள பல்வேறு நெருக்கடிகளிலிருந்து தன்னைப் பாது காத்துக்கொள்ள பிரதமர் ரணிலுடன் ரகசியமான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகின்றார் என ஜே.வி.பி.யினர் சனாதிபதி மீது குற்றம் சாட்டியுள்ளனர்.

கடந்த ஓரிரு வாரங்களாக பொதுசன ஐக்கிய முன்னணிக்கும் ஜே.வி.பி.யினருக்கும் இடையில் விரிசல் ஏற்பட்டுள்ளதாக அரசியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள்.



# பிறமுக அறிமுகம்

## ரத்தின சிறீ விக்கிரம நாயக்கா
(முன்னாள் சிறிலங்காப் பிரதமர், இந்நாள் பாரா ளுமன்ற உறுப்பினர்.)



ஆறுமாதத்திற்கு முன்னர் அலரிமாளிகையில் இருந்து கொண்டு அட்டகாசம் செய்த இந்த முன்னாள் சிறிலங்கா பிரதமரின் இப்போதைய முகவரி
ரத்னசிறி விக்கிரமநாயக்கா
மே/பா பேரினவாதிகள் அணி
கொழும்பு என்பது மட்டுமேயாகும்

பேரினவாதிகளே வாயடைக்கும் அளவிற்கு பேரினவாதம் பேசிய பேரினவாதப் பிதாமகன் இவர்.

இவர் பிரதமராகப் பதவியேற்றவுடன் பாராளு மன்றத்தில் முதன்முதல் நுழைந்தபோது பேரினவாதி இவரை-

'விக்கிரமநாயக்காவே வருக... வருக... என்றழைக்கவில்லை. மாறாக சிங்கள நாயக்காரே வருக... வருக... என்றுதான் அழைத்தார்கள்' என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்...

'நான் சிங்கள மக்களின் உரிமைகள் பற்றிப் பேசினால் இனவாதி என்கிறார்கள்... பரவாயில்லை. ஆனால் பயங்கரவாதிகளை ஆதரிப்போர் என்னை இனவாதி என்று சொல்வதைத்தான் ஏற்றுக்கொள்ள முடியாது' எனப்பகிரங்கமாகவே கூறிய விக்கிரமநாயக்கா பயங்கரவாதத்தை ஒழிக்கும்வரை ஓயப் போவதில்லை என சூளுரைத்தும் கொண்டார்.

05.05.1933இல் பிறந்த இந்த எழுபது வயது மனிதர் லண்டனில் படித்துக்கொண்டிருக்கும் போதே அரசியலுக்கு இழுத்துவரப்பட்டவர். இப்போதைய பேரினவாதிகளின் தலைவர்களில் ஒருவரான தினேஷ்குணவர்த்தனாவின் தந்தையும் ஒரு காலத்தைய மார்க்ஸீயவாதியும் s.w.r.d பண்டாரநாயக்கா ஆட்சிப்பீடம் ஏறக்காரணமாக இருந்தவருமான மக்கள் ஐக்கிய முன்னணி (mc)யின் ஸ்தாபக தலைவரான பிலிப்குணவர்த்தனாவின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டும் ம.ஐ.முன்னணியில் இணைந்து கொண்டவர்.

1960 மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் அக்கட்சியில் போட்டியிட்டு 'வெவராரண' தொகுதியில் சுயேட்சையாகப் போட்டியிட்டும் வென்றார்.

1970ல் நடந்த தேர்தலில் வெற்றிபெற்று முதலில் பிரதிநிதியமைச்சராகவும் - பின் நீதியமைச்சராகவும் பதவியேற்றார்.

1955இல் இலண்டனில் படிக்கும்போது இலங்கை மாணவர் மன்றத் தலைவராக இருந்த அவர் பல சர்வதேச மாநாடுகளில் சிறிலங்காவின் பிரதிநிதியாக கலந்து கொண்டவர்.

அரச நிர்வாகம் பெருந்தோட்ட தொழில்கள்-கைத்தொழில் நாடாளுமன்ற விவகாரம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராகவும் இருந்தவர்.

சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் அவரது அரசியல் ஆலோசகராக இருந்த விக்கிரமநாயக்கா, சிறிமாவோவின் ராஜினாமாவை அடுத்து பிரதமரானார்.

காணி விவகாரங்களில் சிங்கள அரசு பௌத்த மக்களின் நலனை அடிப்படையகாக்கொண்ட பேரினவாத நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என்பதில் உறுதியான நிலைப்பாட்டை எடுத்தவர். இதன் காரணமாக மகாநாயக்கர்களின் ஆசீர்வாதம்பெற்ற செல்லப்பிள்ளையாவார்.

புதிய அரசியல் யாப்பின் ஒவ்வொரு அத்தியாயமும் ஏன் ஒவ்வொரு வரியுமே மகாசங்கத்தினரின் ஆலோசனைப்படியே எழுதப்பட வேண்டும் என்று கூறியவர்.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக போரிட விகாரைகள் இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு மையங்களாக செயற்பட வேண்டும் என முழங்கியவர்.

விடுதலைப்புலிகளை ஒழிக்கும் விடயத்தில் சிங்களத் தலைமைகள் ஓரணியில் செயற்பட வேண்டும் என அறைகூவல் விடுத்தவர்.

எல்லாவற்றிலும் மேலாக பிரபாகரனைக் கொல்வது சரியானதே... அதற்கு பௌத்த தர்மத்தில் இடமுண்டு எனப் புதிய தம்மபத வரிகளை இயற்றிக்கூறியவர்.....

இவ்வளவும் போதும் இவரை அறிமுகம் செய்ய ... சரி... இப்போது இவர் என்ன சொல்கிறார் என்கிறீர்களா...?

வீட்டில் மனைவியுடன் முரண்பாடு, மகனோடு மோதல்,கட்சிக்குள் பின்னடைவு,அதிகாரம் எதுவுமில்லை ... அலரிமாளிகையில் இவரோடு அட்டகாசம் செய்த அந்த பெண் தோழியும் இவரைவிட்டு பறந்துவிட்டார். சூழ இருப்பவர்களில் சந்தேகம்... வேலையாட்களில் நம்பிக்கையீனம் என...

மகாநாயக்கர்களின் ஆசீர்வாதத்தால் விலாசம்தேடி பிடிக்கவேண்டிய ஒருவராகிவிட்டார்.

● நிலாந்தன்




# மீடியாப்- பயங்கரவாதம்

கடைசியாக வந்த "சண்டே ரைம்ஸ்"இன் தலைப்புச் செய்தியில் புலிகள் நோர்வேயின் அனுசரணையாளர் பாத்திரத்தை தவிர்க்க விரும்புவதாகவும் இது தொடர்பாக ரணிலுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

இது நிலைமையைக் குழப்பும் உள்நோக்கம் கொண்ட வெறும் ஊகம் மட்டுமே என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அல்லது இது சண்டே ரைம்ஸ் இன் விருப்பமாயுருக்கலாம்.

ஆனால் அதுதான் தலைப்புச் செய்தி. இது முதலாவது.

அடுத்தது கடந்தமாதம் வாழைச்சேனையில் நடந்த சம்பவங்களைப் பற்றி "ஐலண்ட்" பத்திரிகையில் மிக நீண்ட ஒரு செய்தித்தொகுப்பு வந்திருந்தது.

ஒரேநாள் பத்திரிகையில் தவறுதலாகவோ அல்லது வேண்டுமென்றோ இரண்டு இடங்களில் மேற்படி செய்தித்தொகுப்பு பிரசுரிக்கப்பட்டிருந்தது.

ஒரு பகுதியினருக்குச் சார்பான செய்திகள் அங்கே மிகவும் நேர்த்தியாகத் தொகுக்கப்பட்டிருந்தன.

அதை வாசிக்கும் எவருக்கும்சமாதான முயற்சிகளைக் குறித்து ஐயமும் பயமும் உண்டாகும்.

இச்செய்தி பிரசுரிக்கப்பட்டு சில நாட்களின் பின் கிழக்கிலங்கைப் பத்திரிகையாளர் ஒருவர் வன்னிக்கு வந்திருந்தார். வாழைச்சேனைச் சம்பவங்கள் பற்றி அவரிடம் கேட்டேன். அங்கே எரிக்கப்பட்ட கடைகளில் கணிசமானவை ராணுவ மற்றும் பொலிஸ் சோதனைச் சாவடிகளுக்கிடையில் இருந்தவைதான் என்று அவர் கூறினார். எனவே அவற்றை யார் எரித்திருப்பார்கள் என்று ஊகிப்பது சுலபம் என்றும் அவர் சொன்னார்.

அப்படியென்றால் ஐலண்டில் வந்திருந்த செய்தி?

இதுதான் பிரச்சினை

கொழும்பிலிருந்து வெளிவரும் பெரும்பாலான சிங்கள மற்றும் சிங்களவருக்குச் சொந்தமான ஆங்கில பத்திரிகைகள் சமாதானத்தை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எதிர்க்கின்றன.

இலங்கைத்தீவின் சமாதானத்தைப் பொறுத்தவரை மிகவும் எரிபற்று நிலையில் உள்ள விவகாரங்களில் ஒன்று முஸ்லிம்களின் பிரச்சினை.

அதில் ஒருபக்கச் சாய்வெடுத்து எங்கெல்லாம் வெறுப்பை, சந்தேகத்தை , வீணான பயத்தை உண்டாக்க முடியுமோ அங்கெல்லாம் மிகவும் தந்திரமாகச் செய்திகளைப் பிரசுரிப்பதும் சமயங்களில் "வதந்தி அலைகளை" முடுக்கிவிடுவதும் மேற்படி பத்திரிகைகளின் பிரதான வியாபார உத்தியாகஇருந்து வருகிறது.

எந்தச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுப்பது, எப்படிக் கொடுப்பது எதை திரிப்பது என்பவற்றில்எல்லாம் இப்பத்திரிகைகளுக்கு மிக நீண்ட கால நோக்கு இருக்கலாம் போலத் தோன்றுகிறது.

புனைபெயரில் கட்டுரைகள் ,பத்திரிகைகள் எழுதுவது, அல்லது புனைபெயரில் வாசகர் கடிதம் எழுதுவது கற்பனைகள் ஊகங்கள் விருப்பங்களை நசுக்காகச் செய்திகளாக்கிவிடுவது. மக்கள் ஆதரவற்ற உதிரிகளாயிருக்கின்ற இனவெறியூட்டும் நபர்கள் மற்றும் நிறுவனங்களின் அறிக்கைகளுக்கு தேவைக்கும் அதிகமாக முக்கியத்துவம் கொடுப்பது என்று இவ்வாறாக பொறுப்பற்ற மூன்றாம்தர ஊடகப் பாரம்பரியம் ஒன்று கொழும்பில் நிறுவனமயப் பட்டுவிட்டது.

என்பதால்தான் பீ.பி.சி.யின் சிங்கள சேவையான "சந்தேசிய" வின் பணிப்பாளராகிய பரியன் லியனகே தென் னிலங்கையில் உள்ள பெரும்பாலான பத்திரிகைகள் இனவாதப் போக்குடையவையே என்று கூறுகிறார்.

இதில் சந்தேசிய ஒரு உற்சாகமூட்டும் புறநடை. அது ஒரு உலகளாவிய ஊடக அமைப்பின் ஓரங்கமாக இருப்பதும் அதனுடைய பக்கஞ்சாரா நிலைக்கு ஒரு முக்கிய காரணம்.

இதுதவிர "ராவய", "யுக்திய", "டெய்லிமிரர்"போன்றவை பறவாயில்லை எனலாம்.

மற்றும்படி அரசுக்குச் சொந்தமான லேக்ஹவுஸ் பத்திரிகைகள் தவிர, ரூபவாகினிதவிர,சில தமிழ் ஊடக நிறுவனங்களின் பத்திரிகைகள் வானொலி மற்றும் தொலைக்காட்சி சேவைகள் தவிர மற்ற ஆங்கில சிங்கள பத்திரிகைகள் யாவும் சமாதானத்தை எங்கே எப்படி குழப்பலாம் என்பதிற்தான் அதிகம் ஆர்வமாயிருப்பது போற்தோன்றுகிறது.

இதில் அரசுக்குச் சொந்தமான லேக்ஹவுஸ் ,ரூபவாகினி போன்றவற்றின் இன்றுள்ள நிலைப்பாடுதான் என்றுமிருக்கும் என்பதற்கில்லை. அரசாங்கம் சமாதானம் செய்யும்போது அவை சமாதானத்தை ஆதரிக்கும். அரசாங்கம் யுத்தம் செய்யும்போது அவை யுத்தத்தை ஆதரிக்கும். எனவே அவற்றின் நிலைப்பாடு மாறும் தன்மையுடையது.

பொதுவாக புரிந்துணர்வு உடன்படிக்கையும் இடைக்கால நிர்வாக சபையும் , நோர்வேயின் தலையீடும்தான் இப்பொழுது இவர்களுடைய தாக்குதல் இலக்குகள்.

புரிந்துணர்வு உடன்படிக்கை புலிகளுக்குச் சாதகமானது என்ற கருத்தை சிங்களவர் மத்தியில் உருவாக்குவதில் இவை கணிசமான அளவு வெற்றிபெற்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

மற்றது இடைக்கால நிர்வாக சபை எனப்படுவது புலிகளுக்கு நாட்டைப் பிரித்துக்கொடுக்கும் ஒரு சதியின் முதற்கட்டம் என்ற ஒரு பயத்தை பரவலாக்குவது.

அதோடு விசேசமாக நோர்வேயின் அனுசரணையாளர் பாத்திரம் இவர்களுக்கு அலர்ஜிக் ஆக இருக்கிறது.

இந்நிலையில் புரிந்துணர்வு உடன்படிக்கையில் சிங்களவருக்குப் பிரச்சினையான அம்சங்களையே எப்பொழுதும் பெருப்பித்துக்காட்டும் இவர்கள் அதன் நல்லம்சங்களைப் பற்றி எதுவும் கூறுவதில்லை.

குறிப்பாக. புரிந்துணர்வு உடன்படிக்கையை மதித்து நடப்பதில் புலிகள் காட்டும் ஆர்வத்தை, பொறுப் புணர்ச்சியை, நிதானத்தை ஊக்குவிக்கும் விதத்தில் இவர்கள் எதுவும் எழுதுவதில்லை.

வேலணையில் புலிகள் தாக்கப்பட்டபோதும் மூதூரில் புலிகளின் அலுவலகம் தாக்கப்பட்டபோதும் புலிகள் காட்டிய பொறுமை நிதானம் என்ற புரிந்துணர்வு உடன்படிக்கையை அமுலாக்குவதில் காணப்படும் பிரகாசமான அம்சங்கள் மீது சிங்களவரின் கவனத்தைக் குவிப்பதில் மேற்படி ஊடகங்களுக்கு அக்கறையில்லை.

அதேசமயம் இரணைதீவுக் கடலில் நடந்தவற்றை மிகைப்படுத்திக் கூற முற்படுகிறார்கள்.

இப்படி இவர்கள் சிங்களவர்களைக் குழப்பியும் யுத்தத்தை நோக்கி அவர்களை நகர்த்தியும் பெறவிரும்புவது என்ன?

பணம்தான்.

யுத்தம் எப்பொழுதோ ஒரு வியாபாரமாக [illegible] ஆகிவிட்டது அதில் ஆயுத தரகர்களுக்கு நிகராக [illegible]

மீடியாக்காரருக்கும் வாயும் உண்டு யுத்தம் நடந்தால்தான் செய்திகளை விறுவிறுப்பாக வரும் பத்திரிகை பரபரப்பாக விற்கப்படும். யுத்தம் இல்லையென்றால் பல பத்திரிகை நிறுவனங்களை இழுத்து மூட வேண்டியிருக்கும்.

பல கார்ட்டூனிஸ்ட்களுக்கு வேலையே இருக்காது. பல பத்தி எழுத்தாளர்களுக்கு வெளிநாட்டு மதுவும் ,கசிறோ[illegible] இரவுகளும் கிடைக்காது.

கொழும்பிலிருந்து வரும் ஒரு பிரபல ஆங்கில வார இதழின் பத்தி எழுத்தாளரிற்கு ஒரு பத்திக்காக சுமாராக 25,000 ரூபா தரப்படுகிறதாம். அதாவது மாதம் ஒன்றிற்கு அவர் யுத்தத்தால் சம்பாதிப்பது ஏறக்குறைய ஒரு லட்சம்.

எனவே இப்படிப்பட்ட பத்தி எழுத்தாளர்கள் யுத்தம் ஓய்வதை விரும்பமாட்டார்கள். இவர்களுக்கு சமாதானம் என்றாலே அலர்ஜி.

இப்படிப் பார்த்தால் இலங்கைத்தீவில் யுத்தத்தை நடத்துவது அரசியல்வாதிகளும் படைத்தரப்புகளும் ராணுவமும் மட்டுமல்ல. மீடியாக்காரர்களும்தான்.

பேச்சுவார்த்தைகளில் ராணுவத்தை மூன்றாம்தரப்பாகக்கொண்டு வரலாம் என்றால் கட்டாயமாக மீடியக்காரரை [illegible] தரப்பாக கொண்டுவரவேண்டும்.

அவர்களைச் சமாதானத்திற்குப் பொறுப்பானவர்கள் ஆக்கவேண்டும்.

சமாதானம் முதலில் அவர்களிடமிருந்தே வரவேண்டும் ஏனென்றால் அவர்களிடம்தான் வதந்தி அலைகள் [illegible]

முதலில் அவர்களுக்குத்தான் சமாதானத்தின் பெறுமதி [illegible] வேண்டும் ஏனெனில் அவர்கள்தான் மக்களைக் குழப்பும் சக்திகளாகக் காணப்படுகின்றார்கள்.

இம்முறை மகாநாயக்கர்கள் ஓரளவிற்கு மனம்மாறியிருப்பது போலத்தோன்றுகிறது. ஆனால் மீடியாக்காரர் மாறவில்லை.

உலகிலேயே மீடியாக்காரர் யுத்தவியாபாரிகள் போல தொழிற்படும் சில நாடுகளில் இலங்கைத்தீவும் ஒன்று.

கடந்த சுமார் கால் நூற்றாண்டுகால ஈழப் போர் செய்திகளை கொழும்பு மீடியாக்கள் எப்படிக் கையாண்டன என்று நேர்மையாக ஆய்வு செய்யும் எவரும் ஒன்றைக் கண்டுபிடிப்பார்கள்

அதாவது தமிழருக்கெதிரானதான ஒரு சுயதணிக்கைப் பாரம்பரியம் அங்கே நிலவி வருகிறது என்பது.

றிச்சர்ட் டி சொய்சாவைப் பலிகொடுத்த பிறகும் அவர்கள் திருந்தியதாகத் தெரியவில்லை.

ரத்தம் சிந்தா வழிகளில் காணப்படும் எதிர்மறையான அம்சங்களைக் குறித்து எப்பொழுதும் சிங்களவர்களை பயமுறுத்துவது இவர்களுடைய கீழ்த்தரமான வியாபார உத்தியாகிவிட்டது.

ஆனால் யுத்தமில்லாத வழிகளில் சிந்திக்கும் ஒரு சிவில் சமூகத்தைக் கட்டியெழுப்புவது என்பது இன்றைய தகவல் யுகத்தில் மீடியாக்களிடமிருந்தே தொடங்கப்படவேண்டும்.

எனவே இப்பொழுது நாட்டுக்குத் தேவை சமாதானத்துக்கான ஒரு மீடியா.

யுத்தமில்லாத வழிகளில் சிந்திக்கும் ஒரு சிவில் சமூகத்திற்கு அடித்தளமாயிருக்கக்கூடிய பொறுப்புணர்ச்சி மிக்க நிதானமான நீதியான ஒரு மீடியா.

இல்லையேல் இப்பொழுது கொழும்பு மீடியாவில் [illegible] நிருக்கும் யுத்தவியாபாரிகள் ஒரு நாள் சமாதானத்தைக் குழப்புவதில் வெற்றிபெற்றுவிடுவார்கள்

ஏனெனில் சமாதானத்தைவிடவும் யுத்தம்தான் அவர்களுக்கு அதிகம் லாபமானது!

# குறும்படம் விவரணப்படம் முழுநீளப்படம் பிரச்சாரம்

எந்தப் பொதுவான விளக்கத்தின் உள்ளே நுழைந்தோமாயினும் சில குறிப்பிட்ட சிறப்புத்தன்மைகளையும் விசேஷமான பிரிவுகளையும் நாம் பார்க்கமுடியும்.

அந்தந்தப் பிரிவுகளுக்கென்று சில இலக்கணங்களையும் விசேஷ அடையாளங்களையும் இதினின்று நாம் வகுக்க முடியும்

சினிமாவும் அப்படித்தான். கமெராவினில் பிடிக்கப்படும் பிம்பங்கள் அனைத்துமே ஒரே தன்மையானவையல்ல. சொல்ல நேரும் பிரச்சினைக்கு ஏற்ப அதன் வடிவங்களும், சொல்லும் முறைகளும் வேறுபடுகின்றன.

சினிமாவின் ஒரு சில பிரிவினைகளை மட்டும் இப்போது எடுத்துக் கொள்வோம்.

குறும்படம் என்பதையும் முழு நீளப்படம் என்பதையும் இரண்டு விஷயங்கள் தீர்மானிக்கின்றன.

1. அதன் கால அளவு அதாவது அது ஓடும் நேரம்

2. குறும்படம் ஒரு சலனத்தை ஏற்படுத்தும் தன்மைவாய்ந்தது. முழு வாழ்க்கையையும் இது எடுத்துக்கொள்ளாது. வாழ்வின் ஒரு சிறு சம்பவத்தை அல்லது ஒரு மனிதனின் நிமிட மன ஆவேசத்தை இவ்வகைப்படம் எடுத்துக்கொள்கிறது. இவ்வகைக்கு உதாரணம் ஜீவனின் எச்சில் போர்வை எடிட்டர் லெனின் நாக்கவுட்.

குறும்படம் 15 நிமிடங்களுக்குள்தான் பெரும்பாலம் அமைகிறது. இலண்டனில் சனல் நான்கு தொலைக்காட்சி பார்க்லேஸ் வங்கியுடன் இணைந்து இத்தகைய படங்களுக்கென்று போட்டியும் நடத்துகிறது. பாரிஸ் கலைபண்பாட்டுக் கழகம் நடத்திய போட்டியும் இத்தன்மையான துதான்.

முழு நீளப்படம் வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்கள், பல்வேறு மனிதர்களின் அனுபவங்களுடன் பதிவு செய்ய முயல்கிறது. ஆங்கிலப் படங்கள் குறைந்த பட்சம் 90 நிமிடங்களாக இருக்க தமிழ்ப்படங்கள் 150 நிமிடங்களிலிருந்து 180 நிமிடங்கள் வரை இருக்கிறது. சில படங்கள் 6மணி நேரங்களில் கூட இருக்கிறது.

உதாரணம்: இந்திப்படத்தில்:

மேரா ராம் ஜோக்கர்

ஆங்கிலப்படத்தில் ஹேம்லட்

புலம்பெயர் நாட்டுச்



சினிமாவில் முகம் படம் முழு நீளத் திரைப்படத்திற்கான தன்மைகள் கொண்டது. நிதர்சனம் தயாரித்த பெரும்பாலான படங்கள் குறும்படவகையைச் சேர்ந்தவை.

குறும்படத்தில் குறிப்பிட்ட பிரச்சினையை உக்கிரப்படுத்துவதாகவே இசை, படத்தொகுப்பு, பிம்பங்கள் இடம் போன்றன அமைய வேண்டும். முழு நீளப்படத்தில் காலஅவகாசம் பார்வையாளனைத் திசைதிருப்பி விடாதிருக்க, இடைவெளிகளை நிரப்புமாறு இசைக்காட்சிகள் இயற்கையின் விரிதல் போன்றன இடம்பெற வேண்டும்.

இந்த வரையறையை மீறிய படங்களும் விதிவிலக்காக உண்டு.

போலந்து இயக்குநர் கீஸ்லாவ்ஸ்யின் A Short Film about Killing படம் தொலைக்காட்சிக்காக 50 நிமிடம் எடுக்கப்பட்டு பிற்பாடு அதன் கதையின் தர்க்கம் விரிக்கப்பட்டு 90 நிமிடப்படமாக சினிமாத்தியேட்டர்களில் முழு நீளச்சினிமாவாக வெளியானது.

விவரணப்படம் இவைகளினின்று வித்தியாசமானது. குறும்படங்களிலும் முழு நீளக் கதைப்படங்களிலும் பாத்திரங்களின் மனோவியல் பரிமாணம் பற்றிய வியாக்கியானங்களும், கற்பனைகளும், கதைகளும் இடம்பெறும். இங்கு யதார்த்தத்தை மீறிய கட்டப்பட்ட யதார்த்தம் இடம்பெறுகிறது.

விவரணப்படம் யதார்த்தத்தின் மீது,கட்டுக்கதைகள் தவிர்த்த நிஜங்களின் மீது கட்டப்பட்டது. பல்வேறு அறிவுத் துறை ஆய்வின் அடிப்படைகளின் மீது விவரணப்படங்கள் அமைகின்றன.

உதாரணமாக அமெரிக்க மானுடவியலாளர் ஒருவரின்

> ❊ ❊
> குறும்படத்தில் குறிப்பிட்ட பிரச்சினையை உக்கிரப்படுத்துவதாகவே இசை,படத்தொகுப்பு, பிம்பங்கள் இடம் போன்றன அமைய வேண்டும். முழு நீளப்படத்தில் கால அவகாசம் பார்வையாளனைத் திசைதிருப்பிவிடாதிருக்க, இடைவெளிகளை நிரப்புமாறு இசைக்காட்சிகள் இயற்கையின் விரிதல் போன்றன இடம்பெற வேண்டும்.
> ❊ ❊

நோக்கில் சொல்லப்பட்ட இலங்கைத் தமிழர் வாழ்வில் வன்முறையும் சுய சித்திரவதையும் பற்றிய Dance of Kali என்கிற படத்தை சொல்லலாம்.

மேற்கு நாடுகளில் History Channel அல்லது Travel Channel-ல்வரும் படங்களையும், போல் பொட் அல்லது ஸ்டாலின் காலச் சாவுகள் பற்றிய படங்களையும் இவ்வகையில் சொல்லலாம்.

சில படங்கள் இந்த வரையறையையும் கூடக் கடந்து கதைப்படங்களின் தன்மைகளையும் விவரணப் படத் தன்மைகளையும் ஒருங்கே பெற்று படைப்புத் தன்மையை எய்துகின்றன.

உதாரணத்திற்கு: Welcome to Canada என்னும் படம் இதில் விவரணப்படமும் கதையும் ஊசலாடி வருகின்றன. இத்தகைய படங்களைச் செய்ய நிறைந்த வரலாற்று ஞானமும் தத்துவ தரிசனமும் தேவைப்படுகிறது.

சில படங்கள் பிரச்சாரத்திற்கென்றே எடுக்கப்படுகின்றன. இவை பெரும்பாலும் சில குறிப்பிட்ட கால இலக்கு நோக்கி எடுக்கப்படுகிறவை. இந்திய அரசின் செய்திப் படங்களையோ பிரிட்டீஸ் அரசாங்கத்தின் போர்க்காலச் செய்திப்படங்களையோ இந்த



நோக்கில் பார்க்கலாம். இந்தியா, பிரிட்டனில் தேர்தல் காலத்தில் எடுக்கும் படங்களை இவ்வகையில் சேர்க்கலாம்.

நம்மிடையில் சிறுகதைகளையும் நாவல்களையும் சில கூர்மையான பிரச்சினைகளையும் வைத்து எடுக்கும் படங்கள் குறும்படங்கள் என பார்க்கும் பார்வை ஒன்று உள்ளது.

இப்பிரச்சினையை நாம் மகேந்திரன் படங்களை பேசுவதன் மூலம் தீர்க்க முனையலாம்.

சிற்றன்னை என்னும் குறும்நாவலின் பாதிப்பில் உருவானது உதிரிப்பூக்கள்.

பூட்டாத பூட்டுக்கள் குறுநாவல் கந்தர்வனின் சிறுகதையின் பாதிப்பில் உருவாகி வருவது சாசனம். உமாச்சந்திரனின் நாவல் முள்ளும் மலரும் படமாகியது

வேறு வேறு இலக்கிய வடிவங்களை ஆதாரமாகக் கொண்டிருந்தாலும் கூட அந்த படைப்பின் கருக்களின் தர்க்க நீட்சியாகவே மகேந்திரனின் படங்கள் அமைகின்றன. அதாவது முழு வாழ்வும் தளுவியதாக 2.30 மணியில் இருந்து 3.00 மணி நேரம் ஓடுவதாக படம் அமைகிறது.

பாலுமகேந்திராவின் வீடு படமும் இத்தகையது தான். தமிழக தொலைக்காட்சித் தொடர்களில் கையளவு மனசினை முழுநீள படத் தன்மை கொண்டதாகவும் சுகாசினியின் பெண்வகைப் படைப்புக்களை குறும்படங்கள் எனும் அளவிலும் காணலாம்.

குறும் படங்களிலும் தொலைக்காட்சிப் படங்களிலும் மேற்கில் பிரக்ஞை பூர்வமாக சில விசயங்கள் கையாளப் படுகின்றன. குறும்படங்களில் இடம் பெறும் மனிதர்களும் அவர்களது செயல்களும் குளோஸப் ஸாட்களிலேயே இடம் பெறுகின்றார்கள்.

நாம் சினிமா பற்றிய முயற்சிகளில் இறங்கும் முன்பாக தமது படைப்பின் தன்மைகளை சரியாக தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அது குறும் படமா, முழுநீளப்படமா, விபரணப் படமா என்பதற்கேற்ப முன்கூட்டியே வேலைகளை நாம் செய்து கொள்ள வேண்டி இருக்கிறது. ஸ்கிரிப்ட், கமரா கோணம், இசை, மௌன இடைவெளி ஒளி, ஒலி போன்றன பற்றிய முன்கூட்டிய அவதானங்களை நாம் வடிவமைத்துக் கொள்ள வேண்டி இருக்கிறது.

இதற்குப் பின் வரலாற்றாய்வு, உடை, ஒப்பனை, இடம், இயற்கை, காலம், இயற்கைச் சம்பவங்கள் போன்றவற்றை பொருத்தத்துடன் கையாள வேண்டி இருக்கிறது.

ஆகவே எந்த வகையான சினிமா முயற்சியையும் மேற்கொள்வதற்கு முன் சுய தேர்வும் சுயபடிப்பும், வடிவம் சம்பந்தமான தீர்மானமான வரையறைகளும் தேவைப்படுகிறது. இத்தகைய அறிவு பூர்வமான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு ஒப்பவே படைப்பும் தெளிவாகவும் அழகாகவும் உருவாகும்.

யமுனா ராஜேந்திரன்

---



# நெஞ்சை உருக்குபவை

போரின் எல்லை மெல்ல மெல்ல அந்த ஊரை நெருங்கிய ஒரு காலைப் பொழுது தங்கள் உயிரோடு உறவாடிவிட்ட அந்த ஊரைப் பிரிந்து எல்லோரும் கண்களில் கண்ணீர்த்திரையிட பிரிந்தார்கள். ஆனாலும் நம்பிக்கைமட்டும் தளர்ந்து போகவில்லை.

சுட்டெரிக்கும் வெயில் கடந்து ஒதுக்குப்புறமான ஒரு கிராமத்தில் பழைய ஊரின் சாயல்கொண்டு இன்னுமொரு புதிய ஊர் உருவாகி விட்டது.

காட்டுத்தடிகள் கொண்டு கட்டிய கொட்டில்கள் அவர்களின் இளைப்பாறும் இல்லம். ஒரு ஊருக்குத் தேவையான எல்லா அம்சங்களையும் தாங்கியபடி இப்பொழுது அந்த ஊர்.

ஆனாலும் ஒரு குறைச்சாய்... ஒரு நூலகம் இருந்தா நல்லா இருக்கும் என்ற ஒரு முதியவர் சிறு தடிகள் கொண்டு மெல்லிய வரிச்சுப் பிடித்து ஒரு நூலகம்... அறிவுக்கண்திறக்க அதன் வாசல் கதவைத் திறந்து வைத்தார்.

அன்றுகாலை தினசரிப் பத்திரிகையோடு காத்திருந்த. நூலகத்திற்கு அந்த ஊர்ப் பெரியவரும் வந்திருந்தார். எல்லோராலும் மதிக்கப்படுகின்ற ஒரு மனிதர் காலை நாளிதழை வாசித்து முடித்த போது அந்தச்சத்தம் கேட்டது.

டேய் தம்பி நில்லு... நில்லு நல்லகாலம் இப்ப சந்தைக்கு நடந்து வர வேண்டியிருந்திருக்கும் நீ இவ்விடத்திற்கே வந்திட்டாய்.

எனக்கு ஒரு அரைக் கிலோ நல்லமீனாப்பாத்து தா என்றவர் மீன் வாங்க கையில் பையில்லாததை அப்பொழுதுதான் உணர்ந்தார்.

அங்கும் இங்கும் எட்டிப் பார்த்தவர் ஒன்றும் கையில் அகப்படாது போகவே அன்று காலைத் தினசரியின் நடுப்பக்கத்தை எடுத்து பத்திரமாக மீனைச் சுற்றிக்கொண்டார்.

அங்கு பத்திரிகை பார்க்க வந்திருந்த எவரைப் பற்றியும் அவருக்கு அக்கறையில்லை. அவருக்கு மீன்சுற்ற ஒரு காகிதம் தேவை அவ்வளவுதான்.

இன்றைய அவரின் வயிற்றுப் பசியைப் போக்க வீடு நோக்கி நடக்கத் தொடங்கிவிட்டார்.

ஆனால் அறிவுப் பசியோடு காத்திருந்தவர்கள் மன வேதனையோடு வீட்டிற்கு அந்த பெரியவரை மனதால் ஏசியபடி நடக்கத் தொடங்கினர்.

வயிற்றுப் பசிக்கு கொடுத்த முக்கியத்துவம் மற்றவரின் அறிவுப் பசிக்கு கொடுக்குமளவிற்கு அந்தப் பெரியவரின் மனதிற்கு இருக்கவில்லை.

- லேழினி

# முடியாட்சி கலாச்சாரமும் இலங்கை யாப்பும்

மு.திருநாவுக்கரசு

ஒட்டுக்கேட்கும் கருவிகளுடன் ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டங்களுக்கு சமூகமளிப்பதாக அமைச்சர்கள் சந்திரிகாமீது குற்றம் சாட்டுகின்றனர்.

அமைச்சரவைகளின் தலைவரான ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டங்களை ஒட்டுக் கேட்கும் கருவியிற் பதிவதான செய்தி உலக வரலாற்றில் இதுவே முதற்தடவை. அதுவும் மேன்மைதங்கிய ஜனாதிபதி என யாப்பில் வரையறுத்துக் கூறப்படும் ஜனாதிபதி ஒருவர் தானே ஒட்டுக் கேட்கும் கருவிகளை காவிச் சென்று ஒட்டுக் கேட்டதான செய்தி இதுவே உலகில் முதற் தடவை.

அமெரிக்க ஜனாதிபதியாய் இருந்த நிக்ஸன் 1972ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது தனது எதிர்க்கட்சி வேட்பாளரினது வோட்டகேட் வாசஸ்தலத்தில் ஒட்டுக் கேட்கும் கருவிகளைப் பூட்டுவித்து ஒட்டுக் கேட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பதவி விலகினார். இதில் நிக்ஸன் ஒட்டுக் கேட்டது தனது அமைச்சர்களையுமல்ல அத்துடன் அவர் தானே ஒட்டுக் கேட்கும் கருவிகளைக் காவிச் செல்லவுமில்லை. அப்படியிருந்தும் பதவி விலகினார்.

ஆனால் இலங்கை ஜனாதிபதியோ தனது கட்சிக்காரர்களான சில நாடாளுமன்ற உறுப்பினர்களை நோக்கி பலாத்காரத் தாக்குதல்களைச் செய்வது பற்றிய மிரட்டல்களை தானே வெளிப்படையாக விடுத்துளளார் என்பதுடன் அமைச்சர்களை நோக்கியும் கொலை மிரட்டல்களுக்கு நிகரான மிரட்டல்களை விடுத்துள்ளார்.

இப்படிப் பிரச்சினைகள் ஏன் ஏற்படுகின்றன? எவ்வாறு இவை தொடர்ந்து நீடிக்க முடிகின்றன? இவற்றிற்கான விடைகளை நாம் தெளிவாகக் கண்டாக வேண்டும். இவற்றிற்கு விடைகாணும் முயற்சிகள் பல கோணங்களைக் கொண்டவை. ஆனால் இங்கு யாப்பின் அமைப்புரீதியானபிரச்சினையை மட்டும் நோக்குவோம்.

இங்கு சந்திரிகா எனும் ஒரு நபர் பற்றியதல்ல எமது பிரச்சினை. யாப்பு எனும் அமைப்புப் பற்றியதே எமது பிரச்சினை, யாப்புச் சம்பந்தமான அரசியற் கலாச்சாரம் பற்றியதே எமது பிரச்சினை.

ஜனாதிபதி- அமைச்சரவை- நாடாளுமன்றம் ஆகிய இவை மூன்றுக்குமிடையிலான அமைப்புரீதியான முரண்பாடும்; சில கட்டங்களில் இவை ஒன்றையொன்று மேவமுடியாத இறுக்க நிலையும், இத்தகைய முரண்பாடுகளையும், இறுக்க நிலைகளையும் கடக்கவல்ல அரசியற்கலாச்சாரம் இலங்கையில் வளரவில்லை என்பனவுமே இத்தகைய பிரச்சினைகளை தோற்றுவித்து வளர்த்துச் செல்கின்றன.

ஜனாதிபதியா? அல்லது நாடாளுமன்றமா வல்லமை பொருந்தியது என்ற கேள்வி எழும்போது சில இடங்களில், அல்லது சில கட்டங்களில் யாப்பு செயலற்று நிற்கின்றது.

நாடாளுமன்றமா ஜனாதிபதியா என்ற கேள்வியில் ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்ய, நாடாளுமன்றத்தின் நூறுவீத ஆசனங்களின் பலத்தினாலும் முடியாது. ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்வதற்கு ஜனாதிபதி குற்றம் காணப்பட்டுள்ளார் என்ற நீதிமன்றத்தின் குற்ற அறிக்கையும், நாடாளுமன்றத்தின் $^{2}/_{3}$ பங்கு குறையாத உறுப்பினர்களின் பலமும் ஒன்று சேர்ந்தால் மட்டுமே ஜனாதிபதி பதவி விலக்கப்படுவார். ஆதலால் இங்கு ஜனாதிபதியை நாடாளுமன்றத் தால் தனித்து பதவி விலக்க முடியாது.

அதேபோலவே ஜனாதிபதி எனும் பதவியை யாப்புரீதியாக இல்லாதொழிப்பதாயின் நாடாளுமன்றத்தின் 2/3 பங். அங்கத்தவர்களின் ஆதரவு தேவைப்படுவதுடன் நாடுதழுவிய ரீதியிலான சர்வஜன வாக்கெடுப்பிலும் வெற்றிபெற வேண்டும். இந்த இடத்திலும் நாடாளுமன்றத்தால் தனித்து ஜனாதிபதிக்கு எதிராக எதுவும் செய்திடமுடியாது.

> பண்டாரநாயக்க அரசவம்சத்தை தொடர்ந்தும் விசுவாசமாக அங்கீகரித்துவரும் குடியானவர்களிடம் மகாராணி சந்திரிகாவும், பட்டத்து அரசன் அநுராவும் தர்பார் குணத்தைவிட வேறு எதனைத்தான் வெளிக்காட்ட முடியும். இனி அடுத்து இராஜகுமாரன் விமுத்தி, ராஜகுமாரி யசோதாவின் தர்பார் காலங்கள்.

ஆதலால் ஜனாதிபதியின் பதவி பொறுத்த விவகாரத்தில் ஜனாதிபதியா நாடாளுமன்றமா என்று கேட்டால் ஜனாதிபதி தான் பலம் வாய்ந்தவர்.

அதேவேளை தனக்குச் சாதகமற்றதாய்க் காணப்படும் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி ஒருமுறை கலைக்க முடியும். அதன் பின்பு நடக்கும் தேர்தலில் நாடாளுமன்றம் மீண்டும் ஜனாதிபதிக்கு பாதகமாகவே அமைந்து விட்டால் ஜனாதிபதி விரும்பினாலும் ஓராண்டிற்கு நாடாளுமன்றத்தை கலைக்க முடியாது. அதுவே இப்போதேற்பட்டிருக்கும் நிலை.

நிதி மசோதாக்களை நிறைவேற்றுவதும், நிதி ஒதுக்கீடுகளை ஏற்று அங்கீகரிப்பதும் நாடாளுமன்றமே என்ற வகையில் நாடாளுமன்றத்தின் ஒத்துழைப்பின்றி ஜனாதிபதியால் நிர்வாகத்தை நகர்த்த முடியாது. இதில் ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு பணிவதைத்தவிர வேறு வழியில்லை. நாடாளுமன்றத்தின் கட்டுப்பாட்டை தனது கையில் வைத்திருக்கும் ஐக்கிய தேசிய முன்னணி இந்த ஆயுதத்தைத்தான் தற்போது ஜனாதிபதிக்கு எதிராய் பயன்படுத்துகின்றது.

> ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்ய முடியாத நாடாளுமன்றத்தின் செயலற்ற நிலைக்கும், நாடாளுமன்றத்தை கலைக்க முடியாத ஜனாதிபதியின் செயலற்ற நிலைக்கும் இடையிலான யாப்பு ரீதியிலான இறுக்க நிலையே இன்றைய பிரச்சினை.

ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்ய முடியாத நாடாளுமன்றத்தின் செயலற்ற நிலைக்கும், நாடாளுமன்றத்தை கலைக்க முடியாத ஜனாதிபதியின் செயலற்ற நிலைக்கும் இடையிலான யாப்பு ரீதியிலான இறுக்க நிலையே இன்றைய பிரச்சினை.

இங்கு மக்கள் மத்தியில் ரணிலுக்கு ஆதரவு இருப்பதனால் ரணிலை மீறமுடியாது ஒத்தோட வேண்டிய அவசியம் ஜனாதிபதிக்கு இருப்பதுதான் யாப்பின் இறுக்கத்தை மீறியும் அரசயந்திரம் இயங்கக்கூடியதாய் உள்ளதற்கான ஒரு காரணமாகும். இப்பின்னணியில் தனக்கு இருக்கக்கூடிய யாப்புரீதியிலான ஏனைய அதிகாரங்களையும் பயன்படுத்த முடியாதிருக்கின்றதே என்ற ஜனாதிபதியின் ஆற்றொணா வெக்காறுதான் அவரது தடம்புரண்ட வண்டிபோன்ற செயற்பாடுகளுக்கெல்லாம் காரணம்.

ஓர் அரசின் அரசியலை செவ்வன செயற்பட வழிவகை செய்து கொடுப்பதுதான் யாப்பின் பணியாகும். ஆனால் இலங்கை யாப்போ அரசியலைக் செயலற்றதாக்கியுள்ளது.

பிரித்தானியாவின் வெஸ்மினிஸ்ரன் நாடாளுமன்ற முறையின்கீழ் அமைச்சரவை கூட்டுப்பொறுப்பு மிக்கது. அங்கு அமைச்சர்கள் நாடாளுமன்றத்திற்குப் பொறுப்பாளராவர். அத்துடன் ஓர் அமைச்சரின் தவறுக்கு முழு அமைச்சர்களுமே பொறுப்பேற்க வேண்டும் எனும் கூட்டுப் பொறுப்புத் தத்துவமுண்டு. அமெரிக்காவில் செயலாளர்கள் எனப்படும் அமைச்சர்கள் ஜனாதிபதிக்கு பதிலும் பொறுப்பும் சொல்ல வேண்டியவர்கள். அமைச்சர்கள் அங்கு முற்றிலும் ஜனாதிபதிக்கு, கடப்பாடுடையவர்கள். இக் கடப்பாட்டு நிலை நிர்வாகத்தை சிறப்பாக இயங்கச் செய்கின்றது. இந்த வகையில் பிரித்தானியாவின் கூட்டுப்பொறுப்பு தத்துவமும், அமெரிக்காவின் கடப்பாட்டு நிர்வாக ஒழுங்கும் அரச நிர்வாகத்தை சீராக இயங்க வைக்கின்றன. ஆனால் இலங்கையில் அமைச்சரவையின் தலைவர் எதிர்க்கட்சிக்காரர் என்பதால் இங்கு கூட்டுப் பொறுப்பு நிலவமுடியவில்லை. அதேவேளை அமைச்சர்கள் ஜனாதிபதியின் தெரிவாகவன்றி ஜனாதிபதியுடன் மல்லுக்கட்டும் பிரதமரின் தெரிவென்பதால் அமைச்சர்களுக்கு ஜனாதிபதியிடம் கடப்பாடில்லை. எனவே இத்தகைய அரசியல் யாப்பு குழப்பம், மோதல், இழுபறியின் பின்னணியில் அரசியல்வாதிகள் மோதுண்ணுகிறார்கள்.

ஒரு யாப்பு மட்டும் சிறப்பாய் அமைந்தால் போதாது, ஒரு தேசத்தின் அரசியல் பண்பாடும், அரசியற் பின்னணியும் கூடவே அதற்குத் துணையாக அமையவேண்டும். ஒரு யாப்பு சிறப்புறச் செயற்படுவதற்கான முன்னணி தலைகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

1) ஒரு யாப்பு முதலிற் சீர்மையானதாக இருக்க வேண்டும்.

2) மக்களின் அரசியல் வளர்ச்சியோடு யாப்பின் பரிணாமவளர்ச்சி ஒத்திநிற்க வேண்டும்.

3) கருத்துச் சுதந்திரமும் பத்திரிகை மற்றும் தொடர்புசாதனக் கலாச்சாரமும் வளர்ந்திருக்க வேண்டும்.

4) அணி, தனிநபர் மீதான குழுநிலை கீழைத்தேய விசுவாசத்திற்குப் பதிலாக தேசிய கருத்துநிலை விசுவாசம் வேண்டும்.

5) தலைவர்களிடம், அரசியல் வாதிகளிடம் அரசியற் சான்றாண்மை (Stalssmanship) இருக்க வேண்டும்.

ஒரு மக்கள் கூட்டத்தின் பண்பாட்டு வளர்ச்சியின் பின்னணியிலிருந்தும், அவர்களது அரசியல் வளர்ச்சித் தளத்தின் பின்னணியிலிருந்தே ஒரு யாப்பு பண்புடன் செயற்படுவதற்குரிய யதார்த்தம் உருவாகின்றது. ஏவலடிமை மன்னராட்சிக் காலத்திலிருந்து மனித குலம் யாப்புமுறை அரசியலுக்கு மாறியமை ஒரு நாகரீக வளர்ச்சியேயாகும். ஆனால் தீக்குளிக்கும் தொல்குல உணர்ச்சிப்பிளம்பு விசுவாசம் இருக்கும்வரை, கூனாதாக்கும். அடிமைநிலைக் கலாச்சார உணர்ச்சி இருக்கும்வரை, காலில் வீழ்ந்து வணங்கும் அடிமைப் பக்திநிலை இருக்கும்வரை யாப்பில் புத்திபூர்வமான, நாகரீக வகைப்பட்ட செயற்பாடு வெளிப்பட முடியாமல் அரசியல்வாதிகளின் காட்டுமிராண்டித் தர்பாரே மேலோங்கும். சென்னையிலும், கொழும்பிலும், மியன்மாரிலும் என ஆசியக் கண்டம் முழுவதும் இத்தகைய தர்பார்கள் பரந்து செல்கின்றன. மக்களை அவர்களின் தொல்குல அபினிக் கலாச்சாரத்திலிருந்து விடுவிக்காதவரை, அப்படி உன்னதமான ஒரு விடுதலை பற்றிய எண்ணம் ஆசிய ஆபிரிக்கர்களிடம் தோன்றாதவரை சந்திரிகா தர்பார்கள் தான் மிஞ்சிநிற்கும்.

அமெரிக்காவை மிகச்சிறந்த உதாரணம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் அதன் யாப்பு இரண்டு நூற்றாண்டுகளை நிறைவுசெய்து இப்போது மூன்றாவது நூற்றாண்டில் ஓடிக்கொண்டிருக்கிறது. தொழில்நுட்பப் பிரயோகத்தின் கோளாறு காரணமாக நடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிக்கல் ஏற்பட்டபோது, யாப்பு ஸ்தம்பிக்கப் போகின்றது போலத் தோன்றியபோது பத்திரிகைகளும் மற்றும் வெகுசனத் தொடர்பு சாதனங்களும் குறுக்கிட்டு ஜோர்ச் டபிள்யூ புஷ்ஷிடம் ஆட்சியை ஒப்படைக்குமாறு குரலெழுப்பவே பிரச்சினை அத்துடன் தீர்க்கப்பட்டு விட்டது. இங்கு பத்திரிகைகளும், வெகுசனத் தொடர்பு சாதனங்களும் யாப்பின் ஓர் உயிருள்ள பகுதியாகச் செயற்படும் பண்பாட்டை அமெரிக்கா கொண்டுள்ளது. வடிவாகச் சொன்னால் அங்கு பத்திரிகைகளே யாப்பு நெருக்கடிக்குத் தீர்ப்பு வளங்கின. மற்றைய ஜனாதிபதி வேட்பாளரும் மேற்கொண்டு, தொடர்ந்து, கோடு, கச்சேரி என்று அலையாது தோல்வியை ஒப்புக் கொள்வதாக அறிவித்தார். அவர் பத்திரிகைகளுக்குப் பணிந்து நாட்டு முன்னேற்றத்தை முதன்மைப்படுத்தினார். அமெரிக்காவின் உள்நாட்டு யாப்பு நிலையை இவ்வாறு கூறும்போது அதன் உலகத் தர்பாரை நான் அங்கீகரிக்கிறேன் என்பது அர்த்தமல்ல. தர்பார் கலாச்சாரம் ஆசிய- ஆபிரிக்கரிடம் இருப்பதால்தான் அமெரிக்கத் தர்பாரும் எம்மீது செயற்படக் கூடியதாய் இருக்கின்றது.

பண்டாரநாயக்க அரசவம்சத்தை தொடர்ந்தும் விசுவாசமாக அங்கீகரித்துவரும் குடியானவர்களிடம் மகாராணி சந்திரிகாவும், பட்டத்துஅரசன் அநுராவும் தர்பார் குணத்தை விட வேறு எதனைத் தான் வெளிக்காட்ட முடியும். இனி அடுத்து இராஜகுமாரன் விமுத்தி, ராஜகுமாரி யசோதாவின் தர்பார் காலங்கள்.

எனவே இங்கு யாப்பு மட்டுமல்ல பிரச்சினை, அத்துடன் கூடவே அரசியற் கலாச்சாரமும் மக்களின் தொல்குல அரசியல் விசுவாசமும்தான் பிரச்சினை.

❐

# அபரிமிதமான ஆற்றலோடு பத்தாண்டுகளைத் தாண்டும் கடற்புலிகள்

சிறி. இந்திரகுமார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கடற்புலிகள் பத்தாண்டு காலத்தை நிறைவு செய்துள்ளனர்.



கடல்சார் போர் நடவடிக்கைகளில் கடற்புலிகளின் பத்தாண்டுப் பயணம் அரசியல், இராணுவ பரிமாணங்களோடு மூன்று ஈழப்போர்களின் களங்களிலும் தாக்கம் செலுத்தியுள்ளன.

இந்தப் பத்தாண்டு கால கடற்புலிகளின் வரலாற்றில் தமிழீழத்தின் 23000 சதுர கிலோமீற்றர் கடற்பரப்பையும் தாண்டி அவர்களின் தாக்குதல் இங்கு நீண்டிருக்கிறது.

அத்தோடு கடற்புலிகள் தமிழீழ கடற்பரப்பில் தமது ஆழுகையை ஒரு சீரான முறையில் பேணியும் வருகின்றனர்.

சிறிலங்கா கடற்படையினருடன் கடற்புலிகள் பொருதிய அனைத்துக் களங்களிலும் தமது அபரிமிதமான போர் ஆற்றலை வெளிப் படுத்தத் தவறியதில்லை.

இங்கு கடற்புலிகள் இந்த ஒரு தசாப்த காலத்தில் பெற்ற போரியல் பட்டறிவு போர்க்கால வளர்ச்சி: கடல்சார் போர்தாக்குதல் நுட்பம், கடற்போரிற்கான ஆட்பல வலு அதிகரிப்பு என்பவற்றோடு ஒரு கெரில்லாப் போரிற்குஎமது புவியியல் சூழலை விளங்கி கடற்படை ஒன்றை உருவாக்கிய தமிழீழ தேசியத் தலைவரின் மிகச் சிறந்த வழிநடத்தலுமே காரணமாக வருகின்றது.

சிறிலங்கா அரசால் வடபிராந்தியம் கிழக்கு கடற்பிராந்தியம், மேற்குக் கடற்பிராந்தியம், தெற்குக் கடற்பிராந்தியம் என்று நான்கு கடற் பிராந்தியங்களாக பிரிக்கப் பட்டிருக்கும் கடற்பிராந்தியங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இராணுவ பரிமாணத்தைக் கொண்டதாக இருக்கின்றது.

இவற்றில் கடற்புலிகள் செலுத்தும் செல்வாக்கானது சிறிலங்கா கடற்படையினருக்கு மாத்திரமின்றி சிறிலங்காவின் முப்படையினருக்கும் பெரும் இராணுவ நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

கடற்புலிகளின் அசைவியக்கமும் தாக்குதல் இலக்கும் மேற்குக், கடற் பிராந்தியத்தையும் தாண்டி தெற்குவரை நீண்டமையானது இராணுவ நெருக்கடிகளை மட்டும் சந்தித்த ஆளும் சிறிலங்கா அரசுகளுக்கு பெரும் அரசியல் நெருக்கடிகளையும் தோற்றுவிக்கின்ற இரட்டிப்பு பரிமாணத்தைத் தோற்றுவித்தது.

கடற்புலிகள் பத்தாண்டு காலத்தில் இரு வேறுபட்ட கடற்சண்டைகளிலும் சமர்களிலும் ஈடுபட்டனர்.

(01) ஆழம் குறைந்த கடற்சமர்

(02) ஆழ் கடற்சமர்

கடற்புலிகளால் ஆழம் குறைந்த கடற் பிரதேசங்களில் சந்தித்த சமர்களில் தமது ஆரம்பகட்ட வளர்ச்சியின் போதே வெற்றிகொண்டு சிறிலங்காப் படைத்தரப்புக்கு பெரும் சவால் விடுத்தனர். அத்தோடு சிறிலங்கா கடற்படையினரின் கரையோர கடல் ரோந்து மற்றும் அனைத்து விதமான நடவடிக்கைகளையும் கட்டுப் படுத்தினர்.


இது கடற்புலிகளை கடற்சண்டையென்ற பரிமாணத்திலிருந்து முன்னகர்த்தி அவர்களை கடற்சமர்களில் ஈடுபடவைத்ததன் மூலம் பெரும் கடற்போரை எதிர்கொள்ளக் கூடிய அளவிற்கு மாத்தியது.

மூன்றாம்கட்ட ஈழப்போரின் ஆரம்பத்தில் கடற்சமர்களில் ஈடுபடத் தொடங்கிவிட்ட கடற்புலிகள் மூன்றாம்கட்ட ஈழப்போரின் இறுதியில் ஆழ் கடற் போர்களில் ஈடுபட்டு கடற்படையின் அசை வியக்கத்தைத் தடுத்து நிறுத்துமளவிற்கு வளர்ச்சி பெற்றிருந் தனர்.

மூன்றாம்கட்ட ஈழப்போரின் போது கடற் படையினரால் வடபுலத்தில் நிலைகொண்டிருந்த சிங்களப் படையினரிற்கான விநியோகத்தை மேற் கொள்ள வேண்டிய தமது பிரதான பணியினை தாம் நினைத்தவாறு மேற் கொள்ள முடியாதவாறு நிலைமையை மாற்றியிருந்தனர்.

திருமலையிலிருந்து காங்கேசன்துறைக்கு வரும் விநியோக அணியினை முல்லைத்தீவு கடற்பிரதேசத்தை தாண்டும் நேரம் பகற்பொழுதாக அமையக் கூடியவாறு ஒருங்குபடுத்தியமை இதற்குச் சான்று.

இது கடற்புலிகளால் ஆழ்கடலில் கடற்படையினரை இரவு நடைபெற்ற சமர்களில் வெற்றிகொண்டதன்



எதிர் விளைவே ஆகும்.

அத்தோடு கடற்புலிகள் தமது படையியல் கட்டமைப்பினையும் பெரும் சமர்களை யும் எதிர்கொள்ளத் தக்க வகையில் புதியபல கட்டமைப் புக்களையும் உருவாக்கி பல இராணுவ வெற்றிகளைப் பெற்றனர்.

இவ்வாறு கடற்போரரங்கை தம் கைகளிற்குள் கையகப் படுத்திய கடற்புலிகளின் வெற்றிகளிற்கு அவர்களின் விசேட படையணிகள் முக்கிய பங்காற்றியுள்ளன. இவற்றில் கடற்புலிகளின் கடற் கரும்புலிகள் படையணியும். விசேட நீரடி நீச்சல் பிரிவின் கடற்புலிகளின் மகளிர் படையணியின் பங்கும் முக்கியமானது.

இதனால் கடற்புலிகளை தமிழீழத் தேசியத் தலைவர் உருவாக்கியதைத் தொடர்ந்து கடற்புலிகள் கண்ட துரித வளர்ச்சியின் பயனாகவே பின்னர் பெரும் தொடர் படைத்தளங்களை வெற்றி கொள்வதற்கு . காரணமாக இருந்தது.

இன்றுவரை தொடரும் புலிகளின் இராணுவ மேலக்திக்கத்திற்கு கடற் புலிகளின் பலமே பிரதான பங்காகும். அத்தோடு தரைச்சமர்களில் புலிகள் சக்திமிக்கவர்களாக இருப்பதற்கு கடற்புலிகளே உந்து சக்தியாக இருந்து வருகின்றனர்.

இந்தவகையில் கடற்புலிகளே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உயிரோட்டத்தின் பிரதான சக்தியாக இருந்து வருகின்றனர்.

கடற்புலிகள் தமது போரியற் காலங்களில் சந்தித்த சமர்களில் பிரதானமானவையாக . இரண்டு நடவடிக்கைகள் மிக முக்கியமான வையாக வரலாற்றில் பதிவா கியுள்ளன.

கடற்புலிகள் ஓயாத அலைகள் ஒன்று நடவடிக்கையின்போது கடற்படையினரின் முழுப் பலத்துடனும் பட்டப்பகலில் வான்படையினரின் தாக்குதலிற்கு மத்தியில் பொருதியமை பத்தாண்டுகால வரலாற்றில் முக்கியத்துவம் மிக்கது.

இந்த திரிஹடபகர இராணுவ நடவடிக்கையில் கடற்படையினரோடு மோதியதன் மூலம் கடற்புலிகள் சிறிலங்கா கடற்படையினருக்கு எதிரான வலுவான சக்தியாக தம்மை வெளிப் படுத்தினர்.

ஆனால் கடற்புலிகளின் பேராயற் சாதனையாக மகுடம் சூட்டப்பட்ட இராணுவ நடவடிக்கை என்றால் அது ஓயாத அலைகள் மூன்றின் போது கடற்புலிகளால் மேற் கொள்ளப்பட்ட இத்தாவில் தரையிறக்கமேயாகும்

இத்தரையிறக்கத்தின் மூலம் புலிகள் இயக்கம் பெற்ற இராணுவ வெற்றி புலிகள் இயக்கத்தோடு சர்வதேச நாடுகளை தூதனுப்பிய சிறிலங்கா படைத்தரப்பின் உயிர்காக்க வேண்டிய அவலநிலைக்குத் தள்ளியது.

அத்தோடு இதன் மூலமாக புலிகள் இயக்கத்தையும் அதன் இராணுவ வெற்றியையும் உலகிற்கு பறை சாற்றியது. மேலும் கடற்புலிகள் கடல் ஆதிக்க சக்தியை தம் வசப்படுத்திக் கொண்டனர்.

இது புலிகள் இயக்கத்தை இராணுவ சமநிலையில் உயர்ந்து நிற்பதற்கு முக்கிய காரணகர்த்தாக்களாக கடற்புலிகளே மாறியிருந்தார்கள்.

கடற்புலிகள் தொடர்ச்சியாக கடற்சமர்களில் ஈடுபட்டு சிறிலங்கா கடற்படையினரை ஒரு தற்காப்புப் போர் நடவடிக்கைக்குள் மட்டுப்படுத்தினர்.

ஆரம்பத்தில் கடற்புலிகளை வலுச்சண்டைக்கு இழுத்த சிறிலங்கா கடற்படையை கடற்புலிகள் தேடிச்சென்று தாக்குதல் பொறிக்குள் இருக்க வேண்டிய அளவிற்கு கடற்புலிகள் வளர்ச்சி கண்டிருந்தனர்.

ஒட்டு மொத்தத்தில் கடற்புலிகளின் பத்தாண்டு காலத்தாக்குதல் இலக்கிற்குள் மிகப் பாதுகாப்பான துறைமுகங்கள் எனச் சொல்லப்பட்ட எல்லாத் துறை முகங்களுமே இலக்காகின.

இப்பத்தாண்டு காலத்துள் கடற்புலிகள் பெற்ற துரித இராணுவ வெற்றிகளும், துரித வளர்ச்சியும் தமிழீழ விடுதலைப் போரின் முக்கிய தீர்மானகரமான சக்திகளாக தமது பலத்தை நிலைநாட்டியுள்ளனர். சிறிலங்காத் தரப்பின் தலைவிதியை இராணுவத் தோல்விகளுக்கும் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளை தமது கடற்பலத்தால் கட்டுப்படுத்த முடியாமல் போனதே காரணம் என்பதை படைத் தரப்பு உணர்ந்து கொள்ளத் தவறவில்லை.

## தூரனின் பார்வையில்:.....

# ஜே.வி.பி.யின் அரசியல் வங்குரோத்து நிலை

> இப்போதைய நிலையில் சமாதான நகர்வுகளை எதிர்த்து விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கத்தைக் கண்டித்து இனவாதம் பேசத் தொடங்கியுள்ள ஜே.வி.பி, பொ.ஐ.முன்னணியையும், ஐ.தே.முன்னணியையும் சிங்கள பௌத்த மக்களின் நலனுக்கு எதிரான சக்திகள் என்றும் தாம்தான் சிறிலங்காவின் அடுத்த தலைமைத்துவ சக்திகள் என்றும் புலம்பத் தொடங்கியுள்ளனர்

விலைவாசி ஏற்றம்,தனியார் மயமாக்கல் என்ற ஐக்கிய தேசிய முன்னணி அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சந்திரிகாவின் பொ.ஐ.முன்னணியினர் ஏற்பாடு செய்துள்ள ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்குபற்ற அதன் தோழமைக்கட்சியான ஜே.வி.பி. மறுப்புத் தெரிவித்துள்ளது. காரணம்,இந்த ஆர்ப்பாட்டம் சமாதான முயற்சிகளுக்கு எதிராகவும் நடத்தவில்லை என்பதேயாகும்.

எரியும் பிரச்சினைகளாகி தென்னிலங்கையில் சிங்கள மக்களை அச்சுறுத்தி வரும் விலைவாசி ஏற்றமோ, சிறிலங்காவின் பொருளாதாரத்தை அடிமட்ட நிலைக்குக் கொண்டு போய் அதலபாதாளத்தில் தள்ளப் போகும் தனியார் மயமாக்கலோ ஜே.வி.பியை அதன் இடதுசாரிச் சிந்தனையை எவ்விதத்திலும் 'பெரிதாக' பாதிக்கவில்லை. ஆனால் சமாதான முயற்சிகள் அதனை வெகுவாகப் பாதிக்கிறது. அதனை எதிர்ப்பதுதான் அதன் பிரதான இலட்சியமாகவும் உள்ளது.

பொ.ஐ. முன்னணிக்கும் இந்த சமாதான முயற்சியில் அவ்வளவு விருப்பமில்லை என்பது தெளிவான விடயம்தான். ஆனாலும் அதனை முழுமையாக, பகிரங்கமாக,முதன்மைக் காரணமாக வைத்துப் போராட அதற்கு அந்தளவு துணிச்சலில்லை.

சிங்கள மக்களின் தற்போதைய அமைதிமீதான விருப்பத்தை சாதகமாக்கி அரசியல் நடத்தும் ஐ.தே முன்னணியை இந்த வகையில் மோத முடியாது என்பது சந்திரிகாவுக்கு நன்கு தெளிவான விடயம். இதனால்தான் சமாதான முயற்சி தொடர்பாக ஓடும் புளியம்பழமும் போன்ற கருத்துக்களை வெளியிட்டு வித்தைகாட்டி வருகிறார். ரணிலின் ராஜதந்திர ரீதியிலான நகர்வுகளை, தனது நிறைவேற்று அதிகார வலுவால் எதிர்கொண்டு முறியடிப்பதற்கான குறுக்குவழிகளைக் கையாள்வதிலேயே அவர் இலக்காகச் செயற்பட்டு வருகிறார்.

ஆனால், அவரது தோழமைக்காரர்களான ஜே.வி.பியினரோ விடுதலைப் புலிகளையும் சமாதான நடவடிக்கைகளையும் எதிர்க்கும் கொள்கையை மட்டுமே தனது பிரதான அரசியல் கோப்பாக விரித்துக்கொண்டு செயல்பட ஆரம்பித்துள்ளமையானது பல்வேறு உள்நோக்கங்களைக் கொண்டதாகும்.

ஒருகாலத்தில்... முன்னொரு காலத்தில் அதிதீவிர இடதுசாரிப் புரட்சிவாதம் பேசி, ஆயுதப் போராட்டம் மூலம் வர்க்கப் புரட்சியை ஏற்படுத்துவதாகக் கூறிக்கொண்டு சிங்கள இளைஞர்கள் மத்தியில் ஒரு க்கவர்ச்சிமிகு சக்தியாக ரோகண விஜேவீர தலைமையில் உருவான ஜே.வி.பியின் 'புஸ்வான'மாகிப் போன 1971ம் ஆண்டின் ஏப்ரல் கிளர்ச்சியும் அதனைத் தொடர்ந்து அதனைச் சிறிமாவோ பண்டாரநாயக்க இந்திய உதவியுடன் ராணுவமுனையில் அடக்கியதும் சிறிலங்காவின் இரத்தக் கறைபடிந்த வரலாற்று நிகழ்வுகளாகும்

அப்போது அவர்கள் சோசலிச தத்துவத்தில் நம்பிக்கைகொண்ட பொதுவுடமைவாதிகளாக செஞ் சட்டையும்,சிவப்புத் தொப்பியும் அணிந்த புரட்சிக்காரர்களாக 'சேகுவேரா' என்ற மகத்தான புரட்சி வீரனின் பெயரைக் கொண்ட இயக்கத்தவர்களாக தம்மை இனங்காட்டிக்கொண்டனர்.

1971 துப்பாக்கி முனையில் அழிக்கப்பட்டு அடக்கப்பட்ட ஜே.வி.பி 1977இல் ஜே.ஆர் ஆட்சியில் மீண்டும் புத்துயிர் பெற்று ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்த மாஜிப் புரட்சிவாதிகளாகி மறு அவதாரம்கொண்டனர்.

தென்பகுதியில் ஜனநாயக நீரோட்டத்தில் இணைபவர்கள் பௌத்த சிங்கள பேரினவாதம் பேசினால் அரசியல் பண்ண முடியும் என்ற நிலை கொழுந்துவிட்டெரிந்த காலம் அதுவாகும். தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆயுதபோராட்டமாக கருக்கொள்ளத் தொடங்கிய காலமும் அதுதான்.

1987இல் இந்திய இலங்கை உடன்படிக்கையும் அதனைத் தொடர்ந்த இந்தியப் படையின் வருகையும் ஜே.வி.பியினரின் அரசியலுக்கு நல்ல தீனியாக அமைய, அவர்களின் இந்திய எதிர்ப்புப் பிரச்சாரமும், அரசியல்பழிவாங்கல் நடவடிக்கைகளும் தீவிரம் கொண்டன.

தென்னிலங்கை வீதிகளில் இரத்த ஆறு ஓடியது. ஆறுகளில் பிணங்கள் மிதந்தன, தெருக்களில் சந்திகளில் மனித உடல்கள் குற்றுயிராய் டயர்போட்டு எரிக்கப்பட்டது. சிங்கள அரசியல்வாதிகள் பலர் - இப்போதைய ஜனாதிபதி சந்திரிகாவின் கணவர் விஜயகுமாரணதுங்க உட்பட பலர் -படுகொலை செய்யப்பட்டனர்.

ஜே.வி.பி. என்ற மூன்றெழுத்து மரண பீதியை ஏற்படுத்தும் ஒன்றாகியது.

அப்போதைய சிறிலங்காவின் ஜனாதிபதி முள்ளை முள்ளால் எடுத்தழிக்கும் முறையைக் கையாண்டார். ஜே.வி.பி மீண்டுமொருமுறை அதன் தலைவர்களுடன் அழிக்கப்பட்டது.

எஞ்சிய தலைவர்களில் ஒருவரான (இவர் தான் ரோகண விஜேவீரவைக் காட்டிக்கொடுத்தவர் என்று கூறப்படுவதுமுண்டு.) சோமவன்ஸ அமரசிங்க என்பவர் ஐ.தே.கட்சியின் அப்போதைய பிரமுகர் சிறிசேன கூரேயினால் பாதுகாக்கப்பட்டு இந்தியாவூடாக இங்கிலாந்து சென்று தலைமறைவானார்

இது 1990இல் நடந்தது.

பின்னர் மீண்டும் 1994இல் புனரவதாரம் எடுத்த ஜே.வி.பி மீண்டும் அரைச் சோசலிஸ - அரை ஜனநாயக கோட்பாடுகளைப் பேச ஆரம்பித்தது.

பின் தாங்கள் தான் முற்றும் முழுதான தூய சிங்கள மக்களுக்கான ஜனநாயக அரசியல் சக்தி என பிரகடனம் செய்யத் தொடங்கினர்.

இடதுசாரித் தோற்றம் வலதுசாரிச் சிந்தனை என இரண்டும் கெட்டான்கோலமொன்றைக் கொண்டனர்.

1990களின் இறுதியில் சந்திரிகா அரசு வீழ்ச்சி முகத்தைக் கண்ட வேளையில் அவருக்கு முண்டு கொடுக்கும் சக்தியாக ஊடுருவி தம்மை



ரோகண விஜேவீர

நிலைநிறுத்திக் கொண்ட ஜே.வி.பி யினர் கடந்த பொதுத் தேர்தலில் பொ.ஐ.முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்து தந்திரமாக செயற்பட்டு, பொ.ஐ முன்னணி தோல்வியடைந்தாலும் தம்மை சிறிலங்காவின் மூன்றாவது அரசியல் சக்தியாக உருவாக்கிக் கொண்டனர்.

புதிய ரணிலின் ஐ.தே முன்னணி அரசு ஜே.வி.பி.யுடன் அரசமைக்க ஆரம்பத்தில் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட போதும் ஜே.வி.பி யினரின் கோரிக்கைகளுக்கு ரணிலால் இணங்கமுடியாத நிலையில் மீண்டும் பொ.ஐ.முன்னணியுடன் ஒட்டிக்கொண்ட ஜே.வி.பி யினர் பொ.ஐ.முன்னணியை உடைத்து அதன் வாக்கு வங்கியைத் தம்வசமாக்கும் முயற்சியின் ஓர் அங்கமாக தீவிர பௌத்த சிங்கள ஜனநாயக தீவிரவாதத்தை கொள்கையாக்கத்தொடங்கினர்.

இதுபற்றி மற்றொரு சிங்கள பௌத்த தீவிரவாதக் கோட்பாட்டு கட்சியான சிகல உறுமயவின் தலைவர்களில் ஒருவரான திலக்கருணாரட்ண கூறுகையில்,

'ஜே.வி.பி.யினர், தங்களது வாக்கு வங்கியை சிதைக்கவே இப்போது மிகப்பெரும் சிங்கள,பௌத்த தேச பக்தர்கள் போன்று பேச ஆரம்பித்துள்ளனர் என்றுள்ளார். அதாவது ஜே.வி.பி.யினருக்கு தேசப்பற்றை ஊட்டியது தாங்கள்தான் என்றுள்ளார்.

இப்போதைய நிலையில் சமாதான நகர்வுகளை எதிர்த்து விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கத்தைக் கண்டித்து, தீவிர இனவாதம் பேசத் தொடங்கியுள்ள ஜே.வி.பி, பொ.ஐ.முன்னணியையும், ஐ.தே.முன்னணியையும் சிங்கள பௌத்த மக்களின் நலனுக்கு எதிரான சக்திகள் என்றும் தாம்தான் சிறிலங்காவின் அடுத்த தலைமைத்துவ சக்திகள் என்றும் புலம்பத் தொடங்கியுள்ளனர்

இது ஒரு மூன்றாம்தர அரசியல் அணுகுமுறையென சிறிலங்காவின் ஏனைய இடதுசாரிகள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இரு பிரதான கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டும் என்று கூறும் சிறிலங்கா அமைச்சர் மகிந்த விஜேசேகர பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கு அவதூறு ஏற்படுத்த ஜே.வி.பி.யினர் முயற்சிகளை



மேற்கொண்டுள்ளனர் என்றும் சமீபத்தில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற அசம்பாவித சம்பவங்களின் பின்னணியில் ஜே.வி.பி.யினர்தான் செயற்பட்டனர் என்றும் குற்றம் சாட்டியுள்ளனர். இவரொரு முன்னாள் ஜே.வி.பி தலைவர் என்பதுதான் முக்கியவிடயமாகும். 1971 கிளர்ச்சியின் ரோகண விஜேவீரவுக்கு அடுத்த நிலைத் தலைவர்களில் ஒருவராக இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எது என்னவானாலும் பௌத்த சிங்கள பேரினவாதத் தீவிரவாத அரசியல் பேசுவோர் ஒரு மோசமான 'அரசியல்' வங்குரோத்து நிலைய்யை அடைந்துள்ளமையையே அவர்களின் அண்மைக்கால நடவடிக்கைகள் தெளிவாக்கி நிற்கின்றன.

'ஜே.வி.பி.யினர் உறுதியான கொள்கைப் பிடிப்பற்ற சந்தர்ப்பவாதிகள், இவர்களை எந்தவகையிலும் நம்பமுடியாது இணைந்து செயற்படவும் முடியாது' என சிகல உறுமயவின் திலக்கருணாரத்னா கூறும் ஜே.வி.பி தொடர்பான கருத்து மிகச் சரியானது என்பதை அவர்களின் செயல்முறைகளே நிரூபித்து வருகின்றன.

---

## நேர நிர்வாகம்



நமது நேரத்தைப் பயனுள்ள தாக்கிக்கொள்ள மேற்கொள்ளும் சுயநிர்வாக முறையையே நேர நிர்வாகம் என்று பொருள் கொள்ளலாம். இன்றைய அவசர உலகில் எமக்கு இருக்கின்ற வேலைகள் ஏராளம். எப்படியாயினும் நாங்கள் அந்த வேலைகளை குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் செய்து முடிக்க வேண்டிய தேவையும் இருக்கின்றது. இவற்றை நாங்கள் வேகமாகவும், சரியாகவும், சிரமமின்றியும் செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும். அதாவது எமக்கான நேரத்தை சிறந்த முறையில் பயன் படுத்திக்கொள்ள வேண்டும்.

நாங்கள் சிறுவயதில் இருக்கும்போதே அதிகாலையில் எழுதல், காலைக்கடன் முடித்தல், உணவு எடுத்தல், பாடசாலைக்குச் செல்லுதல் என்று எமக்கான நேரமும் வேலையும் வகுத்து வழங்கப்பட்டிருந்தன. இதே போன்றே எமக்கான நேரத்தினையும்,வேலையையும் வகுக்கப்பட்டதற்கு அமைவாக செய்து வருதல் வேண்டும்.

நேரத்தை வகுத்தல் என்பது தற்போது அநேகமானோரிடம் இருந்து வருகின்ற பழக்கம். அதனுடன் வேலையை வகுத்தல் (வேலையை இலகுவாக்கல்) என்பதையும் சேர்த்தால் இன்னும் நன்றாக இருக்கும். அதாவது உதாரணமாக ஒருவர் தனது அறைக்குத் தாமதமாக வருகின்றார் நன்றாக இருட்டிவிட்டதால் விளக்கு ஏற்றுவதற்கு தீப்பெட்டி இருக்கும் இடம் தெரிவில்லை. எனவே அவர் தனது அறையில் இருக்கும் மேசைகள், அலுமாரிகள், புத்தக அடுக்குகள், ஏனைய பொருட்கள் எல்லாவற்றிலும் தேடி பலநிமிட நேர முயற்சியின் பின் தீப்பெட்டி கிடைக்கின்றது. அதன்பின் அத்தீக்குச்சி வெளிச்சத்தில் விளக்கைத் தேடுகின்றார் விளக்கை கண்டுபிடிக்க இரு தீக்குச்சிகள் முடிகின்றன. அதன்பின் விளக்கை சுத்தம் செய்ய இருட்டில் கஸ்டப்படுகின்றார். பின் விளக்கை ஏற்றுகின்றார். இச்சம்பவத்திற்குப் பின் இரவு செய்துமுடிக்க வேண்டிய வேலைகள் அல்லது நாளைய வேலைக்கான திட்டமிடல் என்பவற்றைச் செய்யக்கூடிய சூழ்நிலை அற்று எரிச்சலும் தேவையற்றகோபமுமே எழும்.

இவ்வாறான சின்ன விடயங்களிலும் நமது செயற்பாடுகள் பாதிக்கப்படுமா என ஆச்சரியம் கிளம்பலாம் நமது மனம் - மனித மனம் வெளியே சென்று வரும்போது தாக்கங்கள்அழுத்தங்கள், ஆசைகள் என பல்வேறுபட்ட உணர்வுகளால் நிரம்பப்பெற்று வருகின்றது. அந்த உணர்வுகளுக்கான விடுதலையை எதிர்பார்த்து எமது வசிப்பிடம் நோக்கி வருகின்றோம். அங்கு இவ்வாறான சின்னப் பிரச்சினைகள் அழுத்தவே அவை கோபமும் எரிச்சலுமாக மாறுகின்றன.

இன்றைக்கும் நான் பார்த்து ஆச்சரியப்படுகின்ற விடயம். - நான் அறிந்த காலம்வரை ஒரு முதியவர் தனக்கான பொருட்களை அந்தந்த இடங்களிலேயே திட்டமிட்டு வைத்திருப்பார். பற்பசை, பற்தூரிகை என்றால் அது ஒரே இடமாகவும் வழலை (சோப்), சவர அலகு, கண்ணாடி இதர குளியல் பொருட்கள் அனைத்தும் ஒரே இடமாகவும் இருக்கும். எவ்வாறு ஒரு அழகான பூந்தோட்டத்தை அமைக்கத் திட்டமிடுகின்றோமோ அவ்வாறே எமது வாழ்க்கைப் பூந்தோட்டத்தையும் திட்டமிட்டால் அங்கு வசந்தம் வீசுமல்லவா?

நேர முதலீடு

நாம் பணிக்குச் செலவிடும் நேரம் நமக்கு வெற்றியைப் பரிசாகத் தருகின்றது.

சிந்தனைக்கு ஒதுக்கும் நேரம் சக்திக்கு வித்திடுகின்றது.

உடற்பயிற்சி செய்யும் நேரம் உடல் ஆரோக்கியத்தை அளிக்கின்றது.

படிப்பதற்கு ஒதுக்கும் நேரம் அறிவை ஜீவநதியாக்குகின்றது.

பிறர்மீது அன்பு காட்டும் நேரம் அனந்தமான வாழ்வை அளிக்கின்றது.

சிரிப்பதற்கு செலவிடும் நேரம் துயர்நீக்கி மகிழ்ச்சியை அளிக்கின்றது.

புரட்சி மாறன்







ஆடிக்காற்று வீசத் தொடங்கியிருந்தது. ஐயா கொஞ்சம் முன்னதாகத்தான் வீடு திரும்பியிருந்தார். வழமையாக இந்த மாமரத்தின் அடியில் தான் ஐயா சாய்ந்து இருந்து சுருட்டுப் பிடிப்பார். வானத்தின் அழகை அங்குலம் அங்குலமாய் ரசிப்பார்.

அவரின் அருகே ஒன்றரை அங்குல விட்டமும் மூன்றடி நீளமானதுமான தடி ஒன்று எப்போதும் இருக்கும். தெருக்கரையில் அநாதரவாக அழுதுகொண்டிருந்த குட்டிநாய் ஒன்றை அவர் சிறிதுகாலமாக வளர்த்து வருகிறார். அரியகுட்டி என்று அதற்குப் பெயர். அவர் வீட்டில் நின்றால் எப்போதும் அவரருகே அது படுத்திருக்கும். அதன் கழுத்துப் பகுதியை அவர் வருடிவிடுவார்.

ஐயா மச்சமாமிசம் எதுவுமே சாப்பிடமாட்டார். காலையில் ஒரு துண்டு பாணும் தேநீரும் உட்கொள்வார். பொழுது சாயும் போது வீடுவருவார். வந்த பிறகுதான் சோறு சாப்பிடுவார்.

நீண்ட காலமாக அவர் சமைத்துச் சாப்பிட்டு வந்தார். யாராவது பசி என்று வந்தால் அவர்களுக்கும் கொடுத்து உண்பார்.

கடந்த சில வருடங்களாகத்தான் அவர் வாழ்வில் மாற்றம் ஏற்பட்டிருந்தது. ஐயாவின் குடிசைவாசலில் இருந்து

**ஐயா இப்போது ஆண்டியல்ல.... பல கிளைகளைத் தாங்கும் ஆணிவேர். புதுமனிதர், உறவுகளின் அன்பில் ஊறித் திளைக்கும் ஒருவர்.**

பார்த்தால் கண்ணுக்கெட்டிய தூரம்வரை வயல்வெளியாகத் தெரியும். அவரிடம் ஒரு வேட்டைத்துப்பாக்கி இருந்தது. அந்தத் துப்பாக்கியால் ஒரு போதும் ஒரு உயிரைக்கூட அவர் துன்புறுத்தியது கிடையாது. ஆனால்- தூங்கும் போது தலைமாட்டில் துப்பாக்கியை வைத்துக் கொண்டுதான் அவர் தூங்குவார். இல்லாவிட்டால் அவருக்குத் தூக்கமே வராது.

அவருடைய பூர்வீகம் யாழ்ப்பாணமாயிருந்தது. இருபத்தியிரண்டு வயது இளைஞனாக கிருந்து வன்னிமண்ணில் குடியேறிய அவருக்கு அறுபத்து மூன்று வயதாகியிருந்தது. இத்தனைக்கும் தாயின் மரணவீட்டுக்கு மட்டும் ஒரு தடவை யாழ்ப்பாணம் 'போய் வந்திருந்தார். அதுவும் ஒரு இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னால்.

அவர் திருமணம் செய்து கொள்ளவில்லை. திருமணம் செய்யக்கூடாது என்கின்ற முடிவு எதுவும் அவரிடம் இருந்ததில்லை. அவர் படித்துக்கொண்டிருந்த காலத்தில் அவருடைய அம்மா சோதிடர் ஒருவரிடம் அவரை அழைத்துப் போனார். பல விடயங்களைக் கூறிய சோதிடர், 'இவர் துறவுவாழ்க்கை தான் வாழ்வார்' என்றும் கூறினார்.

அன்றிலிருந்து ஐயாவை அவருடைய அம்மா துறவியாகவே உருவாக்கத் தொடங்கினார்.

'பெடியா.. நீ இனி மச்சமாமிசம் சாப்பிடாதை..' என்று கூறினார். காலம் உருண்டது.

'பெடியனுக்கு வயதாகிவிட்டுது... எங்கையாலும் பொம்பிளையைப் பாக்கிறது தானே...' என்று யாராவது கேட்டால்.

'சாத்திரியார் சொல்லிப் போட்டார்... அவன் சாமியாரப் போலதான் வருவானாம் எண்டு... பிறகெதுக்கு ஒரு பொம்பிளயின்ர வாழ்க்கையை பாழாக்கவேணும்..?' அம்மாவின் பதில்.

ஐயா பிரமச்சாரியாகவே இருந்தார்.

இந்திய இராணுவம் இருந்த காலகட்டம் தான் ஐயாவுக்குச் சுவாரசியமானதாய் இருந்தது.

தலைமறைவாகியிருந்த போராளிகளுக்கு ஐயா நிறைய உதவினார். ஐயாவின் பாதுகாப்பில் அவர்கள் மறைந்திருந்தார்கள். அவர்களுக்கு ஐயா உணவு சேகரித்துக் கொடுத்தார். தெருக்களைக் கடப்பதற்கு உதவி புரிந்தார். அவர்களுடைய உடமைகளைப் பாதுகாத்தார்.

பிறகு ஐயா தன்னுடைய வயல் வேலைகளுடனும், பட்டியுடனும் ஒன்றித்துப் போனார்..... தன்னுடைய தனிப்பட்ட வாழ்வு குறித்து ஐயா ஒரு போதும் சிந்தித்தது கிடையாது. கவலைப்பட்டதும் கிடையாது.

யாழ் குடாநாட்டை சூரியக்கதிர் ஆக்கிரமித்தது, விமானங்கள் தலைக்கு மேலே பறந்து குடாநாட்டுக்குப் போய்க்கொண்டிருந்தன. ஐயாவுக்கு மனம் கலங்கியது. இரைந்து கொண்டு போகும் விமானங்களை வயல் வரம்பில் நின்று கொண்டு பார்ப்பார்.

இதுவரை காலமும் இல்லாமல் ஒரு வானொலிப்பெட்டி வாங்கிக் கொண்டார். மரக்கட்டிலின் அருகே ஸ்டூலில் அதை வைத்துவிட்டுச் செய்திகள் கேட்பார். ஊரையும் சனங்களையும் நினைத்து மனது பதறியது. யாழ்குடாநாட்டிலிருந்து மக்கள் இடம்பெயரத் தொடங்கிவிட்டார்கள். கந்தசஷ்டி விரதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஐயாவும் கோவிலுக்குப் போய்வந்தார். ஆனால் மனதில் அமைதி குலைந்து விட்டிருந்தது. மாரி மழையும் பொழிந்து கொண்டிருந்தது.

ஐயா கொஞ்சம் கண்ணயர்ந்து விட்டார் போலும், விடிகாலை வெளிச்சத்தில் மிசின்பெட்டி ஒன்று இரையும் சத்தம் கேட்டு அவர் எழுந்தார். ஐயாவின் பெயரைச் சொல்லி யாரோ கதைப்பது அவருக்குக் கேட்டது. சால்வைத் துண்டால் உடம்பைப் போர்த்துக் கொண்டு வெளியே வந்து எட்டிப் பார்த்தார்.

'என்னண்ணை என்னைத் தெரியேல்லையே...? நான்தான் சிவலை மணியம்.......' சிவலை மணியம் அவருக்கு தூரத்து உறவு.

'ஓ... அடட... வா.. உள்ளுக்கு வா.....'

'ரைக்ரருக்குள்ள ஆக்கள் இருக்கினம்... அங்காலை ஒரே செல் அடி... வீட்டைவிட்டு வெளிக்கிட்டுட்டம்..'

'பெரிய வளவு கிடக்கு... தாராளமா எல்லாரும் இருக்கலாம்... கூட்டியா எல்லாரையும்....'

மிசின்பெட்டி வளவுக்குள் நுழைந்து மாமரத்தின் கீழே நின்றது. பெண்களும், ஆண்களும்... குழந்தைகளுமாய்.. யார் எவர் என்று தெரியாவிட்டாலும் தன்னுடைய ஊரவர் என்பது ஐயாவுக்கு மகிழ்வாயிருந்தது.

இடுகாடு போலிருந்த ஐயாவின் வளவு கலகலப்பானது. அவருக்கும் உற்சாகமாயிருந்தது.

வீட்டில் எந்நேரமும் அடுப்பெரிந்தது. ஐயாவின் கட்டிலடிக்கே தேநீர் வந்தது. சுடச்சுட உணவு கிடைத்தது.

'நாங்களெல்லாம் இருக்க... நீங்கள் தனியச் சமைத்துச் சாப்பிடுறதே....'

ஐயாவைச் சமைக்கவிடாமல் உணவு அனுப்பினார்கள். சிரிப்பும் கதையுமாய் வீடு இன்புற்றது. அவரின் வளவுக்குள் பர்ணசாலைகள் போல புதிதுபுதிதாக கொட்டில்கள் முளைத்தன. கொட்டில்களின் முன்னால் பூஞ்செடிகள் பூத்துக் குலுங்கின... பிள்ளைகள் பள்ளிக்கூடம் போய் வந்தார்கள்... கூட்டுவாழ்க்கை எத்தனை இனிமையானது என்பதை முதல் முதலாக நினைத்து அவர் ஏங்கினார்.

காலம் வேகம் எடுத்துச் சுழன்றது.

ஐயாவின் வயலுக்குள் அவர்களும் வியர்வை சிந்தினார்கள். புகையிலை, வெங்காயம், மிளகாய் என்று பயிரிட்டார்கள்...

புதிதாகப் பிரசவங்கள் நிகழ்ந்தன. பூப்புநீராட்டு விழாக்கள் நிகழ்ந்தன. திருமணம் நிகழ்ந்தது. எல்லா நிகழ்வுகளிலும் ஐயா முன்னிறுத்தப்பட்டார். வெள்ளை வேட்டியும், சால்வையும், சந்தனப்பொட்டுமாக நின்றபோது. வாழ்க்கையின் அர்த்தங்கள் அவருக்குப் புரிந்தன.

குழந்தைகளை தோளிற் சுமந்து திரிந்தார். வெளியே போய் வருகையில் மிட்டாய்ப் பொட்டலங்கள் வாங்கிவந்தார். அம்மாவின் இறந்த நாளைப் பெரிதாகக் கொண்டாடி ஊருக்கு உணவுகொடுத்தார் சந்தோஷித்தார்.

அவரின் வீடு தேடி நிறையப் பேர் வந்தார்கள்.

யாழ்குடாநாட்டில் இருந்து தென்மராட்சியூடாக...கிளிநொச்சிவரை போர்மேகம் சூழ்ந்தது. ஏதிலிகளாய் மக்கள்....

விமானங்களின் பேயிரைச்சல்.. எறிகணைகளின் அதிர்வு.. யாழ் குடாநாட்டின் அவலங்களை அவர்கள் கூறியபோது அவருள்ளம் துடித்தது. அவலம் தருபவர்களைச் சபித்தார்.

இப்போது வன்னிப் பெருநிலப்பரப்பும் அந்தப் பேய்களின் குறியாய்... ஐயாவின் அயல் கிராமமான சுதந்திரபுரத்தின் மீது ஒரு நாள் நிகழ்ந்த கோரப்படுகொலை .... அவர் உறைந்துபோனார் அதே படுகொலைகள் பல இடங்களில் நிகழ்ந்தன.

ஐயா இப்போது ஆண்டியல்ல.... பல கிளைகளைத்

ஆதிலட்சுமி சிவகுமார்.

தாங்கும் ஆணிவேர். புதுமனிதர், உறவுகளின் அன்பில் ஊறித் திளைக்கும் ஒருவர்.

பொழுது சாய்ந்தால் ... வீட்டிற்குள் முடங்கி மரக்கட்டிலில் சுருட்டுப் புகைத்தபடி படுத்திருப்பவரல்ல அவர். பொழுதாகினால் ஐயாவின் கொட்டிலில் பெரியதோர் அரசியல் மாநாடு கூடும்.

இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி டி.எஸ். சேனநாயக்கவில் தொடங்கி - ரணில் வரை எல்லோர் வரலாறும் அலசப்படும். ஒஸாமா பின்லேடன் முதல் புஷ்வரை சிலாகிப்பார்கள். மாநாடு முடிந்து அவர்கள் உறங்கச் செல்கையில் பெரும்பாலும் வெள்ளி முளைத்துவிடும்.

போராளிகளின் வளர்ச்சி அவரை மகிழ்ச்சிப்படுத்தும் ஒருவேளை போராளிகள் தோற்றுவிடுவார்களோ என்கிற ஐயப்பாடும் சில வேளைகளில் அவருக்கு ஏற்படுவதுண்டு. அப்போதெல்லாம் அவர் மௌனமாகத் திரிவார். போராளிகள் ஒருபோதும் தோற்றுவிடக்கூடாதெனப் பிரார்த்திப்பார்.

ஆனையிறவு மீதான சமர் இடம்பெற்றுக்கொண்டிருந்தது. ஐயாவுக்கு மகிழ்ச்சி ஒருபுறம். ஏக்கம் மறுபுறமாய்.....

ஆனையிறவு வீழ்ந்தபோது ஐயா பெரும் மகிழ்ச்சியுற்றார். அரசியலில் மாற்றங்கள்... சமாதானத்துக்கான சமிக்ஞைகள்...2001 தலைவர் அவர்களின் மாவீரர்தின உரையின் பிரதிபலிப்பாய் ... சிங்கள மக்கள் தேர்தலில் காட்டிய மனமாற்றம் ...

கண்டிவீதிதிறப்பு ஐயாவுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தந்தது. ஐயாவின் வளவில் இருந்தவர்கள் கைதடிப்பாலத்தில் நெருக்குண்ட காயங்களையெல்லாம் மறந்து பூரித்தார்கள்.

'இந்தப் பாதையை இராணுவ நடவடிக்கையால திறந்துபோடுவம் எண்டு ரத்வத்த எவ்வளவு பாடுபட்டவர்... வீணா உயிருகளை பலியிட்டதுதான் மிச்சம்...'

ஐயா தாடியை உருவியபடி கூறினார்.

யாழ்குடாநாட்டுக்கான பஸ் சேவைகள் ஆரம்பமாகின. போராளிகள் அரசியல் பணிகளுக்காக அங்கே சென்றனர். இப்போது வானம் அமைதியாய் இருப்பதை ஐயா மகிழ்வுடன் பார்த்தார். பறவைகள் பயமின்றி மேகத்தின் உச்சியில் பொட்டாய்ப் பறந்து திரிந்தன.

ஆட்காட்டிகளின் அலறல்கள் இல்லை..

' ஐயா.... நாங்கள் வாற கிழமை ஊருக்குப் போறம்...' வேனிற்காலப் பறவைகள் தம் கூடுகளுக்குத் திரும்பத் தயாராகின. கால்நூற்றாண்டுக்கும் மேலாக அவர் மறந்திருந்த அன்பையும், பாசத்தையும் அவருக்கு நினைவிருத்திவிட்டு அவர்கள் ஊர் போக முடிவுசெய்தார்கள்.

'சந்தோஷமாப் போட்டுவாங்கோ..' ஒப்புக்குக் கூறினாலும் உள்ளே அவருக்கு வலி பிறந்தது. ஐந்து ஆறு வருடங்களாய் இந்த உறவுகள் ஏற்படுத்திய மனமாற்றத்தை அவர் இப்போது நினைத்துத் துன்பங்கொண்டார்.

அதிகாலைப் பொழுது. அவர்களை மீண்டும் ஊருக்கு அழைத்துச் செல்ல மிசின்பெட்டி தயாராக நின்றுகொண்டிருந்தது. பலாப்பழங்கள்..விறகுக்குற்றிகள், தென்னங்கன்றுகள், ஆடுகள், கோழிகள் என்று எல்லாம் மிசின்பெட்டிக்குள் நிரம்பின.


'போட்டுவாறம் ஐயா..'

பல குரல்கள் ஒன்றாய் ஒலித்தன.


'அண்ண.. உங்களைத் தனியா விட்டுட்டுப் போக மனதுக்கு ஒரு மாதிரியா இருக்கு... போட்டு வரட்டுமே..' சிவலை மணியம் குரல் கம்மக் கேட்டான். மிசின்பெட்டி ஸ்ராட் ஆனது.

மெதுவாக வளைந்து திரும்பி நேராக ஊர்ந்து.... கிறவல் தெருவில் ஏறியது மிசின்பெட்டி.

ஐயா கொஞ்சநேரம் அப்படியே நின்றார். கண்களில் நீர் தளம்பியது. திரும்பிப் பார்த்தார். அவருடைய அரியகுட்டி வாலாட்டியபடி அவர் கால் விரல்களை நக்கியது. அவர்கள் குடியிருந்த பர்ணசாலைகள் இருளில் அமிழ்ந்து கிடந்தன.



# நூல் நோக்கு




அண்மையில் (பங்குனி-2002) 'அலை'யின் எட்டாவது வெளியீடாக, அ.யேசுராசாவின் முயற்சியில் ஒரு மொழிபெயர்ப்புக் கவிதைத் தொகுப்பொன்று வெளிவந்திருக்கின்றது. ரமணி அவர்களின் சற்று வித்தியாசமான அட்டைப்பட ஓவியத்துடன், 'பனிமழை' எனும் பெயரில் வெளிவந் துள்ள இத்தொகுப்பில் சீனா, சிறிலங்கா, யூகோஸ்லாவியா, அமெரிக்கா, ஸ்பெயின், ரஷ்யா, இந்தியா, உருகுவே, இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்களான மொத்தம் பதின்நான்கு பேரின் இருபத்தாறு கவிதைகள் மொழிபெயர்ப்பாக வெளிவந்துள்ளன.

ஏ.ஜே.கனகரட்னா அவர்களுக்காகப் படைக்கப்பட்ட இத்தொகுப்பு, கணனி முறையில் வடிவமைக்கப்பட்டு, வாசகர்களைக் கவரக்கூடிய விதத்தில் கவிஞர் சோ.பத்மநாதன் அவர்களின் முன்னுரையோடு வெளிவந்துள்ளது.

கவிஞர் சோ.பத்மநாதன் அவர்கள் எழுதியது 'முன்னுரை' என்று கூறுவதைவிட, இந்நூலுக்கான 'ஒரு சிறு விமர்சனம்' என்று கூடக் கூறலாம். காரணம்: அவர் தமது முன்னுரையில் எழுதியுள்ள மொழி பெயர்ப்புக் கவிதைகளுக்கான பலவிடயங்களானது கவிதைத்துறையில் ஆர்வமுள்ளவர்களை மட்டுமல்லாது, அதற்கான தேடலை விரும்புகிறவர்களுக்கும் பயனுள்ளதாகவே அமைந்துள்ளது.

ஆயினும் இவர் தனது உரையில்- "மொழி பெயர்ப்பு, வாசகனுக்குப் புரியக்கூடியதாக, அவனைச் சிரமப்படுத்தாது எளிதில் சென்றடையக் கூடியதாக இருக்க வேண்டும். மொழி பெயர்ப்பாளனுடைய சொற்களஞ்சியம், வடிவம், பிரயோகம் முதலியவை வாசகனைப் புறமுதுகிட்டு ஓடச் செய்யக்கூடாது". அத்தோடு, "மூலத்துக்கு விசுவாசமாக இருக்கும் அதேவேளை, வாசகனுக்குப் புரியும் 'எளியநடை'யில் மொழிபெயர்ப்பு அமையவேண்டும்" (பக்: viii-ix) என்று கூறினாலும், இந்தத் தொகுப்பில் உள்ள சில கவிதைகள் எல்லோருக்கும் புரியக் கூடியதாக அமைந்துள்ளதா? என்றதானதொரு ஐயப்பாடு பரந்தளவில் எழுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கின்றது.

நூலின் பெயர்: பனிமழை (கவிதைத்தொகுதி)
நூலாசிரியர்: அ.யேசுராசா
வெளியீடு: 
அலைவெளியீடு
1.ஓடைக்கரைவீதி
குருநகர்
யாழ்ப்பாணம்.

மக்களுக்காகப் படைக்கப்படும் இலக்கியம் என்பது சாதாரண மக்கள் புரிந்து கொள்ளக் கூடியதான எளிய இலகுமொழி நடையில் எழுதப்படல் வேண்டும். படிமம், குறியீடுகள் அதிகம் நிறைந்த படைப்புக்களானது இலக்கியத்துறையோடு சம்பந்தப்பட்டவர்களுக்கும் மற்றும் இலக்கியத்தை 'தமதாக்கிக் கொண்டிருப்பவர்களுக்கும்' மட்டுமே விளங்குமே ஒழிய, புரியுமேயொழிய இலக்கியத்தை விரும்பும் அடிமட்டத்தில் உள்ள சாதாரண வாசகனால் புரிந்து கொள்ள முடியாது.

மொழி பெயர்ப்பாளன் என்பவன்- "நல்லதொரு கவிதையின் ஒரு சொல்லைத் தானும் மாற்றவோ குறைக்கவோ முடியாத" நிலையில், கவிதையின் "மூலமொழியின் நெளிவு சுழிவுகளைப் புரிந்து கொள்வதோடு, இலக்கு மொழியின் மரபோடு, பரிச்சயமும் அநாசயமான மொழியாட்சியும் வாய்ந்தனவாக இருக்க வேண்டும்" என்று கவிஞர் சோ.பத்மநாதன் தமது முன்னுரையில் குறிப்பிடுவதே யதார்த்தமாக இருந்தாலும், இப்பணியை எல்லோராலும் திறம்பட, நிறைவாகச் செய்ய முடிகின்றதா?

சில படைப்புக்களை அனுபவ உணர்வுகளுடாகவே புரிந்து கொள்ள முடிகின்றது. அதாவது, வாழ்க்கையோடு ஒன்றிய கடந்தகால அனுபவச் சுவடுகளை தனதாக்கிக் கொண்டிருக்கும் ஒரு வாசகனால், அந்த அனுபவத்தைப் பெற்றுக்கொண்ட ஒரு வேற்றுமொழிக் கவிஞனின் உணர்வுகளை அவனது படைப்பினூடாகவே பெற்றுக் கொள்ள முடியும்.

குறிப்பாக, 1932 இல் சீன தேசத்தில் தேசபக்த நடவடிக்கைகளுக்காக சிறையில் அடைக்கப்பட்ட அய்ஜிங் என்பவர் தனது 'பனிமழை' எனும் கவிதையில்-

"காலநதியில் மிதந்த என்னை

துயர அலைகள் அடிக்கடி
முழுமையாகவே அமிழ்த்தின.
அலைதலிலும்
சிறை அறைகளிலும்
பெறுமதியான
என் இளமை கழிந்தது"

-எனக் கூறும்போது, வெலிக்கடை, களுத்துறை மற்றும் பூசா சிறைகளில் சிங்களப்பேரின வாதத்தால் பல கொடுமைகளுக்கு ஆளாகி, துன்பப்பட்டு விடுதலையாகி வெளியிலே வந்தவர்களால் மட்டுமே சீனத்துக் கவிஞன் அய்ஜிங் என்பவனது மன உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியும்.

இந்தவகையில், இதன் மொழிபெயர்ப்பாளரைப் பாராட்டலாம்.

மேலும், இத்தொகுப்பின் கடைசிப் பக்கங்களில் எழுதப்பட்டிருக்கும் கவிதைகளுக்குரிய பதின்நான்கு படைப்பாளிகள் பற்றி சிறு குறிப்பில், யூகோஸ்லாவிய நாட்டைச் சேர்ந்த இரு கவிஞர்கள் உட்பட மற்றும் உருகுவே நாட்டைச் சேர்ந்த இன்னொரு கவிஞரின் குறிப்புக்களைத் தவிர, மற்றயவர்களின் குறிப்புக்களானது அவர்களின் காலத்தைப் புரிந்து கொள்ள முடிகின்றது/ உதவுகின்றது. ★

**- அம்மான்**

## மாத்திரைக் கதைகள் - மூன்று

உணர்ச்சிக்கவிஞர் காசிஆனந்தன்



### சுற்றம்

மலையின் உச்சியில் இருந்து பள்ளத்தாக்குக்குப் பாய்ந்த ஆற்றை, பள்ளத்தில் பச்சைப் பசேலென்று வளர்ந்திருந்த புற்களும் செடிகளும் மனமாரப் புகழ்ந்தன:-

'கீழே இருக்கிற எங்களை யார் கவனிக்கிறார்கள்...? ஆற்றை எப்படி மறப்போம்?'

கொழுத்த புல்லின் நிழலில் உரையாடலைக் கேட்டபடி படுத்திருந்த ஆமை சொன்னது:-

'பள்ளத் திருப்பார்.
உள்ளத் திரு' ★



### தாயகம்

கடற்கரை ஓரத்தில் படகைப் பார்த்து நண்டு கேட்டது:-

'வண்ண வண்ண மீன்களையெல்லாம் பிடித்துக் கொண்டு போனார்களே - எதற்கு?'

படகு அசைவற்றிருந்தது.
பின்பு அது சொன்னது:-

'அந்த மீன்களையெல்லாம் சின்னஞ்சிறு கண்ணாடித் தொட்டியில் அடைத்து வைத்திருக்கிறார்களாம்...'

'அப்புறம்'
படகு சொன்னது:-
'எட்டி எட்டி
அலையைத் தேடுகிறதாம்
தொட்டியிலே
கடல் மீன்' ★



### கறை

கடை.

தராசில் பொருட்களை ஏற்றும் போதெல்லாம் தட்டு ஒரு பக்கம் சாய்ந்தது. படிக்கல் இருக்கும் தட்டு மேலேயே நின்றது.

உருளைக்கிழங்குகளும் வெங்காயங்களும் இதை உற்றுக் கவனித்தன.

'ஓ! இது கொடுமை!' என்று கத்தியது உருளைக்கிழங்கு.

வெளியே தலை நீட்டிக்கொண்டிருந்த வெங்காயமும் 'இது பச்சைத் திருட்டு' என்று வயிற்றெரிச்சலைக் கொட்டியது.

இரண்டும் குரலெழுப்பின:-
'தராசை
முதலில்
எடைபோடு!' ★

## ஜீவனுள்ள நீழ்ச்சி...



குறிஞ்சிநிலம் தழுவி
ஒரு குரல்...
ஜீவனுள்ளதாய்
உனைப் போலவே
ஒலியெழுப்பியபடி
நீள்கிறது.
முரசொலிக்க
நாம் எழுவோம்.
முன்னே...
ஓயாது ஊசலாடும்
உனைப் போலவே
இன்றும்...
எமக்குள் கரைந்த
உன் உருவம்
முல்லைமண்தடவிய
காற்றோடு வந்து
முகம் தழுவுகிறது.
ஜீவநதியாய்
முட்டிமோதும்
எங்கள் நீழ்ச்சி
முரனிற்காய்
காத்திருக்கிறது.
நீ தழுவிய மண்
உனைப் போலவே
நீயிருப்பதாய்
மாற்றம் காண.

✧ கவிங்கன்

## ஒரு உறவின் பதில்

பாதைதிறந்தும்
இதுவரை ஏன்
வரவில்லை என
எழுதிவிட்ட என்
உடன்பிறப்பே!

எங்கள் மண்ணில் நிற்கும்
அந்நியக் காவலரணில்
என்னை அடையாளப்படுத்தி
என் நிலம் வருவதற்கு
என் மனம் ஏனோ
இன்னும் ஒப்பவில்லை
அதனால்

விலக்கிவர ஆவல்
இன்றேல் அமைதியாய்
அகற்றிவர ஆவல்
தாயகம் எங்கும் இன்றே
தாவிச் செல்ல ஆவல்

✧ வயவை அ.யூலியஸ்

## காலம் மாறுமா?

எங்கெங்கோ...
திசைமாறிச் சென்ற
சிட்டுக்கள் எல்லாம்
சிறகடித்து வருகின்றன
தம் கூடு நோக்கி.
அம்மாடா
இந்த அழகு காணவே
என்
கண்களுக்குக் கிடைத்த பாக்கியம்
போதும்.. போதும்...
ஒரேயொரு குறை
உள்ளது என் மனதில்...
மீண்டும் இந்த
சிட்டுக் கூட்டங்கள்
திசைமாறியலையும்
பொழுதொன்று பூக்குமோ?
ஏங்குகிறது இப்போதும்
என் மனது

✧ நிரோசா

## ஆற்றப்படாத் காயங்கள்

இளமை ஒளிர்கின்ற போராளியாய்
வாழ்ந்த காலத்தில்
சற்றும் எதிர்பாராமல் நிகழ்ந்ததுன் மரணம்

எப்போதும் போலவே பேசிச்சிரித்தபடி
விடைபெற்ற பொழுதின் பின்
நீ வீரச்சாவடைந்தாய்

போராயுதங்கள் பற்றிய பரிச்சயம்
நன்கறிந்தும்
நீ அப்படி ஆனாய்

மரணத்தின் கொடுவலி உணர்தலில்லாமல்
உன் போர்முகம் சிதைந்து போயிற்று
சிதைந்தே போயிற்று.

நினைவுக் கூர்மைகள் மனம் நிறைய
பிரிவின் வலியும் துக்கமும் எழ
பற்றைகளிலும் மரக்கொப்புகளிலும்
உன்னுடலைத் தேடித்திரிந்த கணங்களை

விரித்த சாறத்தில் குருதி சொட்டச்சொட்ட
சின்ன ஒரு பொதியாய்
உன்னை அள்ளி எடுத்த பின்

ஆற்றப்படாத காயங்களினால் மனம் நோக
வலிகள் பெருகும் வார்த்தைகளோடு
உன்னை தூக்கிச் சென்றோம்.

இனி இப்போர் வெளியில்
விழிகள் நிலை குத்திச் செல்கையில்
உனது கணங்கள் மனதில் நிறையும்
மனதில் நிறையும்
நிறைந்தபடியே இருக்கும்.

✧ தமிழ்மாறன்

# அமைதி யாருக்கு?

**- மாயா -**

ஆப்கானில் அமைதிநிலை நாட்டுப்படேல்லயெண்டா குழாய் அமைக்கிற வேலையைச் செய்யேலா தெண்டு எண்டு யூனோகால் நிறுவனம் அமெரிக்க நாடாளுமன்றத்திட்டயே போய்ச் சொல்லிப் போட்டுது.

அம்மேரிக்கா என்னதான் நெஞ்ச நிமித்திக் கொண்டு கதைச்சாலும் இன்னும் ரசியாவைப்பற்றி பயப்பிடத்தான் செய்யுது. ஏனெண்டா என்ன இருந்தாலும் ரசியாவின்ர அதிகாரியள் முதலாளியள். தங்கட மேலாதிக்க எண்ணங்கள இன்னுங் கைவிடேல்ல.

உதுபோச்சா சீனா இஞ்சால பெரிய தலையிடியா நிக்குது. இது ஆசிய நாடுகள்ள கனநாடுகளத் தன்ர எல்லையா வச்சிருக்கு. இவையோட என்னதான் வர்த்தக உறவுகளப் பேணினாலும்... அவையட ராணுவங்களும் பொருளாதாரமும் நெடுக கனவில வந்து வெருட்டுது. பின்ன.

எண்ணை வயலுகளை பிடிக்கிறதோட இதில வளைகுடா நாடுகள் வச்சிருக்கிற ஆதிக்கத்தை உடைக்கிறது இவயட கொள்கை இல்ல குறிக்கோள் அங்கால என்ன- 'ஒபெக்' நாடுகளயும் பிளந்து விட்டா கைமேல கம்மாரிசு.

ஆசியாவை முழுதும் கட்டுக்க வைக்க ஆப்கான் வேணும் அதுபோலதான் இஞ்சால உள்ள கடலுகள், கரையள் துறை முகங்கள். இப்படியொரு வலைக்குள்ளதான் நாங்கள் இப்ப நிக்கிறதும்.

உங்களுக்கு ஞாபகம் இருக்கோ. தென்னிந்தியக் கரையோரமாக சேதுதிட்டம் எண்டு ஒண்டைப்பற்றி பேசப்பட்டது. இந்த சேதுத்திட்டம் நிறைவேறினா... கொழும்பு காலி எல்லாம் காலியாக வேண்டிய நிலை வந்து சேரும். நல்லதோ கெட்டதோ. எங்கட தேசத்தின்ர தலைவிதி இந்தியாவோட பின்னுப்பட்டுத்தான் கிடக்கு.

அமைதிக்கான பேச்சுவார்த்தையத் துவக்க ரணிலய்யா முன்னுக்கு வந்தவர்தான். ஆனா வந்தவர் பதவிக்கு வந்த உடன இந்தியாவுக்கு ஓடுறார். இந்தியாவால திரும்பி சிங்கப்பூருக்கு ஓடுறார். அதாலவந்து அம்மேரிக்காவுக்கு ஓடுறார். ஆனா நோர்வேக்கோ தாய்வானுக்கோ, இல்ல தமிழீழத்துக்கயோ வரயில்ல. இதிலயிருந்தும் கொஞ்சம் சங்கதியள்வருது.

சும்மா... சும்மா... பேசப்போகினம் எண்டு நினைக்காதையுங்கோ. இதுக்குப் பின்னால பெரிய சுத்துமாத்து விவகாரம் இருக்கு கேளுங்கோ- இந்த தேசங்களுக்கிடையில கிடந்து தமிழர் முட்டுப்படுகிறது எப்பிடியெண்டு

சேது சமுத்திரத் திட்டம் இண்டையான் நேத்தையான் திட்டமில்லை இது. இங்கிலீசுக்காறத் தளவதியா இருந்த ஏ.டி.டெய்லர் போட்ட திட்டம். 1860ல என்ன நூற்றிநாப்பத்து ரெண்டு வருசம். போட்டா போட்டபடி கிடந்திட்டுது. பிரிட்டிசுக்காறனும் செய்யேல்ல பிறகு இந்தியாக்கறனும் செய்யேல்ல.

பிறகு இப்ப ஒரு ரெண்டுமூண்டு வருசத்துக்கு முதல் இந்தியாவின்ர பாதுகாப்பு மந்திரி. ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் இந்தத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வந்தார். எல்லாஞ்சரி இந்துசேது எங்ககிடக்கெண்டு தெரியுந்தான். தமிழ் நாட்டின்ர தென்கரையில இலங்கையின்ர வடரெண்டுக்கு இடையில உள்ளகடல் சேதுக்கடல்- இதாலதான் ராமர் அணைகட்டி இந்தியாவால இலங்கைக்கு வந்தவராம்.

அதாலதானோ என்னவோ இடைக்கிடை மணல்திட்டுகளும் ஆழங்குறைஞ்ச தண்ணியுமாக கிடக்கு அதால இந்தக் கடல்ல கப்பல் போகாது. அப்ப வெளிநாட்டுக் கப்பலுகள் எப்படிபோகுது.

இலங்கையச் சுத்திக் கொண்டுதான் போகுது. எட அதெண்டாலும் பறவாயில்ல. இந்தியாவின்ர கடலெல்லை 3500 கடல்மைல் பாருங்கோ ஆனா- மும்பாயிலயிருந்து கல்காத்தாவுக்கோ சென்னைக்கோ கூட இலங்கையச் சுத்தித்தான் போகோணும். தலையச் சுத்தி மூக்கத்தொடுற நிலைய மாத்திறத்துக்குத்தான், உந்த சேதுத்திட்டம் போட்டவையாம்- இப்படி இந்தத்திட்டம் போடாட்டி- பிரச்சனை பாருங்கோ. இந்தியாவின்ர கரைக்கடல் பாதுகாப்புக்கு சுத்திவாற கடல்ப்படை போர்க்கப்பலுகள் கூட கெந்தி விளையாடுறவை பழக்கோடு தாண்டினமாரி இலங்கைய சுத்தித்தான் வருது.

இப்பிடி சுத்திச்சுத்தி வரயுக்க கொழும்பிலும் காலியிலும் நிண்டுகிண்டு போவினம். அவைக்கும் இதில ஒரு வருமானம் இருக்கு. சுங்கத்தீர்வையெண்டு- இவை இப்பிடி சுத்திச் சுத்திப் போக- இங்கால குறுக்கால ஒரு பிரச்சினைவறுது. இந்தக் குறுக்கால போவார்- இலங்கையில தளம் அமைச்சா- அது இந்தியாவுக்கு சிக்கல். அங்கால எப்பன் தள்ளினாப்போல தெற்க கிடக்கிற டியார்கோகார்ஜியா தீவு அம்மேரிக்காவின்ர கடற்படைத்தளம் எல்லே. இப்ப என்னெண்டு பயமில்லாம நடுவால போறது. அம்மேரிக்கா இப்பிடி கடைக்கண்ணை இலங்கையில போட்டிருக்கிறதால தான் இந்தியா மாலைதீவைக் கண்ணுக்க வச்சிருக்கு.

சேதுத்திட்டம் சரிவந்துதோ- கனநாளா தட்டுப்பட்ட பிரச்சினையள் சரி வந்திடும். பின்ன இந்தியா அணுவாயுதம் வச்சு சுட்டுப்பாக்க, இவை வெருட்டிப் பாத்திச்சினம். ஆனா இந்தியா விடாப்பிடியா மாலைதீவில தானொரு கடற்படைத்தளமமைக்கவெல்லே போகுது. எல்லாம், சீனாவிட்ட தப்பத்தான், எண்டு சொன்னாலும்...

அமேரிக்காதான் முதல் பேதிக்குளிசை தந்தது. பின்ன முன்னயொருக்கா இலங்கை - இந்திய ஒப்பந்தம் நடந்ததெல்லே. ஏனெண்டிருக்கிறியள். கிட்ட வாங்கோ சொல்ல. எல்லாம் அம்மேரிக்காவ தள்ளி வைச்சிருக்கத்தான். இலங்கையில அம்மேரிக்கா காலூண்டாது எண்ட நினைப்பிலதான் இந்தத்திட்டத்த முதல் விட்டிட்டிருந்தவையாம். இப்ப என்னடாண்டா- பிரச்சினை மாறி இலங்கையில படையளுக்குப் பயிற்சி- இரணவில தொலைத்தொடர்பு, கூட்டுப்பயிற்சி, அதுஇதெண்டு அம்மேரிக்கா சினிமாகாட்ட வெளிக்கிடுதே.



பின்ன இந்தியாவும் தன்ர பவரக்காட்ட வெளிக்கிட்டா ஏற்கனவே இலங்கையில குறங்கொள்ளிதான் கிடக்கு. பிறகு சாம்பல்தான்- சேதுதிட்டம் வந்தா- கொழும்பு காலியெல்லாம் முடங்கிப்போம். அங்கால வடபகுதித் துறைமுகங்களை கண்கொண்டு பாக்கேலாதளவுக்கு வளந்திடும்.

பின்ன அம்மேரிக்காவுக்கு தலையும் இந்தியாவுக்கு வாலுங்காட்டினாத்தான் இலங்கை தப்பலாம். இப்ப என்னங்கோ இலங்கையும் இந்தியாவும் வர்த்தக உடன்படிக்கையில கையெழுத்துப் போட்டிருக்கினம்- பின்ன குலைக்கிற நாய்க்கு எலும்பு போட்டமாரி திருக்கணாமலையிலும் கொஞ்ச எண்ணைக்கானுகளக் குடுத்திருக்கு.

எல்லாம் அம்மேரிக்காவின்ர நலனையும் கொழும்பின்ர நலனையும் காப்பாத்திப் பாக்கத்தான்.

பின்ன சேதுத்திட்டத்தால 100 கடல்மைல் தூரம் கடல் ஆழமாக்கப் போகினமாம். 31 முதல் 37 அடிவரை ஆழமாக்கப் போகினமாம். இது மட்டும் சரி வந்தா. வெளிநாட்டுக் கப்பலுகள் கொழும்பில கொண்டே இறக்கிற சாமானுகள எட்டி காங்கேசந்துறையில இறக்கிப் போட்டுப் போயிருவினம். ஆனா வடபகுதித் துறைமுகத்தை ஒரு கேந்திர நிலையமாக்கிறதெண்டா சிங்கள அரசுக்கு வேப்பங்காயக் கடிச்சுத் தின்னுற மாதிரித் தானே இருக்கும்.

அய்யோ இதைக் கைவிடுங்கோ எண்டு கேக்க ரணிலய்யா போனாராம்- தலைமன்னாருக்கும் தூத்துக்குடிக்குமா பாலம் போடுவம் எண்டாராம்- இந்தியாவோட தரைத் தொடர்போ எண்டு அம்மா தலையக் குலுக்கிக் கொண்டாவாம்- லாவமில்லாம செட்டி ஆத்தக்கட்டி இறைப் பானே-

அமேரிக்காவும் கோவிக்காம இந்தியாவும் கோவிக்காம ஒரு மாதிரி இலங்கையின்ர வருமானமும் பாதிக்காம ஒரு நல்ல முடிவை எடுத்தாலும்- வடக்கில காங்கேசன் துறையும் கிழக்கில அம்பிலாந்துறையும், திருக்கணாமலையும் அமைதியா இருக்கோணுமோ. இவையள்ளுறத அள்ளி, அள்ளினதக் கொண்டுபோக,

ஏ-9 பாதைக்கே 500 மில்லியன் ரூவா குடுத்திருக்காம்- ஆனாக்க அந்தமடம் ஆகாட்டிக்கு சந்தைமடம்.

அடியுமில்லாம நுனியுமில்லாம பயங்கரவாதத்தை தடைசெய்யிறமெண்டு இவையேன் ஆளாளுக்கு பழமும் திண்டு கொட்டையும் போடுகினம்.

▲

# தமிழ் அரசியல் கைதிகளுக்கான வாக்குறுதிகள்... நிறைவேற்றத் தவறியதும் - வேண்டியதும்-



தமிழ் அரசியல் கைதிகளின் சமீபத்திய சாத்வீகப் போராட்டம் தொடர்பாக வழமையான எதிர்பார்ப்பு எதுவித மாற்றமும் இன்றி அப்படியே அரங்கேறியுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தில் முன்னரும் அரசியல்வாதிகள் யாராவது தலையிட்டு இவ்வாறான உண்ணாவிரதத்தை முடித்து வைத்துள்ளார்களே தவிர அதற்கப்பால் உருப்படியாக எதனையும் சாதித்ததாக இல்லை.

இது இன்று நேற்றல்ல. எப்போதாவது அரசியல் கைதிகள் எடுக்கும் இவ்வாறான ஆக்கபூர்வமான நடவடிக்கைக்கு அரசியல்வாதிகள் இடும் . முட்டுக்கட்டையும் இதுதான்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டும், தடுத்து வைக்கப்பட்டும், உரியகாலப் பகுதியில் விசாரணைகள் இன்றியும் விடுதலை இன்றியும் சிறையிலேயே வாழ்வின் பெரும்பாலான காலத்தைக் கழித்துவரும் இவர்கள் தமிழ் அரசியல் கைதிகள்.

எதுவித குற்றமும் இன்றி சந்தேகத்தின் பேரில் கைது செய்து ஊரை உறவைப் பிரிந்து வாழ்வின் இன்ப துன்பங்களில் கலந்திருக்கும் காலத்தை இழந்து சிறையிலேயே வாடும் இவர்கள் தமிழ் அரசியல் கைதிகள்.

தங்களை கைது செய்ததன் பின்னாவது விசாரணையைத் துரிதப்படுத்து அன்றேல் விடுதலை செய் எனக் கோரியே இவர்கள் சமீபத்தில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை தொடங்கினர். இதுவும் காலத்திற்குக் காலம் இவ் அரசியல் " நாங்களும் கைதிகளாக இருக்கின்றோம்" என அரசுக்கு நினைவூட்டும் நிகழ்வாகவே மாறி விட்டது.

இவ்வாறு இவர்கள் சாத்வீகப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. வருடக்கணக்கில் சிறையில் வாடும் தங்களை விசாரணை செய்து விடுதலை செய்வது, பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் கைதாகி தமிழ் அரசியல் கைதியாக சிறிலங்காவின் சிறையில் இருப்பது பாதுகாப்பற்றது. இது தமிழ் அரசியல் கைதிகளின் நிலையில் பொருத்தமானதும் நியாயமானதுமான முடிவு

1997ம் ஆண்டு களுத்துறைச் சிறையில் தமிழ்க் கைதிகள் மூவர் மர்மமாகக் கொலைசெய்யப்பட்டதைக் கண்டித்து ஏனைய 460 தமிழ் அரசியல் கைதிகளும் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

இதன்போதும் கூட தமிழ் அரசியல் தலைவர்கள் அரசியல் கைதிகளைப் பார்வையிட்டு வாக்குறுதிகளைக் கொடுத்ததோடு தங்களது செயற்பாடுகளை சாதுரியமாக நிறைவு செய்து கொண்டனர்.

இது இவ்வாறிருக்க தமிழ் அரசியல் கைதிகளை விசாரணை செய்து விடுதலை செய்வதற்கான சிபார்சினை கூடியவிரைவில் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிப்பதாக சிரேஷ்ட சட்டவாதியான சுகத்கம்லத் உறுதி கூறியதை அடுத்து தமிழ் அரசியல் கைதிகள் அன்றைய சாத்வீகப் போரை கைவிட்டிருந்தனர்.

ஏற்கனவே பல உறுதிமொழிகளை கண்துடைப்பாகவே கண்டிருந்த இக்கைதிகள் மிகவும் சிரமத்தின் மத்தியிலேயே உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டிருந்தனர். இக் காலப் பகுதியில் இவர்களுக்கு ஆதரவு தெரிவித்தும், இவர்களின் விசாரணைகள் சர்வதேசரீதியில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் கோரி லண்டனிலுள்ள "மனித உரிமைகளுக்கான தமிழ் மத்திய நிலையத்தினர்" ஆர்ப்பாட்டம் ஒன்றையும் நடாத்தி பிரதமதர் ரொனி பிளேயரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்திருந்தனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம் தொடர்பாக சர்வதேச மட்டத்திலும் இடித்துரைக்கப்பட்ட பின்பும் கூட சிறிலங்கா அரசு இவர்களுக்கான விசாரணையோ அன்றி விடுதலைக்கான நடவடிக்கையோ எடுக்காது மாறாக தமிழ் சிறைக் கைதிகளை காட்டுமிராண்டித்தனமா கொலை செய்து வந்தமையானது சிறிலங்காவின் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு வெட்கித் தலைகுனியும் விடயமாகவும் அமைந்துவிட்டது.

உரிய முறையில் விசாரணையும், விடுதலையும் செய்யமுடியாத அரசு உகந்த பாதுகாப்பையாவது அளிக்கமுடியாத நிலையிலும் உள்ளமைதான் கவலைக்குரியது.

இவ்வாறு தமிழ் அரசியல் கைதிகளுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க முடியாத அரசின் சிறையில் தற்போதுதொடர்ந்தும் கைதிகளாகவே இருப்பவர்கள் இம்மாதப் பகுதியிலும் ஒரு சாத்வீகப் போரை மேற்கொண்டிருந்தனர். விசாரணை செய் அல்லது விடுதலை செய் எனக்கோரி களுத்துறைச் சிறையில் சுமார் 51 கைதிகள் தொடங்கிய இந்த உண்ணாவிரதப் போராட்டத்திற்குஅடுத்ததாக மட்டக்களப்பு சிறையில் உள்ள கைதிகளும் சாத்வீகப் போரை தொடர்ந்தனர். இதனை அடுத்து யாழ்ப்பாணச் சிறைக்கைதிகளும் இவர்களுக்கு ஆதரவு தெரிவித்து சாத்வீகப் போரை தொடரவிருந்தனர்.

சிறிலங்காவில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளிலும் உள்ள தமிழ்க் கைதிகளின் ஒருமித்த குரலாக இந்த சாத்வீகப் போராட்டம் பரிணமித்து சர்வதேச அரங்கை எட்டிப்பிடிக்க இருந்த சந்தர்ப்பத்தில் மீண்டும் அரசியல்வாதிகள் தங்களது வழமையான திருவிளை யாடலைக் காட்டியிருக்கின்றனர்.

சிறையில் உண்ணாவிரப் போராட்டத்தைத் தொடர்ந்த கைதிகளுக்கு அமைச்சர் சந்திரசேகரனும், பா.உ ஜோசப்பரராஜசிங்கமும் இருவார காலத்திற்குள் இது தொடர்பான ஆக்கபூர்வமாக நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதியளித்து உண்ணாவிரதத்தை முடித்துவைத்துள்ளனர்.

தமிழ்த்தேசிய கட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டமா அதிபரையும், பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பனவையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சட்டத்தரணிகளும்சிறைக்கு விஜயம் செய்து பார்வையிட்டுள்ளனர்.

இதனைவிட தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளை விசாரிப்பதற்கென தனியாக மேல் நீதிமன்ற அமர்வுகளை ஏற்படுத்த நீதி அமைச்சர் லொக்குபண்டாரவும் இணங்கியுள்ளார்.

இவ்வாறு பல வாக்குறுதிகளை இம்முறையும் முழுமையாக நம்பி தமிழ் அரசியல் கைதிகள் தங்களின் உண்ணாவிரதத்தை கைவிட்டு தற்போது விசாரணைக்கான நாட்களை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

தமிழ் அரசியல் கைதிகள் வாக்குறுதிகளை நம்புவது இது முதற் தடவையல்ல. இது போன்று பல தடவைகள். தாங்கள் ஏமாற்றப்பட்ட பல வாக்குறுதிகள் போன்று தற்போதும் ஒரு வாக்குறுதியை நம்பி........?

உதட்டளவில் அல்லது தமிழ் அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் உளப்பூர்வமானதாக இம்முறையாவது உண்மையானதாக இருக்க வேண்டும் அல்லது அமைச்சர் சந்திரசேகரன் கூறியிருப்பது போன்று அரச தரப்பில் இம்முறையும் சாதகமான பதில்ஏதும் கிடைக்காத பட்சத்தில் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட மலையகப்பகுதிகளிலும் வெகுஜனப் போராட்டத்தைத் தொடர்ந்து சர்வதேச அரங்கிலாவது தமிழ் அரசியல் கைதிகளுக்கான விடிவை பெற்றுத்தர வேண்டும் செய்வார்களா........?

**எஸ்.வி.ஆர்.கஜன்**

# இன்னொரு போர்முகம்



**இது வரை வெள்ளி நாதத்தில் தொடராக வெளிவந்த இன்னொருபோர்முகம் சென்ற இதழுடன் முற்றுப் பெற்று விட்டது.**

**இத் தொடரை எழுதிய போராளி தூயவனின் இன்னொரு போர் முகம் தொடரிற்கான பின்னுரையாக இக் கட்டுரை வெளிவருகின்றது.**

## கதைக்கான பின்னுரை

1999ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் திருமலைக் காட்டினுள் பிரத்தியேகப் பணியொன்றிற்காகச் சென்றிருந்தேன். அவ்வனச் சூழல் என் மனத்திரையில் எதையாவது எழுதவேண்டுமெனும் எண்ணத்தை ஏற்படுத்தியது. எனது ஆவலை திருமலை மாவட்ட மருத்துவப் பொறுப்பாளராக இருந்த நியூட்டன் அவர்கள் புரிந்திருந்தார். அவர் சீனன்குடா விமானத்தள சண்டைக்கான வேவினை எடுத்த போராளி அருண்மொழி அவர்களை அறிமுகம் செய்துவைத்தார். ஆரம்பத்தில் பொழுது போக்காகவே சம்பவங்களை கேட்டறிந்து கொண்டேன். எனினும் இதில் காணப்பட்ட சுவாரஸ்யமான சம்பவங்கள் இதனை ஆவணப்படுத்தினால் நல்லது எனும் எண்ணத்தை ஏற்படுத்தியது. அதுவே இன்னொரு போர்முகமாக வெளிவந்துள்ளது.

எனினும் அச்சூழலில் நேரம் எடுத்து இலக்கியப் பணி செய்வதென்பது நடைமுறை கடினங்களைக் கொண்டது. ஒவ்வொரு நாளும் 20Kmக்கு மேல் நடந்து, காவலரண் களைக் கடந்து சென்று; பொதுமக்களுடன் உறவாடி உணவுப் பொருட்கள் சேகரித்து வரவேண்டும். உணவு தேடிச்சென்று உயிர்துறந் தவர்கள் பலர். ஐந்து நாட்கள் உணவிற்காக செலவழித்தால் தான் இரண்டு நாட்கள் சண்டைக்கான ஆயத்தங்களைச் செய்யலாம். இதனை விட பாதுகாப்புக் காரணங்க ளுக்காக அடிக்கடி இடங்கள் மாறவேண்டும். மூன்று பக்கம் இராணுவ முகாம்களினாலும், நான் காவது பக்கம் கடலினாலும் சூழப்பட்ட பகுதியினுள்ளேயே பணி யாற்றினோம். எமது பிரதான வேலை அப்பகுதி இராணுவத்தினர் மீது அடிக்கடி தொல்லை கொடுக்கும் தாக்குதல்களை நடத்த வேண்டும் என்பதே. காரணம் வன்னிப் பெருநிலப் பரப்பை ஊடறுக்கும் 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கைக்கு வலுவூட்டும் படைகளாக இங்கிருப்பவர்கள் அனுப்பப்படக் கூடாது என்பது மேற்படி காரணங்களினால் போராளிகளினது வேலைப்பழு அதிமாகக் காணப்பட்டது.

இதனைவிட காட்டு மரமொன்றின் கீழ் பக்கங்கள் அடைக்கப்படாத தற்காலிக கூடாரம் ஒன்றினுள் இருந்து சிறு குப்பிவிளக்கு வெளிச்சத்தில் எழுதும் போது காபன் புகை மூக்கினுள் சென்று அரிக்கும். தூரத்தில் குரங்குகள் கத்தும் சத்தமும் ஆந்தைகள் எழுப்பும் சத்தமும் இராணுவத்தின் விசேட காட்டுரோந்து அணியினாின் நகர்வுகளையும், அவர்களால் எம்மவர்கள் அடிக்கடி தாக்கப்பட்டு உயிர்நீத்த சம்பவங்களையும் ஞாபகம் ஊட்டும். பற்றைகளினுள் மறைந்திருக்கும் பகை வேவுப் பிரிவினரால் கண்காணிக்கப்படுகின்றோமோ, பதுங்கிச் சூட்டிற்கோ அல்லது கிளைமோர் தாக்குதலுக்கு ஏற்ற இலகுவான இலக்காக இருக்கின்றோமோ எனும் பயம் எட்டிப்பார்க்கவே செய்யும். சிறு அரவமும் செவிகளைக் கூர்மையாக்கும். எனினும் காவல் கடமையில் இருக்கும் போராளிகளில் உள்ள நம்பிக்கையும் அவர்கள் தயாரித்துத் தரும் சூடான தேநீரும் எழுத்து வேலையை ஊக்கப்படுத்தும். இந்தக் கதைக்கான தகவல்களைத் தந்த அருண்மொழியவர்கள் நன்றியறிதலுக்குரியவர். பல நாட்களாக வேவுத்தகவல்களுக்காக அலைந்து திரும்பியிருப்பார். மற்றவர்கள் ஓய்வெடுக்கச் சென்ற பின்னரும் இவர் சலிப்பின்றித் தகவல்க ளைத் தருவார். கைதிகள் விசாரிக்கப்படுவது போன்று விசாரணைக்கு உள்ளாவார். காகிதாகிகள் தேவையைப் பூர்த்தி செய்ய நியூட்டன் பல மைல்கள் தாண்டி கொண்டு வந்து தருவார். இக்கதை எழுதப்படும் போதே காட்டினுள் பல போராளிகள் இதனை வாசிக்க விரும்பினர். பூரணப்படுத்தப்படாமையால் அவர்களுக்கு அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அவர்களில் பலர் இன்று வீரச்சாவடைந்து விட்டனர்.



கரும்புலி மேஜர் சிற்றம்பலம் கரும்புலி கப்டன் நிஷாந்தன் கரும்புலி மேஜர் விஜயரூபன் லெப்.கேணல் நியூட்டன்

இலக்கிய வரையறைகள் தெரியாது ஆர்வத்தினால் மட்டும் ஆவணமாக்கப்பட்ட இதற்கு வாசகர்கள் விரும்பிய வடிவத்தைக் கொடுக்கலாம். ஒரு விடயத்தை உறுதியாகக் குறிப்பிடலாம். மிகச் சில இடங்கள் தவிர்ந்த ஏனையவை கற்பனைக் கலப்பற்ற உண்மைகளால் நிறைந்தவை. கேள்வியுற்ற சம்பவங்களைச் சாட்சியாக இருந்து பதிவு செய்துள்ளேன். அவ்வளவுதான். மேலும் இக்கதையில் குறிப்பிடப்பட்ட கடினங்கள் உண்மையில் இதனைவிடப் பல மடங்கு அதிகமானவை என்பதை உறுதியாகக் கூறலாம். கதையைச் சுருக்கமாக முடிக்க வேண்டுமென் பதற்காக விபரணங்கள் பெரும்பாலும் தவிர்க்கப்பட்டுள்ளது. சில முக்கிய இராணுவ இரகசியங்கள் எனக் கருதப்பட்டமையும் தவிர்க்கப் பட்டுள்ளன. இக்காலப்பகுதியில் அம் மாவட்டத்தில் குறித்த போராளிகள் பங்கு பற்றிய பல சண்டைகளும் அவற்றிற்கான கடின முயற்சிகளும் கூறப்படவில்லை. இச்சமரின்போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மேஜர் சிற்றம்பலம், மேஜர் விஜய ரூபன், கப்டன் நிசாந்தன் மற்றும் இச்சமரின் போது மருத்துவராக கடமையாற்றிய வரும், இக்கதை உருவாக்கத்திற்கு உதவியாக இருந்தவருமான லெப்.கேணல் நியூட்டனின் படமும் இங்கே பிரசுரிக்கப்படுகின்றது. மேலும் இச்சமரில், பங்குபற்றி மீண்டவர்களில் சுபேசன், தனா, மங்கை போன்றவர்கள் வேறுபல சமர்களிலும் பங்குபற்றி இறுதியாக ஆனையிறவுத் தளம் மீதான தாக்குதலில் கரும்புலிகளாக வீரச்சாவைத் தழுவினார்கள்.

இக்கதையை வாசிக்கும் யாராவது ஒரு போராளியோ அல்லது எழுத்தாளனோ தான் கலந்து கொண்ட அல்லது மற்றவர்கள் கலந்து கொண்ட சமர்களை ஆவணப்படுத்த ஆர்வம் கொள்வாராகில் இக்கதை தன் இலக்கை அடைந்ததாகக் கருதப்படும் எம்மால் பெறப்படும் சுதந்திரத்திற்காக கொடுக்கப்படும் விலையை எதிர்காலச் சந்ததி விளங்கிக்கொள்ள இன்னொரு போர்முகம் எனும் இக்கதை குண்டூசி முனையளவு தானும் பயன்படுமாயின் நான் பிறவிப் பயனடைந்தவனாவேன்.

நன்றி.

**- தூயவன் -**

---





## அந்தக் கடைசிக் கணத்திலும் ...

கும்...கும்...கும்... எறிகணை வீழ்ந்து வெடித்த சத்தத்தில் சாரத்திற்குள் சுருண்டு படுத்திருந்த வஞ்சி திடுக்கிட்டு எழுந்தாள். கொட்டிக் கொண்டிருந்த பனித்துளிகளால் விறைத்திருந்த உடல் மீண்டும் தன்னை சாரத்துக்குள் புகுத்தும்படி கெஞ்சியது.

காவல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தோழியிடம் "நேரம் என்ன செவ்வந்தி?" என்று கேட்டாள். 'நாலுமணியாகுது. நித்திரை கொண்டது காணும் பொசிசனுக்கு வாங்கோ அம்மையாரே" என்றாள் தோழி.

துள்ளியெழுந்த வஞ்சி தனது பீ.கே.எல்.எம்.ஜீ யை தூக்கிக் கொண்டு, அருகிலிருந்த மரத்தினடியில் வைத்துவிட்டு, மரத்தில் சாய்ந்து நின்றபடி, எதிரியின் பிரதேசத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். அங்கே எதிரியின் காவல் அரண்களிற்கும் இவர்களின் காவலரண்களிற்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் இவளது வீடு மொட்டைச் சுவருடன் அவளைப் பரிதாபமாய் பார்த்துக் கொண்டிருந்தது. முரசுமோட்டை என்னும் பெயருடைய அந்த அழகிய கிராமம் அமைதியாய் உறங்கிக் கொண்டிருந்தது. வாணியின் வீட்டுக்கு அவசர அவசரமாய் ஓடிவந்த மாமா "அவன் வந்திட்டான். சனமெல்லாம் ஓடுதுகள். நீங்கள் நித்திரை கொள்ளிறியள். கெதியா வெளிக்கிடுங்கோ"

கையில் அகப்பட்ட பொருட்களைத் தூக்கிக்கொண்டு அயலவர்களோடு இணைந்து கொண்டது வாணியின் குடும்பம். வீடிழந்து, சொத்திழந்து, சுகமிழந்து உயிரையாவது காப்பாற்றிக்கொள்வோம் என்ற துடிப்புடன் ஓடிக்கொண்டிருந்த மக்கள் மீது இராணுவத்தினர் ஏவிய எறிகணைகள் வீழ்ந்து வெடிக்கத் தொடங்கின.

'ஐயோ...அம்மா...காப்பாற்றுங்கோ... காப்பாற்றுங்கோ...' அவலக்குரல்கள் ஓங்கி ஒலித்து தேய்ந்து போயின. யார்?யாரைக் காப்பாற்றுவது.

பிள்ளைகளை இழந்த பெற்றோரும், பெற்றோரை இழந்த பிள்ளைகளும், கணவனை இழந்த மனைவியும், மனைவியை இழந்த கணவனுமாய்.. பல குடும்பங்கள் சிதைந்துபோயின. இந்த அவலத்திற்குள்ளாகிய குடும்பங்களில் வாணியின் குடும்பமும் ஒன்று. வாணியின் கடைக்குட்டித் தம்பியும், அம்மாவும், அப்பாவும், இவளையும் தம்பி ரஞ்சனையும் அனாதைகளாக்கிவிட்டுச் சென்றுவிட்டனர்.

ஐந்து வயது நிரம்பிய தம்பிக்கும், பதினைந்து வயது நிரம்பிய வாணிக்கும் பாலசிங்கம் மாமாவின் வீடுதான் அடைக்கலம். கண்முன்னால் உடல்சிதறி பலியாகிய குட்டித் தம்பியும், அம்மாவும், அப்பாவும் அடிக்கடி அவள் முன்தோன்றி அவளை அழவைத்தனர். ஒன்றும் அறியா பச்சிளம் பாலகனான தம்பியும் பாசத்தைக் கொட்டி வளர்த்த அம்மாவும், அப்பாவும் நிர்க்கதியாய் அவர்களைத் தவிக்கவிட்டு சென்றது கொடுமை.

"அக்கா எங்கட அம்மாவையும், அப்பாவையும், தம்பியையும் கொன்றவர்களை நான் கொல்லுவேன் அக்கா" இது தம்பி ரஞ்சனின் வாயிலிருந்து அடிக்கடி வரும் வார்த்தைகள்.

அந்த பிஞ்சு மனதில் ஏற்பட்ட தாக்கத்தை எண்ணியெண்ணி அவள் இளநெஞ்சம் துடிக்கும். எமது குடும்பத்திற்கு ஏற்பட்ட இந்த அவலம் எந்தக் குடும்பத்திற்கும் ஏற்படக்கூடாது. ஏற்படவிடக்கூடாது. சிந்தித்த வாணி தம்பி ரஞ்சனை காந்தரூபன் அறிவுச் சோலையில் சேர்த்துவிட்டு இன்று வஞ்சியாய்..

'சரசர...' என்ற சருகுச் சத்தம் அவளைக் கடந்த கால நினைவுகளிலிருந்து மீட்டுவந்தது. சத்தம் வந்த திசையை உற்றுநோக்கினாள். இராணுவத்தினர் அவளது நிலையை நோக்கி வந்து கொண்டிருந்தனர். ஒரு கணத்தில் அவள் தன்னை சுதாரித்துக் கொண்டாள். அவளது பி.கே இயங்கத் தொடங்கியது. சக தோழிகளது ஆயுதங்களும் சடசடக்கத் தொடங்கின. இருதரப்பினருக்கும் இடையில் கடும் மோதல். செல் மழையாய் பொழிந்துகொண்டிருந்தது.

எதிரி ஏவிய செல் அருகில் வீழ்ந்து வெடித்ததில் இவர்களது பொசிசன் நிலைகுலைந்தது. பீஸ் ஒன்று செவ்வந்தியின் வயிற்றைப் பதம் பார்த்தது. வஞ்சிக்கும் இக்கட்டான நிலை. முன்னேறிக் கொண்டிருக்கும் எதிரியைத் தாக்குவதா? வயிற்றை இரு கைகளாலும் பொத்திக்கொண்டு வேதனையால் துடித்துக் கொண்டிருக்கும் தோழியைக் காப்பாற்றுவதா?

அவள் உயிர்த்தோழி வேதனையோடு இவளைப் பார்த்த வண்ணம் மண்ணை முத்தமிட்டாள். அவளது காயத்திலிருந்து பெருகிய குருதியைக் கட்டுப் படுத்தி தோழியைக் காப்பாற்ற முடியாத இக்கட்டான நிலைக்கு உள்ளாகிவிட்டேனே. என் தோழி என் கண்முன்னாலேயே துடிதுடித்து இறந்துவிட்டாளே அவள் நெஞ்சம் வேதனையால் துவண்டது. தனியொருத்தியாய் நின்று ஆவேசத்தோடு எதிரியைத் தாக்கிக்கொண்டிருந்தாள். சீறி வந்த ரவையொன்று வஞ்சியின் இதயத்தைத் துளைத்தது. பீ.கே.பட்டில் அவள் தலை சாய்ந்தது.

பக்கத்து நிலைகளிலிருந்து போராளிகள் எதிரியை வஞ்சியின் பக்கம் நெருங்கவிடாது தடுத்துத் தாக்கினார்கள். பல மணி நேரங்கள் சண்டை தொடர்ந்தது. போராளிகளின் வீராவேசத் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது படையினர் இறந்த சகாக்களையும் கைவிட்டு, தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று தலைதெறிக்க ஓடிவிட்டனர்.

வஞ்சியின் நிலைக்கு விரைந்த தோழிகள் செவ்வந்தியையும், வஞ்சியையும் தூக்கியபோது; வஞ்சியின் பீ.கே.எல்.எம்.ஜீ 'சடசட' என ரவைகளைக் கக்கியது. அதிர்ச்சியடைந்த தோழிகள் என்னவென்று பார்த்தபோது வஞ்சியின் கைவிரல் விசைவில் காப்புக்குள் இருந்தது. 'எதிரியை அழிக்க வேண்டும் எம்மக்களைக் காப்பாற்ற வேண்டும்' என்ற எண்ணமே அவளுக்கு உயிர் பிரியும் அந்தக் கணத்திலும்...

**தமிழறிவு**

# வரிவிளம்பரம்

### அறிவுடைமை கல்வி நிலையம்

பிரதானசாலை, கிளிநொச்சி 2002, 2003 G.A.Q மாணவர்களுக்கான வகுப்புகளுக்கு B.A மாணவர்களுக்கான வகுப்புகள் சனி, ஞாயிறு கிழமைகளில் நடைபெறுகின்றன.

(சி.6980)

### சனி-வியாழ மாற்றம் எப்படி?

(சத்யாவின்) வியாழ மாற்ற பலாபலன்கள் (15/07/2003வரை) விற்பனையாகின்றது. பாடசாலைப் புத்தகங்கள், அலுவலக உபகரணங்கள். இலங்கை-இந்திய சஞ்சிகைகள், ஈழநாதம்-கொழும்பு தமிழ், ஆங்கில வாரப் பத்திரிகைகள் கிடைக்குமிடம்: அறிவொளி (ருக்மணி) புத்தகசாலை, சந்திக்கருகாமை, புதுக்குடியிருப்பு. (2048)

## இலத்திரனியல் பயிற்சி நெறி

(ஆரம்பம் 15.08.2002)

(TV, RADIO, VCR AND TELEPHONE)

### கணினி விற்பனை பிரதிநிதிகள்

(கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார்)

மேற்படி பயிற்சி நெறியை பயில விரும்புபவர்களும், பிரதிநிதிகள் பதவிக்கும் விண்ணப்பிக்க விரும்புபவர்களும் கீழுள்ள முகவரிக்கு 07.08.2002க்கு முன்னர் ரூபா30 காசுக்கட்டளை (வவுனியா தபால் நிலையத்தில் மாற்றக் கூடியதாக) அனுப்பி விபரத்தை பெற்றுக் கொள்ளவும் அல்லது நேரில் விபரத்தை பெற முடியும்.

விண்ணப்பம் அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

பணிப்பாளர் (பயிற்சி),
ஜப்பான் எலக்ரோனிக் என்ஜினியரிங்ஸ்,
இல 28, வவுனியா நிலையவீதி,
வவுனியா.

(சி.6979) தொ.பே.இல.024-21702

## 22ம் வருட நினைவலைகள்

பிறப்பு 14 - 11 - 1935



இறப்பு 02 - 08 - 1980

பொலிஸ் சார்ஜன்

### அமரர் சுவாம்பிள்ளை யோசவ் அன்ரன்

[கனால் வீதி, மாதகல்]

வாழும் காலம்தனில்...
அன்புடன் எமைக்காத்திட்ட தந்தாய்!
இன்றும் உம்மைப்பற்றி பெருமையோடு
கதைக்கும்-
இம்மண்ணில் - வாழும் எமக்காய்
இறைவனிடம் மன்றாடுவீர்.

த. முகவரி:
பற்றிமா சந்தி,
புதுக்குடியிருப்பு.

என்றும் உம் நினைவுகளுடன்
அன்புக் குடும்பத்தினர். (2311)

## D.C.M

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு அருகாமை)

AL. 2003 DAY பகல் நேர வகுப்பு

### கலை, வர்த்தகம்

பொருளியல் - S. வரதராஜன்
கணக்கீடு - B. முகுந்தன்
வணிகக்கல்வி - N. உமாகாந்த்
இ. நாகரீகம் - T. ஸ்ரீஸ்
தமிழ் - லிங்கம்
அளவையியல் - பவான்

ஆரம்பம் – 02-08-2002 வெள்ளி – 8.00 AM (2301)

### பல. நோ. கூட்டுறவுச் சங்கங்களுக்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கிறார்கள்

எமது உள்ளூர் உற்பத்தியை லாலா நீலசோப் சன்சயின் சோப் மொத்தமாக கொள்வனவு செய்து தமது சங்கக் கிளைகள் மூலம் எமது வன்னி மக்களுக்கு விநியோகித்துக் கொண்டு இருக்கும் சங்கத்தலைவர், பொதுமுகாமையாளர், கொள்வனவு உத்தியோகஸ்தர் கிளை முகாமையாளர்கள் ஊழியர்கள் மற்றும் ப.நோ.கூ சங்க உத்தியோகஸ்தருக்கும் எமது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்

உரிமையாளர்
லாலாசோப் தொழிற்சாலை
அச்சுவேலி

(2309)

# அறிவித்தல்

### வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது) கிளைக்குழு உறுப்பினர் தெரிவுக்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டத்தினை அழைத்தல்

நாட்டில் உருவாகிய அரசியல் சூழ்நிலைகளின் அசாதாரண நிலைமைகளினால் 1983ம் ஆண்டிலிருந்து சங்கத்தின் கிளைக்குழு உறுப்பினர், இயக்குனர்சபை உறுப்பினர் தெரிவு ஆகியவை இடம்பெற முடியவில்லை. நாட்டின் தற்போதைய சுமுகமான சூழ்நிலையில் சங்கத்தினது எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக ஜனநாயக ரீதியாக செய்யப்பட்ட நிர்வாகத்தினை உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக சங்கத்தின் கிளைக்குழு உறுப்பினர் தெரிவுக்கான கிளையின் பொதுச்சபைக் கூட்டங்கள் 10.08.2002 சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இக்கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்கு சங்கத்தினால் 31-05-2002ம் திகதியில் மூடப்பட்டு 26-06-2002 வரை கிளைகளில் காட்சிப்படுத்தப்பட்டு பெறப்பட்ட மேன்முறையீடுகள் ஆட்சேபனைகளை அடிப்படையாகக் கொண்டு இயக்குனர் சபையில் உறுதிப்படுத்தப்பட்ட உறுப்பினர் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்ட உறுப்பினர்கள் மட்டுமே சமூகமளித்து பங்குபற்றமுடியும்.

கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்கான அழைப்புக் கடிதங்கள் தங்களுக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் அனுப்பிவைக்கப்படும்.

துரதிஷ்டவசமாக உறுப்பினர்களின் முழுமையான முகவரி சங்கத்தில் இல்லாததுடன் சூழ்நிலைகளால் இயங்காத கிளைகளின் உறுப்பினர்கள் இடம்பெயர்ந்துள்ளதனால் நேரடியாக அனுப்பமுடியவில்லை.இவ்வாறான அங்கத்தவர்கள் ப.நோ.கூட்.சங்கத்தின் செயலாளர் பொதுமுகாமையாளருடன் தொடர்புகொண்டு அழைப்புக்கடிதங்களை பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி உறுப்பினர் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்ட உறுப்பினர்கள் அழைப்புக் கடிதங்கள் தவிர்க்க முடியாத காரணங்களினால் கிடைக்கப்பெற முடியாவிடினும் தங்களை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணச் சான்றுகளுடன் என்னால் வெளியிடப்படும் விளம்பரத்தில் குறிப்பிடப்படும் இடத்திற்கு சமூகமளிக்கலாம்.

மேலும் இடப்பெயர்வின்போது மூடப்பட்டுள்ள சேமமடு கள்ளிக்குளம் , இரணை இலுப்பைக்குளம், நொச்சிமோட்டை, ஓமந்தை ஆறுமுகத்தான் புதுக்குளம் ஆகிய எல்லா இயங்காத கிளைகளுக்கும் கிளை பொதுசபை கூட்டங்கள் வவுனியா நகரத்திலும் நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

ஆகையால் இக்கிளைக்கு உறுப்பினர் தெரிவிற்கு வேண்டிய ஒத்துழைப்பை நல்கி தெரிவு செய்யப்பட்ட இயக்குனர் சபையை உருவாக்க உதவும் வண்ணம் தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கூ.அ.உ.ஆணையாளர் அலுவலகம்
புகையிரத நிலைய வீதி,
வவுனியா.

கு.பாலசுப்பிரமணியம்
கூ.அ.உ.ஆணையாளர்
வவுனியா.

(சி.6978)

## 1ம் ஆண்டு நீங்காத நினைவில்



மடியில் 05 - 02 -1981
மண்ணில் 13 - 08- 2001

### தர்மகுலசிங்கம் ஜெகதீஸ் ஜெகன்

(கரந்தாய், பளை)

எம் ஆருயிர்ச் செல்வமே, அழகுறச் சிரித்து அன்பைச் சொரியும் அண்ணாவே, பெற்றவர் உடன் பிறப்பினை பிரியத் துடித்து பல கனவுகளுடன் கனடா செல்லவிருந்த கவிக்குயிலே, கயவரின் மிக் விமானம் கண் வைத்தானோ?
ஐயோ........................................ ஜெகன்....................................
கோட்டைகள் இடிந்து வீழ்ந்ததடா, கண்ணீர் சொரிந்ததையா.
கம்பீரமான உன் அப்பா சோர்வு சுமந்து, சோகத்தில் தாடி முளைத்த வதனத்துடன் தன்மகனை தேடுகையில், அன்னையோ உனை நினைத்து உணவின்றி உடலொடுங்கி துடித்துத் தவிக்கிறாரே அண்ணாவே பார்த்துச் சகிப்பதெப்படி? நாவறண்டு கதறுகிறோம் மீண்டும் ஓடி வந்திடையா.

த.மு:
புதிய புன்னைநீராவி,
296, விசுவமடு.

துயர் சுமக்கும்
அப்பா குலம், அம்மா ராணி
சகோதரிகள் ஜினோ, வினோ.

(சி.6983)

### லாலா நீல சோப் சன்சயின் சோப்

எமது வன்னி மண்ணில் சகல கடைகளிலும்
ப.நோ.கூட்டுறவுச்சங்க கிளைகளிலும்
விற்பனையாகின்றது.

ஒரு முறை பாவித்து பாருங்கள்
ஒன்றின் விலை 13.00

லாலா சோப் தொழிலகம்
அச்சுவேலி

(3208)

### வெளிவந்து விட்டது

## வளர்பிறை

வன்னி மண்ணிலிருந்து முதலாவது உளவளத்துணை.
உளவியல் காலாண்டுச் சஞ்சிகை.
வாங்கி வாசியுங்கள்.
அருகில் உள்ள பொத்தகசாலைகளில் கிடைக்கும்.

வெளியீடு: அன்னை இல்லம்,
அக்கராயன்,
கிளிநொச்சி.

(சி-6982)

சிறந்தமுறையில் அச்சு வேலைகளுக்கு....

கிளிநொச்சியில்....
அழகன் பதிப்பகம்

புதுக்குடியிருப்பில்
சந்திரன் பதிப்பகம்

கிளி.இல்
முடியரசி பதிப்பகம்

ஒப்செற் முறையில்
துண்டுப்பிரசுரங்கள்
அலுவலக அச்சு வேலைகள்
பரீட்சை வினாத்தாள்கள்
உட்பட அனைத்து
அச்சுவேலைகளும்
தரமாகவும்
குறித்த தவணையிலும்
செய்து கொடுக்கப்படும்



# இளைய நாதம்

## கெட்டிக்கார ஆச்சி



ஒரு ஊரில் ஒரு வயதான ஆச்சி வசித்து வந்தாள். அவளுக்கு நான்கு பிள்ளைகள். நான்கும் பொம்பிளைப் பிள்ளைகள். நால்வருக்கும் வெளியூர்களில் திருமணம் செய்து வைத்தாள். நான்கு பெண்கள் வீட்டிலும் மூன்று மாதங்கள் தங்குவாள். ஒரு முறை மூன்றாவது மகளின் வீட்டுக்குச் சென்றாள்.

செல்லும் வழியில் பெரிய காடு - தாகமாகவும் இருந்தது. பக்கத்தில் ஆறு இருந்தது. ஆற்றில் தண்ணியை குடித்து விட்டு வேகமாக நடந்தாள். அப்போது ஆச்சிக்கு முன்னால் பெரிய சிங்கம் ஒன்று பாய்ந்து வந்து ஏளனமாகச் சிரித்தது.

"ஏய் கிழவி ..... எனக்கு ஒரே பசி- நான் உன்னைச் சாப்பிடப் போகிறேன். இதோ உன் மேல் பாய்கிறேன்" என்றது சிங்கம். ஆச்சி பயப்பிடவில்லை.

" ஏய் முட்டாள் சிங்கமே... நான் ஒல்லியாக இப்படி எலும்புக்கூடாக இருக்கிறேன். என்னை சாப்பிட்டால் உன் பசி அடங்காது. நான் மகள் வீட்டை போகிறன். சாப்பிட்டு நல்லாக்கொழுத்து வருகிறேன். அப்போது சாப்பிட்டால் தானே உன் பசி அடங்கும்" என்றாள் ஆச்சி.

சிங்கம் யோசித்தது "என்னை ஏமாற்றலாம் என்று மட்டும் நினைக்காதே. எப்பொழுதும் இந்த இடத்தில் தான் இருப்பேன். எப்பொழுது வருவாய் என்று காத்துக் கொண்டு தான் இருப்பேன் என்று உறுமியது சிங்கம். ஆச்சி மூன்று மாதம் கழித்து வருவதாக கூறிவிட்டுச் சென்றாள். சிங்கம் அவளது வருகைக்காக காத்திருந்தது.

ஆச்சி மகளுக்கு நடந்தவைகளைக்கூறினாள். மகள், மூன்று மாதம் கழிந்ததும் ஆச்சியை சிங்கத்திடம் அகப்படாதவாறு வழியனுப்ப ஆயத்தமானாள்.

ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த ஒரு பெரிய பானையை எடுத்து வந்து ஆச்சியைக் கூட்டிச் சென்றாள். அந்தக் காட்டுப் பகுதியில் அதே சிங்கம் அவளுக்காக காத்திருந்தது. அது மேட்டுப்பகுதி என்ற படியால் ஆச்சி சிங்கத்திடம் இருந்து தப்புவாள் என்ற நம்பிக்கை மகளுக்கு.

அந்தப் பெரிய பானைக்குள் ஆச்சியை இருத்தி விட்டு மகள் மூடியினால் பானையை மூடினாள். அவள் சுவாசிப்பதற்காக பானையைச் சுற்றி ஓட்டைகளும் போட்டிருந்தாள். அப்படியே ஆச்சியை உருட்டி விட்டாள்.

" டம டம " என்று பானை உருண்டு வருவதைக் கண்ட சிங்கம் கிழவி தான் ஏதோ தந்திரம் செய்கிறாள் என உணர்ந்து பானையை தடுத்து நிறுத்தியது. ஆச்சி பானையைத் திறந்து வெளியே வந்தாள்.

." உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று பாய்ந்தது சிங்கம்.

" நில் சிங்கமே, என்னுடைய கடைசி ஆசையை நிறைவேற்று" என்றாள் ஆச்சி.

" என்ன ஆசை" என்றது சிங்கம்.

"பக்கத்தில் இருக்கும் ஆற்றில் குளித்து விட்டு சுத்தமாக வருகிறேன். அதன் பிறகு என்னைச் சாப்பிடு " என்றாள். சிங்கம் அதற்குச் சம்மதித்தது.

"சிங்கமே என்னையா சாப்பிடப் போகிறாய்? இரு உன் உயிருக்கே உலை வைக்கிறேன் " என நினைத்துக் கொண்டு ஆச்சி ஆற்றுக் குள் இறங்கினாள்.

கனநேரமாகியும் ஆச்சி வரவில்லை சிங்கம் ஆற்றுக்குச் சென்றது. ஆச்சியைப் பார்த்து "கெதியா வெளியே வா - எனக்குப் பசிக்கிறது" என்றது.

"எனக்குத் தலை சுற்றுகிறது. எழும்பி நடக்க முடியவில்லை. நீ வந்து என் கையைப் பிடித்துச் செல்லு" என்றாள் ஆச்சி. அவளின் பேச்சை நம்பி சிங்கம் ஆற்றில் இறங்கியது.

சிங்கம் அருகில் வந்ததும் ஆற்று மணலை அள்ளி கண்களில் வீசினாள். வாயிலும் அள்ளிப் போட்டாள்.

சிங்கம் கண்தெரியாமல் துடித்தது. மண்ணை விழுங்க முடியாது திண்டாடியது. ஆச்சி அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு அதன் முகத்தை ஆற்றில் அமுக்கினாள். சிங்கம் மூச்சுத் திணறி இறந்தது.

ஆச்சி பெருமூச்சு விட்டபடி நிம்மதியாக வீட்டுக்குச் சென்றாள்.

✻ பிரஷகி

## வரலாற்றில் தடம் பதித்த விஞ்ஞானிகள் வரிசையில்...



### லூயி பாஸ்டர்

"ஐயோ, அம்மா நோகப் போகுதே" என்று டொக்ரர் கையிக்கு கிட்ட ஊசியைக் கொண்டு வரமுதலே அலறித் துடிக்கும் நீங்கள்" டொக்ரர் உங்களைப் பார்க்க நல்லவராக் கிடக்கு, மெதுவா ஊசியைப் போடுங்கோ என்ன" என்று "ஐஸ் வேறு வைச்சுக் கொண்டு நேரிலை சொல்லமாட்டியள், மனசுக்குள்ளை நினைப்பியள்என்ற உங்களின் அங்கலாய்ப்புக்களுக்குகாரணமான இந்த ஊசியைக் கண்டுபிடித்தவர் அந்த 'பாஸ்டர்' இறந்து நூற்றி ஏழு வருசமாச்சு பாருங்கோ!

இந்த 'லூகுமாஸ்ரர்' இல்லையில்லை'லூயிபாஸ்டரர்' முதலிலை மனிசருக்கு எப்படி நோய் வருதெண்டதைக் கண்டுபிடிச்சு, அதுக்குப் பரிகாரம் தேடப் போய்த் தான் இந்த ஊசிமூலம் மருந்தேற்றலாம் என்றதையும் கண்டுபிடிச்சாராம் சரியான 'புத்தி' மனுசனுக்கு! மனிசரின்ரை உடலுக்குள்ளை நுண்ணுயிர்கள் (BACTERIA ) உணவு, பானங்கள் ஆகியவற்றுடன் உள்ளே போகின்றனவாம். இதைத் தவிர்த்துக் கொள்ளுறதுக்காக உணவு வகைகளைச் சூடாக்கி சாப்பிடுமாறு வலியுறுத்தினாராம் தனது 50ஆவது வயதில் விலங்குகளைப் பீடித்திருந்த கரணை ( ANTHRA ) எனும் கொடிய நோயை ஆராய்ந்து நோய்களுக்கு நுண்ணுயிர்கள் தான் கரணமென்பதை நிருபித்தாராம். இதன்போதுதான் 'நோய் நுண்மத்தின்' ஆற்றல் குன்றிய இனம் ஒன்றை உற்பத்தி செய்து கால்நடைகளின் உடலில் ஊசிமூலம் ஏற்றியபோது கடுமையான அந்தக் ' கரணை' நோயைத் தாங்கும் எதிர்ப்பு சக்தி கால்நடைகளுக்கு கிடைத்ததாம். இந்த முறையினை வேற சில தொற்று நோய்களுக்கும் பயன்படுத்தலாம் என்பதனை அறிஞ்சினமாம்.

இவர் மேலும் தனது ஆராய்ச்சியின் போது நாய் வெறி நோய்க்கு (RABIES ) எதிராக செலுத்தும் முறையினை கண்டுபிடித்தாராம். இதனடிப்படையிலேயே மற்ற விஞ்ஞானிகள் சன்னிக் காய்ச்சல், இளம்பிள்ளை வாதம் போன்ற நோய்களைத் தடுப்பதற்கு 'அம்மை குத்தும்' முறையினை கண்டுபிடித்தனராம்.

அப்பாடி இவ்வாறு இந்த நுண்ணுயிர்களோடு இந்த லூயி பாஸ்டர் போராடிஇருக்கிறார் என்றால் பாருங்கோவன்.

- கல்யாணி

## வாரம் ஒரு குறள் அறிவோம்



நாம் என்றும் உண்மையே பேசிப்பழக வேண்டும்.

உண்மையே மனிதனை உயர்வாக்கும் சக்தியாகும். பொய்யானது எம்மை ஏதோ ஒரு வகையில் பல துன்பங்களையே எமக்குத் தரும்.

ஆனால் உண்மையையே பேசுவோமாயின் உலகத்திலே மிக மிக உயர்ந்த நிலையில் வைக்கப்பட்டு போற்றப்படுவோம்.

உண்மையின் பெருமையைக் கூறும் பொருட்டே திருவள்ளுவர் "வாய்மை எனும் அதிகாரத்தை எமக்குத்தந்து அழகான குறள்களாக வடித்துள்ளார். அதாவது ஒரு உயர்ந்தவனுக்கு பொய்யாமையே எல்லா விளக்கையும் விட சிறந்த விளக்காகும்.

**" எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்கு**
**பொய்யா விளக்கே விளக்கு"**

என்ற குறள் மூலம் தெட்டத்தெளிவாக விளக்கியுள்ளார்.

## வினாவும் வியப்பும்...

ஆடும் மயிலுக்கு
ஆயிரம் கண் வைத்தது யார்?
அதன் தோகை முழுவதற்கும்
அழகு வண்ணம் பூசியதார்?
அழகான மயிலதற்கு
ஆடல் கற்பித்தவர் யார்?
எழிலான இறகெல்லாம்
ஒளிர்கோலம் இட்டது யார்?
ஆடத்தெரிந்த மயில்
அழகாக இருந்தாலும்
பாடத்தொடங்கிவிட்டால்
பயங்கரமாய் இருப்பது ஏன்?
அழகாக உடல் படைத்து
அவலமாய் குரல்கொடுத்த
இயற்கையின் ரசனையோ
எனைத்திகைக்க வைக்கிறது....

மு. மாதங்கி
மட்டக்களப்பு

## விடுகதைகளுக்கு விடை என்ன?



(01) உள்ளே வெள்ளிப்பூட்டு .. வெளியே நார்பூட்டு... அது என்ன?

(02) கால் இல்லை தாவுவான்...வாயில்லை கத்துவான்.. அவன் யார்?

(03) வளைக்க முடியும் ...ஒடிக்க முடியாது... அது என்ன?

(04) நூறு கிளிக்கு ஒரே வால்... எப்படி?

(05) ஒல்லியான மனிதனுக்கு ஓரேயொருகாது... அது யார்?

(06) தொட்டால் சுருங்கிக்கு தொண்ணூறு கால்... அது எப்படி?

(07) திரி இல்லாமல் ஒளிரும் விளக்கு... எது?

(விடைகள் அடுத்த வாரம்)

க. சௌமினி
யாழ். இந்து மகளிர் கல்லூரி

## ரதனும் சுதனும்



ரதன்:- தொலைபேசியில், நம் குரல் வேறுமாதிரியாகப் பிறருக்குக் கேட்பதேன்?

சுதன்:- நாம் பேசும் போது உருவாகும் ஒலி அலைகள் வினாடிக்கு 4000 துடிப்புகள் வரை அதிர்வெண் கொண்டதாக இருக்கின்றன. குறைந்த அதிர்வெண் கட்டைக் குரலாகவும், உயர்ந்த அதிர்வெண் கீச்சுக் குரலாகவும் கேட்கும் இயல்புடையது.

நம் ஒவ்வொருவரின் குரலும், அவரவர் குரல்வளையின் தன்மைக்கேற்ப ஒரு குறிப்பிட்ட அதிர்வெண்வரிசையைக் (rangel) கொண்டிருக்கும். தொலைபேசியின் ஒலிபெருக்கிக் கருவி எல்லா அதிர்வெண்களையும் சமஅளவில் சீராக ஒலி பெருக்குவதில்லை. மிகவும் தாழ்வான அல்லது உயர்ந்த அதிர்வெண்கள் குறைவாகவும் இவற்றுக்கு இடைப்பட்ட அதிர்வெண்கள் அதிகமாகவும் பெருக்கமடைவதுண்டு. அப்போது நம் குரல், பிறருக்கு வேறுமாதிரியாகக் கேட்கிறது.

நல்ல தரம்வாய்ந்த ஒலிபெருக்கியைக் கொண்ட தொலைபேசியில் பேசும்போது, அனைத்து அதிர்வெண்களும் சம அளவில் பெருக்கமடைந்து, நம் குரல் நமதாகவே பிறருக்குக் கேட்கும்.











## ஜான்பன்யனும் பாதிரியாரும்..

இங்கிலாந்து நாட்டின் புகழ்பெற்ற எழுத்தாளர்களுள் ஒருவர் ஜான் பன்யன். அவர் ஒருமுறை மதவிரோதப் பிரசங்கம் செய்து விட்டார் என்று கூறி அவரைப் பிடித்து பெட்போர்டு என்னுமிடத்தில் சிறைவைத்துவிட்டார்கள். மதவெறி தாண்டவமாடிய காலம் அது.

ஒருநாள் பாதிரியார் ஒருவர் அவரைப் பார்ப்பதற்காகச் சிறைக்கூடம் வந்தார். ஜான் பன்யனுக்கு போதனை புரிந்து அவர் மனத்தை மாற்ற வேண்டும் என்பதே பாதிரியார் வந்ததின் நோக்கம். எனவே அவரைப் பார்த்து, "நண்பரே! நான் கடவுளிடமிருந்து உமக்கு ஒரு செய்தி கொண்டுவந்திருக்கிறேன். உம்மை இங்கிலாந்திலே உள்ள சிறைக்கூடங்களில் எல்லாம் தேடி அலைந்து பிறகு நீர் இங்கிருப்பதை அறிந்தேன்" என்று கூறினார்.

"என்ன கடவுளிடமிருந்து செய்தி கொண்டு வந்திருப்பதாகக் கூறுகிறீர்கள்: என்னைத்தேடி அலைந்ததாகவும் சொல்கிறீர்கள் நான் பன்னிரண்டு ஆண்டுகளாக இங்கிருப்பதுதான் கடவுளுக்கு நன்றாகத் தெரியுமே" என்று கேட்டார் பன்யன் பாதிரியாரைப் பார்த்து.

பாதிரியார் முகத்தில் ஈயாடவில்லை.

## பெர்னார்ட்ஷாவும் நாட்டியப் பெண்ணும் ..

ஒருநாள் பெர்னார்ட்ஷாவைச் சந்திக்க பிரபல நாட்டியப்பெண் வந்திருந்தார். இருவரும் பல விஷயங்கள் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். இறுதியில் அந்தப் பெண் " நீங்கள் ஒரு குழந்தையின் தந்தையாக ஆக வேண்டுமென்று நான் விரும்புகிறேன்" என்று கூறினாள்.

பெர்னார்ட்ஷா அப்பெண்ணை ஏறிட்டுப் பார்த்தார்.

"என்னையே நீங்கள் மணந்துகொண்டால் என்ன? நான் ஒரு சிறந்த நடனப்பெண், தாங்களோ தலைசிறந்த நாடக ஆசிரியர். நம்மிருவருக்கும் பிறக்கும் குழந்தை என் அழகும் உங்கள் அறிவும் பெற்றிருக்குமல்லவா? என்றார் அப்பெண். பெர்னார்ட்ஷாவின் கண்கள் சுடர்விட்டன. இதழ்களிலெல்லாம் ஏளன நகை. "அது சரி. என் அழகும் உங்கள் அறிவும் பெற்றுக் குழந்தை பிறந்துவிட்டால் ....? " ஷா கேட்டார். நாட்டியப் பெண் விழித்தாள்

## மறதி



" எழுந்திருங்கள், எழுந்திருங்கள்" என்று அவசரம் அவசரமாக மனைவி கணவனை எழுப்பினாள்.

" என்ன? என்ன நடந்துவிட்டது?" என்று தூக்கக் கலக்கத்துடன் எழுந்த கணவன் கேட்டான்.

" ஒன்றுமில்லை. உங்களுக்குத் தரவேண்டிய தூக்க மாத்திரையைத் தர மறந்து விட்டேன்" என்றாள் மனைவி.

# நறுக்கேன...



## பாதுகாப்பான அணுகுமுறை

முகமாலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் அத்துமீறி நுழைந்து இரு விடுதலைப் புலிகளை துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்திய சம்பவம் தொடர்பாக ரொய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கு கருத்துத்தெரிவித்த சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன - அந்த சம்பவத்தின்போது விடுதலைப்புலிகள் மிகவும் பொறுமையாக நடந்துகொண்டதாகக்கூறி பாராட்டியுள்ளார். மாரப்பன இப்படி விடுதலைப்புலிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் நியாயமான கருத்தைக் கூறியது இது இரண்டாவது தடவையாகும். இதற்கு முன்னர் கடந்த மார்ச் மாதத்தில் விடுதலைப் புலிகள் மீது அமெரிக்கா தெரிவித்த குற்றச்சாட்டை நிராகரித்த திலக்மாரப்பன அமெரிக்காவின் குற்றச்சாட்டுக்கு அர்த்தமற்று, இது சமாதான முயற்சிகளை எவ் வகையிலும் பாதிக்காது என உடனடியாகவே பதிலளித்திருந்தார்.

இந்த அணுகுமுறை சரியானதுதான். ஆனால் படைத்தரப்பு செய்யும் தவறுகளை, புரிந்துணர்வு உடன்படிக்கை மீறல்களை, சமாதான முயற்சிகளுக்கு எதிரான நகர்வுகளை ஒப்புக்கொள்ளவும், கண்டிக்கவும் அவர் முன்வருவாரேயானால் அவரது நேர்மையில் நூறுவீத நம்பிக்கையை வைக்கமுடியும்.

அப்படியான சந்தர்ப்பங்களில் அவர் மௌனம் காப்பவராக அல்லது சமாளிப்புக் கருத்தைக் கூறுபவராகவே இருந்துவருகிறார் என்றே நோக்கர்கள். கருதுகின்றனர்.

இப்போது இறந்துபோய்விட்ட அந்த சிப்பாய் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று கூறி பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்தாகிவிட்டது.

இதுபற்றி நடக்கப்போகும் விசாரணையிலும் இதுவே தீர்ப்பாக இருக்கும் என்பதில் ஐயமில்லை...

இதுவே சிறிலங்கா அரசுகளின் பாரம்பரிய அணுகுமுறை...

❑ ❑ ❑



## ஜெயலலிதாவின் வக்கிர உணர்ச்சி

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக அவரைச் செல்வி ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு கைது செய்து பயங்கரவாத தடைச்சட்டமான 'போடோ'வின் கீழ் சிறையில் அடைத்துள்ளமை தெரிந்ததே.....

இப்பொழுது டொக்டர் ராமதாஸ்,பழ நெடுமாறன் போன்றோரையும் கைது செய்ய யோசனை செய்து வ்ருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

கொஞ்சக் காலம் 'தடா'சட்டம் அமுலில் இருந்தவேளை இப்படித்தான் ஏராளமானோர் அரசியல் பழிவாங்கல்களின் ஒரு வெளிப்பாடாக கண்மூடித்தன மாகக் கைதுசெய்யப்பட்டு காலவரையறை யின்றி சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள்.

இத்தகைய கறுப்புச் சட்டங்களால் உணர்வுரீதியாக நெருப்பு மனிதர்களாக இருக்கும் எவரையும் எதுவும் செய்துவிட முடியாது என வரலாறு பல சந்தர்ப்பங்களில் உணர்த்தியுள்ளது.

ஒரு காலத்தில் 'தடா' நாயகியாக இருந்த ஜெயலிதா இப்போது 'போடோ' நாயகியாகியுள்ளார்- இவர் செய்வது அப்பட்டமான சுயநலத்துடன் கூடிய அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையே...

தர்மத்தின் வாழ்வுதனை சூதுகவ்வும்... தர்மம் மறுபடியும் வெல்லும் என்ற பாஞ்சாலிசபத பாரதியின் பாடல்வரிகளே ஜெயலலிதாவின் வக்கிர உணர்வுடன் கூடிய செயற்பாடுகளைப் பார்க்கையில் நினைவுக்கு வருகிறது.

❑ ❑ ❑



## ரணிலின் பேச்சுக்கள்

அமெரிக்காவில் ரணில் விக்கிரம சிங்க கொஞ்சம் உஷாராகத்தான் பேசியிருக்கிறார். கொஞ்சம் அவருடைய சுயத்தன்மை பகிரங்கமாகவே வெளிப்படும்படியாக பேசியிருக்கிறார் என்றுதான் கூறவேண்டும்.

விடுதலைப் புலிகள் பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொன்றவர்கள் என்றிருக்கிறார். வெளிநாடுகளின் நெருக்குதல்கள் காரணமாகத்தான் விடுதலைப்புலிகள் சமாதான வழிக்கு வந்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். விடுதலைப் புலிகளுக்கு பொருளாதார நெருக்கடி அதுதான் பேச்சுவார்த்தைக்கு சம்மதித்துள்ளார்கள் என்று கருத்து வெளியிட்டிருக்கிறார். ஒற்றையாட்சியின் கீழ்தான் அரசியல் தீர்வென்றிருக்கிறார். தாங்கள் தேர்வு செய்த விடயங்களில்தான் அதிகாரப் பகிர்வு என வரையறுத்துக் கூறியுள்ளார்.

பாவம் ரணில் பலரைச் சமாளிக்க வேண்டிய பரிதாப நிலை அவருக்கு....

அமெரிக்காவைத் திருப்திப்படுத்த வேண்டும்

இந்தியாவைத் திருப்திப்படுத்த வேண்டும் சிங்கள பேரினவாதிகளைத் திருப்திப்படுத்த வேண்டும்.

மகாசங்கத்தினரை மகிழ்விக்க வேண்டும். எல்லாவற்றிலும் மேலாக சந்திரிகாவை சமாளிக்க வேண்டும்.

எல்லாரையும் சமாளிக்க நினைப்பவர் எந்தப் பிரச்சினையிலும் ஒரு நியாயமான தீர்வுக்கு வரமாட்டார் என்பது அனுபவஸ்தர்களின் வாக்கு....

இந்தியாவில் நின்று ஒருவிதமாய்க் கதைத்தவர், அமெரிக்காவில் நின்று இன்னொரு விதமாய்ப் பேசுகிறார்... எல்லாம்சரி பேச்சுவார்த்தையின் போது என்ன பேசப்போகிறார் என்பதுதான் இப்போதைய கேள்வி... மில்லியன்-டொலர் பெறுமதியான கேள்வி....!



## இன்னனொரு உடன்படிக்கை

சிறிலங்காவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே சுதந்திர வர்த்தக உடன்படிக்கை அடுத்தமாதத்தில் கைச்சாத்தாக உள்ளது. இதற்கென பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியின் சனாதிபதி ஜெனரல் பர்வேஷ் முஷாரப் சிறிலங்காவுக்கு வரவிருக்கிறார்.

வியாபார ஒப்பந்தத்தில் தொடங்கி பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தமாக விரிந்து பாதுகாப்பு ஒப்பந்தத்தில் முடிவடைவது சிறிலங்கா மேற்கொள்ளும் உடன் படிக்கைகளின் வரலாறாக உள்ளது. முதலில் அமெரிக்காவுடன் ஒப்பந்தம் சிறிலங்காவின் வான்-கடற்பரப்பை அமெரிக்க இராணுவம் பயன்படுத்த அனுமதித்தது.

பிறகு இந்தியாவுடனான ஒப்பந்தம் திருமலை எண்ணைக் குதங்களை குத்தகைக்கு கொடுக்கும் நிலையை ஏற்படுத்தியது.

பிறகு சீனாவுடனான ஒப்பந்தம்-பரஸ்பரம் இராணுவ பயிற்சி நடவடிக்கைகளுக்கு வழி வகுத்ததுடன் வடபகுதி கடலில் சீனா மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வகை ஏற்படுத்தியது.

இப்போது பாகிஸ்தானின் முறை...

சிறிலங்கா பாகிஸ்தானுக்கு எதைத்தானம் செய்யப்போகிறதோ...?

இந்த நாடுகள் அனைத்துமே தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தில் பயன்படுத்த சிறிலங்கா இராணுவத்திற்கு பயிற்சிகளை வழங்கியும் இராணுவ உபகரணங்களையும் ஆயுதங்களையும் கொடுத்தும் உதவி செய்யும் நாடுகள் என்பதை நினைவிற் கொள்ளுதல் நல்லது.

முஷாரப் என்ன நோக்கத்துடன் சிறிலங்காவுக்கு வருகைதரப் போகிறார்? ரணில் இந்தியாவுக்கு திருமலை எண்ணைக் குதங்களை நீண்ட காலம் குத்தகைக்கு கொடுத்த விடயம் முஷாரப் மனதில் எத்தகைய உணர்வை ஏற்படுத்தியிருக்கும்? இந்திய - பாக் உறவுகள் சீரமைக்க முடியாத நிலையில் மோதல் எப்போதும் வெடிக்கலாம் என்ற நிலையே தொடர்ந்து கொண்டிருக்கும் போது சிறிலங்கா இந்தப் பிரச்சினையில் எந்த நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பதை நாடிபிடித்துப் பார்க்கும் நோக்கமும் அவருக்கு இருக்கக் கூடும்.

கடந்த தடவை அவர் சிறிலங்காவுக்கு விஜயம் செய்து விட்டு திரும்பிய அன்றுதான் ஆட்சியைக் கைப்பற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இம்முறை வந்துவிட்டுப் போகும் அவர் என்ன ரணிலிடம் பெற்றுக்கொண்டு போகப் போகிறார்? வந்து போனபின் தான் தெரியும்

---



சந்திரிகா மீதான குற்றச்சாட்டுக்களை மீளப் பெற வேண்டுமென பொ.ஐ முன்னணியினர் தீர்மானம் எடுத்திருக்கினமென்று செய்திகள் கூறுதுபாருங்கோ...

ஏன் தெரியாமத்தான் கேட்கிறன்... சனாதிபதி மோசடிகள் -ஊழல்கள் செய்யலாமெண்டும் நிறைவேற்று அதிகார விதிமுறைகள் சொல்லுதோ... பாருங்கோ... அடிமை தும்மினால் துன்பம், ஆண்டான் தும்மினால் சந்தோ'ம் எண்டமாதிரியலலே கிடக்குது.

❖ ❖ ❖

சிறைக்கைதிகளுக்கு அமைச்சர் சந்திரசேகரன் வாக்குறுதி அளித்தாராம். உண்ணாவிரதம் தற்காலிகமாக கைவிடப்பட்டதாம்... பேப்பரிலை போட்டிருக்கினம்

இது ஒரு பல்லவிதான் பாருங்கோ... அறிக்கைவிடுவதும் வாக்குறுதிகள் வழங்குவதும் அரசியல்வாதிகளின்ரை பொழுது போக்கு பாருங்கோ... ஆனால் நடக்கிறது ஒண்டுமில்லை... அமைச்சரும் கொஞ்சக்காலம் கைதியாய் இருந்தவர் தானே... அரசியல்வாதிகள் எப்படி செயற்படுவார்கள் என்பது அவருக்கு தெரியாததல்ல....

அப்போது வாக்குறுதிகளைக் கேட்டிருப்பார்... இப்போது அதையே திருப்பி வழங்குகிறார்.... அவ்வளவுதான்.

❖ ❖ ❖

'வைகோ'வின் கைதைக் கண்டித்து பேரணியும் கொடும்பாவிளரிப்பும் நடந்திருக்காம்... பேப்பரிலை கிடக்கு...

ஒவ்வொரு வரியமும் எத்தனை பேரணி நடத்திறம்... மகசர் கொடுக்கிறம் ... கொடும்பாவிகளை எரிக்கிறம்...இது ஒரு காலாச்சாரமாகவே போட்டுது பாருங்கோ...

கொடும்பாவிகள் எரிக்க எரிக்க... கொடும்பாவிகளின் கொடுமைகளும் கூடிக் கொண்டு தான் போகுது பாருங்கோ..

பேரணிகளாலை எதையும் சாதிக்கேலாது போரணிகளாலை தான் எதையும் சாதிக்கமுடியும்... இதை நான் சொல்லேலை... வரலாறு சொல்லுது பாருங்கோ...

❖ ❖ ❖

பாராளுமன்றத்திலை ஆளும்கட்சி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மோதல் எண்டு ஈழநாதத்திலை கிடக்குது...

பாதாள உலகத்தவற்ற பாதுகாப்பிலை ஆட்சி நடத்திற வைக்குள்ள வேதாளம் பூந்திட்டுதுபோலை... எட புத்தகங்களை எடுத்தெல்லோ எறிபட்டிருக்கினம்... பள்ளிக்கூடாங்களை இராணுவ முகாம்களாக வைத்திருக்கும் படையினருக்கு உத்தரவு வழங்கிறவைக்கு புதத்தகத்தின் அருமை தெரியாது பாருங்கோ....

❖ ❖ ❖

''தனக்குப் பிடிக்காத அமைச்சர்களை பதவிநிக்கிவிட்டு அந்த அமைச்சுக்களை தன்னால் பொறுப்பேற்க முடியும் எண்டெல்லே சந்திரிகா அறிக்கை விட்டிருக்கிறா...''

''தன்ரை நிறைவேறாத ஆசையெல்லாவற்றையும் இந்த நிறைவேற்று அதிகாரம்ட எண்ட மந்திரச் சொல்லைப்பயன்படுத்தி நிறைவேற்றிக்கொள்ளப் பாக்கிறாபோலை...

சனாதிபதியாக இருந்து கொண்டு அமைச்சுப் பதவிகளிலை ஆசை வைக்கிறது அவ்வளவு நல்லதாப்படேலை...

நுணலும் தன் வாயால் கெடும் என்பார்கள். ஊரிலை... சந்திரிகாவும் தன்வாயாலேயே கெட்டு குட்டிச்சுவராகிக்கொண்டு போறா பாருங்கோ....''

❖ ❖ ❖

'எட எங்கட அநுரா பண்டாரநாயக்கவையெல்லே சந்திரிகாதனது ஆலோசகராக நியமித்திருக்கா... பேப்பரிலை செய்தியைப் படிச்ச உடனை எனக்கு வீடு கொழுத்திறவாணிக்கு நெருப்பெடுத்துக் கொடுக்கிற மந்திரி எண்ட பழமொழிதான் நினைவுக்கு வந்தது பாருங்கோ'

ஏழுவருசத்துக்குள்ள அம்மணி எத்தினை ஆலோசகரைக் கண்டிட்டா... தெரியுமே... அதுக்கு கணக்கில்லை... கடைசியா எங்கடை கதிர்காமரய்யாவும் இருந்தவரெல்லே...

இப்ப கடைசியா தம்பியைத்தான் நம்பியிருக்கிறா போலை... பரம்பரை ஆலோசனை பழுதாக இருக்காது எண்டு நினைச்சிருக்கிறா... பாருங்கோ...பாவம்!?



# இப்படிச் சொன்னார்கள்


ராஜபக்ஷ

பௌஸி போன சிரேஸ்ட உறுப்பினர்களுக் கெதிராக ஆதாரமற்ற அர்த்தமற்ற கதை அநுரா பண்டாரநாயக்கா பேசுகிறார். அண்மையில் தான் மீண்டும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் நுழைந்த இவருக்கு எங்களைப் பற்றிப் பேச எந்த உரிமையும் கிடையாது.

ராஜபக்ஸ



பொதுசன ஐக்கியமுன்னணி ஐக்கியதேசியக் கட்சியையும் ஐ.தே.கட்சி, பொ.ஐ.முன்னணியையும் தங்களால் தோற்கடிக்கப்பட வேண்டிய முதலாவது எதிரியாகக் கருதியதால் தான் விடுதலைப்புலிகளை போரில் தோற்கடிக்க முடியாது போய்விட்டது யுத்தத்தின் எந்த அரசும் முன்னுரிமை கொடுக்கவில்லை.

- S.L.குணசேகர



இராணுவத்திற்கு போதியளவு ஆட்கள் இணையமுன் வருகிறார்களில்லை... இதற்கு பொதுமக்கள் மத்தியில் இராணுவத்தில் பெண்பித்தர்கள், குடிகாரர்கள், லஞ்சஊழல் பேர்வழிகள் தான் அதிகளவில் இருக்கிறார்கள் என்ற அபிப்பிராயம் நிலவுவதே காரணமாகும். அவர்கள் தமது பிள்ளைகளை இராணுவத்தில் சேர்க்க முன் வருகிறார்களில்லை....

-பிரிகேடியர் சனத் கருணாரத்னா



1982ல் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்த ஜே.வி.பி. 1987ல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்கு வங்கியை உடைக்க அக்கொள்கையைக் கைவிட்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்தது. பின்னர் 1999 ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதாகக் கூறியது இப்போது சிஹல உறுமயவுக்குப் பயந்து மீண்டும் சிங்கள பௌத்த தேசபக்தர்களாக தம்மை இனம் காட்டுகின்றனர். இவர்களை நம்பவே முடியாது.

-திலக் கருணாரத்னா



இராணுவத்தில் இருந்து இதுவரை 35000க்கும் அதிகமானோர் தப்பியோடியுள்ளனர். இவர்கள் பெரும்பாலானோர் நாட்டில் அதிகரித்துவரும் குற்றச் செயல்களுக்கு காரணமாகியுள்ளனர். பலர் பாதாள உலகக்கும்பலுடன் தொடர்பு கொண்டவர்களாக உள்ளனர். இவர்களை இராணுவத்தில் இணைய வருமாறு மீண்டும் அழைப்பதோ, பொதுமன்னிப்பு வழங்குவதோ ஆபத்தானது. அவர்கள் ஏன் தப்பி ஓடினார்கள் என்பதை ஆராய உடனடியாக விசாரணைக்குழு ஒன்று அமைக்க வேண்டும். இல்லையேல் சிறிலங்கா முழுவதுமே விரைவில் பாதாள உலகமாகிவிடும்.

-தன்னை இனங்காட்ட விரும்பாத
ஒரு இரர்ணுவ அதிகாரி...



## வாத்தியார் வார்த்தை

சமாதானப் பேச்சு வார்த்தை பற்றிப் பேசத்தான் சிறிலங்காப் பிரதமரும் அமைச்சர்களும் நாடு நாடாய்ப் பறந்து திரியினம் எண்டு சொன்னாலும் அந்த நாட்டுத் தலைவர்களோடை பேசி முடிக்கையிலை பாதுகாப்பு உடன்படிக்கையும் ஏற்படுத்திக் கொள்வது தான் சந்தேகமாக இருக்கிறது....

சமாதானச் சேதி கொண்டு போறவை படைபலத்தை வலுப்படுத்தும் திட்டங்களோடையெல்லே திரும்பி வருகினம்...

'பாதுகாப்புக்கான சமாதானம்' எண்டு சொன்னாலும் சொல்லுவினம் ... ஆனால் ஆரைப் பாதுகாக்க இந்த சமாதானம் எண்ட சந்தேகம் எழத்தான் செய்கிறது.

## நேர்நோக்கு

# இணைந்து செயற்படுதல்

"நாட்டின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இரு பிரதான கட்சிகளும் இணைந்து செயற்படுவது அவசியம்" என்ற கருத்து சிறிலங்காவின் பிரதான கட்சிகள் இரண்டினாலும் அடிக்கடி முன் வைக்கப் படும் ஒரு விடயம். அண்மையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கைப்பை விவகாரம் எழுந்தபோது சனாதிபதி சந்திரிகாவும் அக்கருத் தையே முன்வைத்தார். அதாவது தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டிய காலகட்டத்தில் கட்சிகளிடையே முரண்பாடுகளை வளர்க்கக்கூடிய விதமாக ஐக்கிய தேசிய முன்னணி யிலுள்ள அமைச்சர்கள் சிலர் நடந்துகொள்வதாகக் குற்றம் சாட்டினார்.

இதேபோன்றதொரு குற்றச் சாட்டினை சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி மீது ஐக்கிய தேசியக் கட்சி முன்வைப்பது உண்டு. அவ்வேளை முரண்பாடுகளை வளர்த்துக் கொள்ளும் விதத்தில் அமைச்சர்கள் பேசுவதை விட சனாதிபதி சந்திரிகாவே அடிக்கடி பேசுவதும் செயற்படுவதும் வழமையாகும். அதாவது அவரின் அடிக்கடி 'சுருதி' மாறிப்பேசும் வழமைக்கு இணங்க இவ்வாறு அவர் பேசுவார். "இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எதிர்க்கட்சிகள் உதவ வேண்டும்" எனக் கூறிவிட்டு அடுத்த கணமே - "ஆனால் எதிர்க்கட்சிகளின் உதவியின்றியே எம்மால் பிரச்சி னைக்குத் தீர்வுகாண முடியும்" என அவர் கூறுவார்.

அவரது செயற்பாடுகளும் கூட அவ்வாறானதாகவே இருந்தது. ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட பலர் மீது குற்றச்சாட்டுக்களை அடிக்கடி தேவைக்கேற்றவாறு சுமத்தும் அவர் அவற்றை நிரூபிக்கவோ அல்லது அதன் மீது நடவடிக்கை எடுக்கவோ முயன்றதில்லை.

இவ்வாறான நிலையில் இனப்பிரச்சினை விவகாரத்தில் இப்பிரதான கட்சிகள் இரண்டும் இணைந்து செயற்படுவது என இணங்கிக்கொண்டு சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் பிரிட்டனின் அனுரணையுடன் ஒப்பந்த மொன்றைச்செய்து கொண்டன. ஆனால் அது நடை முறைப்படுத்தப்பட்தா? என்றால் இல்லை என்றே கூறலாம்.

அதேவேளை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண என சர்வகட்சி மாநாடு, மங்களமுனசிங்க கமிசன், பாராளுமன்றத் தெரிவுக்குழு என அமைத்ததும் உண்டு.

ஆனால் இவற்றின் பயன் எதிர்மாறானதாகவே இருந்தது. அதாவது இவையெல்லாம் வெறுமனே கூடி தேனீர் அருந்திவிட்டு கலைந்த நடவடிக்கைகளாகவே அமைந்தன. அத்தோடு, தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டியவை எவை? என்று முடிவெடுக்க முடியாத அவை வழங்கப்படக்கூடாதவை எவை என்ற முடிவையே எடுத்தன. பிரேமதாச காலத்தில் அமைக்கப்பட்ட மங்களமுனசிங்க குழுவின் முடிவு அவ்வாறானதாகவே அமைந்தது. அது மட்டுமல்லாது இந்தக் குழுக்கள், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண ஆட்சியாளர்கள் முயற்சிகளை மேற்கொள்வது போலக் காட்டிக்கொள்ளவும் தமிழ் மக்கள் மீதான ஆக்கிரமிப்புப் போரை நியாயப்படுத்தவுமே உதவின.

அதே வேளை கடந்த காலத்தில் இவ் விருகட்சி களும் இனப் பிரச்சினையை வைத்தே அதிகார அரசியலில் ஈடுபட்டன. ஆட்சியைக் கைப்பற்ற இனவாதத்தையே அவை மூலதனமாகக் கொண்டிருந்தன. இதனால் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுவிடக் கூடாது என்பதில் அக்கறையாக இருந்தன. அதேவேளை எதிர்த்தரப்பு இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு அதற்கான பெருமையை எடுத்துக் கொண்டு விடக் கூடாது என்பதிலும் உறுதியாக இருந்தன. இன்றும் அந்த நிலையில் பெரியளவில் மாற்றம் ஏற்பட்டுவிட்டதாகக் கூறிவிட முடியாது. அதாவது எந்த வழியிலேனும் இனப்பிரச்சினைக்கு ஒரு தரப்பு தீர்வு கண்டுவிட மறுதரப்பு ஒத்துழைப்பு வழங்காது என்ற நிலையே காணப்படுகிறது.

ஆனால் இவ்வாறான போக்கு இன்றைய சூழ்நிலையில் பொருத்த மானதாக அமையுமா? என்பது கேள்விக் குறியே.

இரு கட்சிகளும் கடந்த சுமார் 20 வருடங்களாக நடத்திய யுத்தம் தமிழ் மக்களை மட்டுமல்ல சிங்கள மக்களையும் பெரிதும் பாதித்து விட்டமையை மக்கள் உணர்ந்து கொண்டுள்ளனர். சமாதான முயற்சிகளில் தமக்குள்ள அக்கறையை அவர்கள் வெளிப்படுத்தி வருகின்றனர்.

உண்மையில் இலங்கைத்தீவைப் பெரிதும்பாதிக்கும் எரியும் பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்பினால் இவ்விரு கட்சிகளும் இணைந்து செயற்பட்டால் மட்டும் போதாது. அவற்றின் மனப்போக்கிலும் மாற்றம் எற்பட வேண்டும். அதாவது இனப்பிரச்சினைக்கு மூலகாரணம் என்ன? என்பதை தாம் உணர்ந்துகொண்டுள்ளதாக அடிக்கடி கூறும் அவர்கள் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு பிரச்சினைக்குத் தகுந்த தீர்வுகாண முன்வருவதே சிறந்ததாகும்.

கட்சி, இனவாத அரசியலுக்கு அப்பால் சென்று பிரச்சினைக்குத் தீர்வுகாண நேர்மையுடனும் துணிச்சலுடனும் விரைந்து செயற்பட வேண்டும். அவ்வாறில்லாதுவிடின் இணைந்து செயற்பட்டாலும் பயனற்றதாகவே இருக்கும்.

வேலவன்